ஞானம் சென்ரர்
இலங்கை
45 நிமிடம்
(விபரங்கள் 21-ம் பக்கம்)



Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 5 28 ஜனவரி — 03 பெப்ரவரி 1999 முழக்கம்: 211



Gnanam Center





ஐரோப்பா எங்கும் எமது கிளை ஸ்தாபனங்கள் ஆரம்பமாகியுள்ளன. விபரங்கள் உள்ளே


மாங்குளம் - ஒட்டுசுட்டான்

# உளவுத்துறை அவசர எச்சரிக்கை

* கற்குளத்தில் தளபதி கருணா
* கோடாலிக்கல்லில் சின்னக்கடாபி
* புலிகளின் புதிய நடவடிக்கைபற்றி அவசர மாநாடு




(25.01.99)

வன்னியில் மீண்டும் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றிற்கு புலிகள் தயாராகி வருகின்றனர் என இராணுவ உளவுத்துறை அறிவித்துள்ளது. மாங்குளம் — ஒட்டுசுட்டான் இராணுவ நிலைகளே புலிகளின் பெரும் தாக்குதல் ஒன்றிற்கு பலியாகக் கூடும் எனவும் இதற்கான முஸ்தயாரிப்புப் பணிகளை புலிகளின் போர்முனைத் தளபதி கருணா மேற்கொண்டுவருகிறார் எனவும் அவ் அறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வன்னி கற்குளத்தை அண்டிய பகுதிகளில் தளபதி கருணா நிலைகொண்டிருப்பதாகவும் இராணுவ உளவுத்துறை கூறியுள்ளது.

இது தொடர்பான அவசர

(☞ 2ம் பக்கம்)

# வாக்குச்சாவடிகளில் பெரும் வன்முறை வாக்குப்பெட்டிகள் அபகரிப்பு

(25.01.99)

சிறீலங்காவின் வடமேல் மாகாணசபை (வயம்பா) தேர்தல் வாக்களிப்புகள் பெரும் வன்முறைகளுடன் இன்று நடைபெற்று முடிவடைந்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவுக் குண்டர்களும், ஐதேகட்சி குண்டர்களும் மாறி மாறி வன்முறைகளில் ஈடுபட்டனர். புத்தளம், சிலாபம், குருநாகல் ஆகிய பிரதேசங்களில் பெரும் கலவரமாக காணப்பட்டன. சிலாபப் பகுதியில் ஐதேக உறுப்பினர் ஒருவர் சுடப்பட்டுள்ளார்.

குருநாகல் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடி ஒன்றின் மீது வாகனமொன்றில் வந்த அரசாங்க ஆதரவு குண்டர்கள் அங்கிருந்த பொலிசார், மற்றும் தேர்தல் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தி விட்டு கள்ளவாக்குகளை செலுத்திவிட்டு சென்றுள்ளனர்.

இதைப்போன்று போக்குவ

(☞ 2ம் பக்கம்)

# ‘துரோகிகளாக, கைப்பொம்மைகளாக நாம் இருக்கப் போவதில்லை’

– ஈழமுரசிற்கு தமிழர் பணிக்குழு தலைவர்

நேர்மையையும், நீதியையும் எடுத்துரைப்பதற்கு கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழு ஒரு போதும் தயங்கமாட்டாது. அரசிற்கு ஆதரவான கைப்பொம்மைகளாக செயற்படுபவர்களும் நாமல்ல. நீதி எமது போராட்டம் பக்கம் இருக்கின்றபோது நாம் ஏன் தயக்கவேண்டும்?

மேற்கண்டவாறு கொழும்பு வாழ் தமிழர் பணிக் குழுவில் தலைவர் திருஏன்.விஜயசிங்கம் ஈழமுரசிற்கு தெரிவித்தார்.

சிறீலங்காவிலுள்ள பல நாட்டு தூதரகங்களை சந்தித்து வடக்கு—கிழக்கு தமிழ் மக்களின் இன்றைய நிலையை இவ் அமைப்பின் தூதுக் குழுவினர் எடுத்துரைப்பது தொடர்பாக ஈழமுரசு வினாவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

★ அரசு எங்களை நீண்ட காலமாகவே ஏமாற்றி வருவதுடன் சர்வதேச ரீதியில் தமிழ் மக்களைப் பற்றி பிழையான பிரச்சாரங்களையும் மேற்கொள்கிறது.

(☞ 2ம் பக்கம்)

மாங்குளம்

# இராணுவம் பின்நோக்கி விரட்டப்பட்டது!

(25.01.99)

மாங்குளம் பகுதி இராணுவ நிலைகளிலிருந்து முன்னோக்கி நகர முற்பட்ட சிறீலங்கா இராணுவ அணிகள் மீது விடுதலைப் புலிகள் முறியடிப்புத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். மூன்று மணிநேர சமரின் பின் இராணுவம் பின்வாங்கி முன்னைய நிலைகளுக்குள் புகுந்து கொண்டுள்ளது.

கடந்த சனியன்று காலை எட்டு மணியளவில் தமது முன்னரங்க நிலைகளிலிருந்து கனரக ஆயுத தளவாடங்கள் சகிதம் இராணுவத்தினர் முன்னோக்கி நகர முற்பட்டனர். இவர்களை இடைமறித்து பகல் 11 மணி

(☞ 2ம் பக்கம்)

## 99ம் ஆண்டினை சிறுவர் அபிவிருத்திக்காக புனர்வாழ்வுகழகம் பிரகடனம்

“இவ்வாண்டினை தமிழீழ சிறுவர்களின் அபிவிருத்தி ஆண்டாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரகடனப்படுத்தியுள்ளது.

சிறீலங்கா அரசின் மிக மோசமான இன அழிப்பு பொருளாதார தடைகள், இராணுவ நடவடிக்கைகள் ஆகியன தமிழீழத்தின் இளம் சந்ததியை மிக மோசமாகப் பாதித்து வருவதனால் எதிர்கால நலன்கருதி புனர்வாழ்வுக் கழகம் இப் பிரகடனத்தை மேற்கொண்டுள்ளது.

இப் பிரகடனத்தினூடாக பல்வேறு சிறுவர் நல அபிவிருத்தி செயற்திட்டங்களில் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபடவுள்ளது.

# முல்லையில் குண்டுவீச்சு மாணவன் பலி

(25.01.99)

சிறீலங்கா வான்படையின் கிபீர் யுத்த விமானங்கள் முல்லைத்தீவு பகுதியில் நேற்றுமாலை வெறித்தனமான குண்டுவீச்சுக்களை நடத்தியதில் மாணவர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் எழுவர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் நால்வர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

(☞ 2ம் பக்கம்)

# கடற்புலிகள் கிழக்கு ஐரோப்பா ஆயுதங்களே!

கடற்புலிகளின் படகுகளில் பொருத்தப்பட்டுள்ள கனரக ஆயுதங்கள் கிழக்கைரோப்பிய ஆயுதங்களே என சிறீலங்கா கடற்படை வட்டாரங்களை ஆதாரம் காட்டி ‘தி ஐலண்ட்’ செய்தி வெளியிட்டுள்ளது.

1500 மீற்றர் இடைவெளிக்குள் அகப்படும் இலக்குகளை அழிக்கும் ஆற்றல் மிக்க புதிய ரக ஆயுதங்களை புலிகள் சமீபத்திலேயே பெற்றனர் எனத் தெரிவித்துள்ள ‘தி ஐலண்ட்’ குறைந்தது 24 புதியரக 23 மிமீ கனரக துப்பாக்கிகளை புலிக

(☞ 2ம் பக்கம்)


உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது

Kumars Shop
S. A. R. L.

80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore Exchange Co.

90, Bld. Rochechouart,
75018 Paris. Mo: Anvers ou Pigalle
Tel: - Fax: 01 42 23 03 10
ou 01 42 59 53 91

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 393 673 110 (95801491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிர்வாக ஆசிரியர்:
அமரர் க. சிறீந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
Tel.: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
**Leama**
**Tel: 0208 2053650**
**Fax: 0208 2053651**

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Meller vej - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerei: Frankreich.
Tel: 0796350216

கனடா:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07867874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
தமிழ்க்கடை
Tel: 076 5425804

# தணிக்கையை நீக்க 'சரத்து 19' கோரிக்கை

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் சிறிலங்கா அரசினால் அமுல் செய்யப்பட்ட செய்தித் தணிக்கையை உடனடியாக நீக்கவேண்டுமென பிரித்தானியாவை மையமாகக் கொண்டிருக்கும் 'Article 19' (சரத்து 19) என்ற அமைப்பு சிறிலங்கா அரசினைக் கோரியுள்ளது.

50 வருடகாலமாக சிறிலங்காவில் செய்தித் தணிக்கை, நெருக்கடி என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரின் உண்மையான நிலைமைகளையும், விளைவுகளையும் மக்களுக்கு மறைப்பதற்காக அவசரகாலச் சட்ட விதிகளை அரசும், இராணுவமும் பயன்படுத்துவதாகவும் இவ் அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

யுத்தத்துடன் தொடர்புடைய செய்திகளை தணிக்கைசெய்வதற்கு ஒருவரை நியமித்த அரசின் செயல் செய்திகளின் சுதந்திர தன்மைக்கு குந்தகம் கொண்டது.

அரசின் கொள்கைகளுக்கு எதிர்கருத்துக்களைத் தெரிவிக்கும் செய்தியாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் அரசின் செயல் கண்டிக்கத்தக்கது எனவும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

## கிழக்கில் கடும் குளிர்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் பிரதேசங்களில் தற்பொழுது மிக மோசமான குளிர் சீதோஷ்ண நிலை இருந்துவருகிறது. அதிகாலை வேளைகளில் இப்பிரதேசங்களில் பனிப்புகாருடன் கூடிய குளிர் காணப்படுவதால் மக்களின் அன்றாட கடமைகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கடுமையான குளிர் காரணமாக, பயிர்ச்செய்கைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## முல்லையில்...

வர்கள். மாலை 5.30 மணியளவில் திடீரென இப் பகுதி வான்பரப்பில் தோன்றிய விமானங்கள் குடிமக்களின் வதிவிடங்களை நோக்கி குண்டுகளை வீசியபோதே, குண்டுகளில் ஒன்று வீடொன்றில் வீழ்ந்து வெடித்ததில் அங்கிருந்த மாணவர் ஒருவர் உடல்சிதறி பலியானதுடன் மேலும் எழுவர் படுகாயமடைந்தனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## உளவுத்துறை...

உட்கற்றறிக்கையொன்றை வெளியிட்டுள்ள உளவுத்துறை புலிகள் தம்மிடம் உள்ள சுமார் 400 போர்க்கைதிகளையும் முள்ளியவளையிலிருந்து மன்னார் நொச்சிக்குடாவுக்கு இடம் மாற்றியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும் சின்ன கடாபி தலைமையிலான புலிகளின் விமான எதிர்ப்பு படைப்பிரிவொன்று நெடுங்கேணி பகுதிகளிற்கு அருகே கோடாலிக்கல்லு என்னும் இடத்தில் நிலையெடுத்துள்ளது எனவும் இவ் அணியானது நெடுங்கேணி - ஒட்டுசுட்டான் பகுதிகளை மையமாகக்கொண்டு செயற்படும் இராணுவ உலங்கு வானூர்திகளை தாக்கும் நோக்கம் கொண்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் வாரம் இராணுவத் தளபதிகள் ஜனாதிபதி சந்திரிகாவை சந்திக்கும் போது புலிகள் தோற்றுவித்துள்ள இவ் அபாய நிலை தொடர்பாகவும் இதற்கெதிராக தமது புதிய நடவடிக்கை தொடர்பாகவும் ஆராய உள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## துரோகிகளாக...

விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்களின் ஆதரவு கிடையாது அவர்கள் பயங்கரவாதிகள் என்பதும் அப் பிரச்சாரங்களின் நோக்கம்.

நாம், அரசு தெரிவித்த அக் கருத்துக்கள் பிழையானவை என்பதையும் அரசிடம் நேர்மைத் தன்மை இல்லை என்பதையும் ஆதாரங்களையும் சந்தித்து விளக்கிவருகிறோம்.

**ஈழமுரசு:** உங்கள் கருத்துக்கள் அக்கறையுடன் செவிமடுக்கப் பட்டனவா?

★மிகவும் அக்கறையுடன் செவி மடுத்தார்கள். நாம் சகலரையும் சந்திக்கிறோம். இந்திய தூதுவரையும், கனடிய தூதுவரின் ஆலோசகரையும் சந்தித்தோம். ஐரோப்பிய சமூகத்தையும் சந்திக்கவுள்ளோம். நீதி எம்பக்கம் இருக்கும்போது நாம் ஏன் தயங்க வேண்டும்.

**ஈழமுரசு:** அரச பிரச்சாரத்திற்கு எதிர் பிரச்சாரம் செய்வது அரசிடமிருந்து அச்சுறுத்தலை தோற்றுவிக்காதா?

★சமாதானத்திற்கான பாதையை விலகி அரசு பிழையான வழியில் செல்கிறது என்பதை நாம் தெளிவுபடுத்துகிறோம். பயப்பூச்சாண்டிகளுக்கு அஞ்சி நாம் வாழாதிருக்க முடியாது. அரசிற்கு வால் பிடிப்பவர்கள், கைப்பொம்மைகள் வேண்டுமானால் அப்படியிருக்கலாம். புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் நான் இந்தக் கட்டத்தில் இதைத்தான் கூற விரும்புகிறேன். நீதிக்கும் நேர்மைக்குமாக போராட, அதற்கு துணைபோக ஒருபோதும் தயங்கக்கூடாது.

இவ்வாறு அவர் மேலும் ஈழமுரசிடம் தெரிவித்தார்.


## பிறந்ததின வாழ்த்து



**செல்வன் ஆதவன் அருமைத்துரை**
**06.02.1999**

வரணி-நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி அருமைத்துரை சிவபுஷ்பம் தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஆதவன் தனது முதலாவது பிறந்த தினத்தை ஜேர்மனியிலுள்ள தமது இல்லத்தில் மிக அமைதியாக கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா-அம்மா, ஆசை அக்காமார் அனுசியா, பிரியங்கா - இலங்கையிலுள்ள அம்மம்மா - அப்பம்மா, நேசன் மாமா, மற்றும் மாமாமார்-அத்தைமார், மைத்துனர்மார், மைத்துனிமார் சுவிசிலுள்ள மாமா-அத்தை, மைத்துனி, மைத்துனர் லண்டனிலுள்ள சித்தப்பா அன்ரி அக்கா, தம்பி, மற்றும் ஜேர்மன் தாத்தா, டென்மார்க் தாத்தா-அம்மம்மா, அன்ரி, தம்பிமாமா, மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று சகலகலா வல்லவனாக பல்லாண்டு காலம் வாழ்க வளர்க என வாழ்த்துகின்றனர்.

கி. அருமைத்துரை,
Barlach Str-10
69168-Wiesloch, Germany.


(1ம் பக்கத் தொடர்ச்சி)
## வாக்குச்சாவடி...

ரத்து அமைச்சர் பௌசியின் மகன் சக குண்டர்களுடன் கற்பிட்டிப்பகுதியிலுள்ள வாக்குச் சாவடியொன்றினை முற்றுகையிட்டுள்ளதாக சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சில வாக்குச் சாவடிகளிலிருந்து வாக்குப் பெட்டிகள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன. வடமேல் மாகாணத்திலுள்ள முந்தல், உடப்பு ஆகிய பகுதிகளில் வசிக்கும் தமிழ் மக்கள் பீதி காரணமாக வாக்களிக்கச் செல்வதை தவிர்த்துக் கொண்டுள்ளனர். வாக்களிக்கச் சென்றவர்களும் தமது வாக்குகள் ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்ததை அறிந்து வீடு திரும்பியுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## கடற்புலிகள்...

ளின் படகுகளில் பொருத்தப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளது.

புலிகள் தமது இரகசிய மையங்களில் நிருமாணம் செய்யும் படகுகளை நவீன ஆயுதங்களைப் பொருத்தி பயன்படுத்துகின்றனர் எனவும் படகுகள் கனரக உலோகங்களால் நிருமாணிக்கப்பட்டவை எனவும் கூறப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## இராணுவம்...

வரை புலிகளின் சிறப்புப் படையணிகள் தாக்குதல்களை நடத்தின. இத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் விபரங்கள் தெரியவரவில்லை.

பின்வாங்கி ஓடிய படையினர் கொல்லப்பட்ட தமது சகா ஒருவரின் உடலையும், சிலரக ஆயுதங்களையும் விட்டுவிட்டு சென்றுள்ளனர்.

இதேவேளை மாங்குளத்தின் மேற்கு நிலைகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் மீது புலிகள் கனரக ஆயுதங்களாலும், எறிகணைகளாலும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதன்போது 30ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயங்களுக்கு உள்ளாகி அவசர அவசரமாக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு படையினர் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

மாங்குளம் நிலையில் இருந்து முன்னேற கடந்த சில வாரங்களாக சிறிலங்கா படைகள் முயற்சித்துவருவதும் அம் முயற்சிகள் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.


# ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900Frs. |
| Delhi | - | 3,900Frs. |
| Bangkok | - | 3,400Frs. |
| Colombo | - | 3,900Frs. |
| Singapour | - | 3,980Frs. |
| Madras | - | 4,300Frs. |
| Londres | - | 790Frs. |
| New york | - | 2,300Frs. |
| Montreal | - | 2,800Frs. |
| Oslo | - | 2,010Frs. |
| Toronto | - | 2,800Frs. |
| Nepal | - | 4,820Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

# சிறீலங்கா விமான படையினரின் புதிய யுக்தி

கொழும்பு, யாழ்ப்பாணத்திற்கான பயணிகள் விமான சேவை என்ற பெயரில் அதிகளவான துருப்புக்களை இடமாற்றம் செய்யும் யுக்தியை சிறீலங்கா விமானப் படையினர் கையாண்டுவருகின்றனர். கடந்த 22ம் திகதி முதல் யாழ். கொழும்பு விமானப் போக்குவரத்து சிறீலங்கா விமானப் படையின் 'ஹெலிருர்ஸ்' பகுதியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விமானமூலம் யாழ்.செல்ல விண்ணப்பிக்கும் பயணிகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தினமும் விமானசேவையை நடாத்துவதா இல்லையா என்பதை விமானப் படையினர் முடிவு செய்வார்கள் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 55 பேரை ஏற்றிச்செல்லக்கூடிய விமானம் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது. பயணிகளோடு பயணிகளாக படையினரும் இணைந்துசெல்லவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒரு வழிப்பயணத்திற்கு 3000 ரூபாவும், இரு வழிப்பயணத்திற்கு 5000 ரூபாவும் அறவிடுவதெனவும் விமானப் படையினரால் முடிவு செய்யப்பட்டுள்ளது. விமானசேவை நடாத்துவது தொடர்பாக கடந்த வியாழனன்று பலாலி இராணுவத் தளத்தில் இராணுவ அதிகாரிகளுக்கிடையே விசேட கூட்டமொன்றும் நடைபெற்றுள்ளது. இது ஒருபுறமிருக்க விமானப்படை விமானங்கள் மூலம் மக்களை ஏற்றிச்செல்வது சட்டத்திற்கு முரணானது என லயன் எயர், மொனரா எயர் ஆகிய இரண்டு தனியார் போக்குவரத்துச்சேவை நிறுவனங்களும் தெரிவித்துள்ளன.

# பிரேமதாசாவின் மறுபிறவி மீது ஆய்வுகள்

கொழும்பு ஆமர் வீதியில் உள்ள பிரேமதாசாவின் நினைவுத் தூபிக்கு, பிரேமதாசாவின் மறுபிறவி எனக் கூறப்படும் சிறுவன் கடந்தவாரம் அழைத்துச் செல்லப்பட்டபோது, அச் சிறுவன் விக்கிவிக்கி அழ ஆரம்பித்தான். பின்னர் சென்செபஸ்ரியன் வீதியில் உள்ள 'சுச்சரித்த' மண்டபவாசலுக்கு காரில் அழைத்துச்சென்று விடப்பட்டபோது சிறுவன் நேரே மண்டபத்திற்குள் சென்றிருக்கின்றான்.

பிரேமதாசாவின் மறுபிறவி எனக் கூறப்படும் இச்சிறுவன், கொழும்புக்கு அழைத்துவரப்பட்டு பேராசிரியர் கிறன்வில தர்மவர்த்தனாவினால் மறுபிறவி தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோது இச் சம்பவங்கள் நடைபெற்றதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இதேநேரம் தமக்கு கொலைப் பயமுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் மிரட்டல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதாகவும் சிறுவனின் தந்தையார் கூறியுள்ளதுடன், தமக்குப் பாதுகாப்புத் தருமாறு ரதவத்தையிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

# 100 நாட்களை கடந்து தொடரும் உண்ணாவிரதம்

மல்லாவியில் உள்ள ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு முன்னால் இடம்பெயர்ந்த மக்கள் நடாத்திவரும் உண்ணாவிரதப் போராட்டம் 100 நாட்களைக் கடந்த நிலையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இடம்பெயர்ந்த மக்கள் அனைவருக்கும் முழுமையான நிவாரணம் கிடைக்கும்வரை தமது உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என உண்ணாவிரதிகள் ஒட்டுமொத்தமாகத் தெரிவித்துள்ளனர். சர்வதேச நிறுவனங்கள் தமக்கு ஏற்பட்டுள்ள அநீதி குறித்து கவனம் எடுக்கவேண்டும் எனவும், சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுத்து முழுமையான நிவாரணத்தைப் பெற்றுத் தரவேண்டும் எனவும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டோர் தெரிவித்துள்ளனர்.

# மூவாயிரம் பெண் படையினரை திரட்ட சிறீலங்கா ஏற்பாடு

இராணுவத்தில் மூவாயிரம் பெண்களைச் சேர்த்துக்கொள்வதற்கு நாடளாவிய ரீதியில் சிறீலங்கா அரசு நேர்முகப் பரீட்சைகளை நடாத்திவருகிறது. கடந்த 21ம் திகதி ஆரம்பமான இந் நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 29ம் திகதிவரை நடாத்தப்படவுள்ளன. ஒவ்வொரு பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் நடாத்தப்படும் இந் நேர்முகப் பரீட்சையில் இராணுவ அதிகாரிகள் ஆட்களைத் திரட்டுகின்றனர்.

ஆயினும் நேர்முகப் பரீட்சைகளுக்கு மிகக் குறைந்தளவான பெண்களே வருகை தருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடுமையான ஆளணி பற்றாக்குறையில் சிறீலங்காப் படையினர் தற்பொழுது இருப்பதால், பெண்களைத் திரட்டுவதற்கு முடிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டி பகுதியில் புலிகள்?

புத்தளம் கற்பிட்டிப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடமாடுவதாக சிறீலங்கா இராணுவத்தினருக்குத் தகவல் கிடைத்துள்ளதையடுத்து அப்பகுதியில் தீவிரமான தேடுதல்களை படையினர் மேற்கொண்டுவருகின்றனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் இப்பகுதி கடற்கரையில் சுமார் 25, 30 வரையிலான விடுதலைப் புலிகள் இராணுவ சீருடையுடன் காணப்பட்டதாகவும் அவர்கள் தம்மை விசாரணை செய்து எவ்வித துன்புறுத்தல்களும் மேற்கொள்ளாது விடுவித்ததாகவும் இப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை கற்பிட்டிப் பகுதியில் விடுதலைப் புலிகள் ஊடுருவியதானது வடமேல் மாகாணசபைத் தேர்தல்களை குழப்பும் நோக்குடனேயே என சிறீலங்காப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

# புலிகளுக்கு உதவவேண்டாம்! அவுஸ்திரேலியாவிடம் கதிர்காமர்

(24.01.1999)

விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்கவேண்டாம் என சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவுஸ்ரேலிய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். கடந்த வியாழன் அவுஸ்திரேலியா சென்றிருந்த கதிர்காமர் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சருடன் தொடர்ந்து பேசிய கதிர்காமர், புலிகள் பல்வேறு அமைப்புக்களினூடு தமக்குத் தேவையான பணத்தைச் சேகரித்து வருகின்றார்கள். இப் பணம் பயங்கரவாத நடவடிக்கைக்கே பயன்படுகிறது. இதை அவுஸ்திரேலிய அரசு பாரதூரமான விடயமாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். கதிர்காமரின் கோரிக்கைக்கு பதிலளித்த அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர், பயங்கரவாத நடவடிக்கைக்கு பணம் சேகரித்தால் அதற்கு நடவடிக்கை எடுப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மறுநாள் மதிய போசன விருந்தொன்றிற்கு பலத்த பாதுகாப்புடன் பல்கலைக்கழகமொன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டார் கதிர்காமர். அங்கு கூடிநின்ற நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் கதிர்காமரின் அவுஸ்திரேலிய வருகையையும், சிறீலங்காவின் இனப் படுகொலையையும் கண்டித்து போராட்டம் நடாத்தியுள்ளனர். 'தமிழினப் படுகொலையை நிறுத்து, உணவுத் தடைகளை நீக்கு' போன்ற பல்வேறு சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு மக்கள் கோசங்களை எழுப்பி இப் போராட்டத்தை நடாத்தியுள்ளனர்.

# அமைதியை ஏற்படுத்த நாம் தயார் - நோர்வே அரசு

(24.01.1999)

இலங்கைத் தீவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு உதவ நாம் தயாராக இருக்கிறோம். இவ்வாறு கொழும்பு வந்த நோர்வே வெளிவிவகார அமைச்சின் சர்வதேச அபிவிருத்தி, மனித உரிமைகளுக்கான இணைச் செயலாளர் திருமெலி ஜூன்டே தெரிவித்துள்ளார். சிறீலங்காவின் பாராளுமன்ற தூதுக்குழு இவரைச் சந்தித்தபோதே மேற்படி கருத்தினை அவர் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது இங்கு நிலவிவரும் சூழ்நிலை மனித உரிமைகள் செயற்பாடு குறித்து அதிக அக்கறைகொள்ள வைக்கிறது. இச் சூழ்நிலை நீடிக்குமானால் அபிவிருத்தியைக் காண இயலாது. நோர்வே அரசு இந்த விடயத்தில் எந்த தீர்வினையும் புகுத்த விரும்பாவிடினும் பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுமாறு அழைக்கப்பட்டால் நாம் உதவவே தயாராக இருக்கிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் நோர்வேயின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட நோர்வே அதிகாரிகள் அடங்கிய தூதுக்குழு ஒன்று கடந்த 22ம் திகதி மட்டக்களப்புப் பிரதேசத்திற்கு சென்றிருந்தது. அங்கு நிலைமைகளை அவதானித்த நோர்வேக் குழு பிரதேச அபிவிருத்திக்கென தம்மால் கொடுக்கப்படும் நிதியினை சிறீலங்கா அரசாங்கம் ஒழுங்கான முறையில் வழங்காதமையை அவதானித்ததுடன், அதுபற்றி கவலையும் தெரிவித்துள்ளனர்.

# தேர்தல் வன்செயல்களை ஆட்சேபித்து மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

சிறீலங்காவின் வடமேல் மாகாணசபைத் தேர்தலை யொட்டி நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களிற்கு கண்டனம் தெரிவித்து குருநாகல் பகுதியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றினை நடாத்தியுள்ளனர். குருநாகலில் பல மைல் தூரம் நடைபெற்ற இவ் ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளே வன்முறைகளுக்குக் காரணம் எனவும் இவ்வாறான கட்சிகளை மக்கள் நிராகரிக்கவேண்டும் எனவும் ஆர்ப்பாட்டம் நடாத்திய பொதுமக்கள் கேட்டுக்கொண்டனர். இப் பேரணி காரணமாக குருநாகல் பகுதி போக்குவரத்து சில மணி நேரம் ஸ்தம்பிதமடைந்திருந்தது. இவ்வூர்வலத்தில் பெருமளவான மதத் தலைவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# கொழும்பில் துப்பாக்கிச் சூடு! ஒருவர் பலி

கொழும்பு பாலத்துறைப் பகுதியில் கடந்த 21ம் திகதி மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

பாலத்துறை மாதம்பிட்டி வீதியில் மாலை 5.30 மணியளவில் வீதியில் நின்ற மூவர் மீது திடீரென மோட்டார் சைக்கிளில் வந்த சில ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுவிட்டனர். பாதாள உலகக் கோஷ்டியினர் தான் இத்துப்பாக்கிச் சூட்டிற்கு காரணமாக இருக்கலாமென சிறீலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.


# லலித் கொலை வழக்கு ஒத்திவைப்பு

சிறீலங்காவின் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் கொலை தொடர்பாக குற்றம்சாட்டப்பட்ட எழுவரில் நால்வர் கடந்த 20ம் திகதி கொழும்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இவ்வழக்கில் பிரதான எதிரியாகக் கருதப்படும் சொத்தி உபாலி இனந்தெரியாதவர்களால் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து, குற்றப் பத்திரிகையில் சில திருத்தங்கள் செய்யவேண்டியிருப்பதால் வழக்கை ஒத்திவைக்கும்படி அரச தரப்பு சட்டவாதி கேட்டுக்கொண்டார்.

இவ்வழக்கு அடுத்த மாதம் 17ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.


# ரவி வாகனசேவை

உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்புகொள்ள
வேண்டியது
தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689



# காதலியைக் கொன்றவருக்கு மரண தண்டனை!

(வன்னி, 24.01.99)

பெண் ஒருவரைக் கொன்றவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. 03.12.98 அன்று கிளிநொச்சி ஆனந்த நகரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீட்டுக் கிணற்றில் சுமார் 22 வயதுடைய பெண்ணொருவரின் சடலம் காணப்பட்டது கிடைக்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து, அக்கராயன் காவல் பணிமனையினரால் இந்த சடலம் கிணற்றில் இருந்து எடுக்கப்பட்டது.

பின்னர் இவர் அக்கராயன் பிரதேசத்தைச் சேர்ந்த லோகநாதன் மயூரதிபா என பெற்றோரால் அடையாளம் காணப்பட்டார். இதனைத் தொடர்ந்து விசாரணைகள் மிகத்துரித கதியில் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து இடைவிடாது மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணையின் மூலம் கொலைக் குற்றவாளியான நாகையா கோபிநாத் என்பவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு விசாரணையின்போது, கொல்லப்பட்டவரான மயூரதிபா குற்றவாளியான கோபிநாத் என்பவரைக் காதலித்துள்ளார். ஆனால் கோபிநாத் மயூரதிபாவை உண்மையில் காதலிக்காது, காதலிப்பது போல் நடித்து இவருடன் நெருக்கமான தொடர்பினை வைத்திருந்தார். மயூரதிபா தன்னை திருமணம் செய்யுமாறு வற்புறுத்தியுள்ளார். இவருக்கு அவரைத் திருமணம் செய்வதற்கு எவ்வித நோக்கமும் இருக்கவில்லை. தனது சுயரூபம் வெளிவரப் போகின்றதை அறிந்த கொலையாளி பெண்ணைத் திருமணம் செய்வதாக அழைத்துச் சென்று கிளிநொச்சி ஆனந்தநகர் பிரதேசத்தில் உள்ள கிணறொன்றில் அடித்துவீழ்த்தி கொலை செய்துள்ளார். கொலையுண்ட பெண்ணின் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளார். விசாரணையின்போது இந்த நகைகளும் மீட்கப்பட்டு தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டன. தகுந்த சாட்சியங்களுடன் இக்கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்ட பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால் இக்கொலைக் குற்றவாளிக்கு அக்கராயன் பிரதேசத்தில் வைத்து மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என விடுதலைப் புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

# பெருமாளுக்கு ராசிக்குழு பாதுகாப்பு

தற்பொழுது கொழும்பு தெஹிவளையில் உள்ள இல்லம் ஒன்றில் தங்கியிருக்கும் முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாளுக்கு சிறீலங்கா இராணுவத்தின் துணைப் படையாக இயங்கும் ராசிக் குழுவைச் சேர்ந்தவர்களே பாதுகாப்பு வழங்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் வரதராஜப் பெருமாள் எங்கு தங்கியிருக்கிறார் என்ற விபரம் எதனையும் தெரிவிக்க ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவினர் மறுத்திருக்கின்றனர்.

கட்சி முக்கியஸ்தர்கள் பலரையும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் பலரையும் சந்தித்துப் பேசிய வரதராஜப்பெருமாள் விரைவில் யாழ்ப்பாணத்திற்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்பை உலுக்கிய மின்மாற்றித் தகர்ப்புகள்! 250 தமிழர்கள் கைது

கொழும்பு நகரில் புறக்கோட்டை, கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் மின்மாற்றிகள் தாக்கப்பட்டதையடுத்து பொலிசாரும், இராணுவத்தினரும் இணைந்து பாரிய தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். புறக்கோட்டை, கொட்டாஞ்சேனை, கிராண்ட்பாஸ், மருதானை ஆகிய பகுதிகளில் இத் தேடுதல்வேட்டைகள் நடாத்தப்பட்டன. சுமார் 250 இற்கும் அதிகமான தமிழர்கள் இத் தேடுதலின்போது கைது செய்யப்பட்டனர்.

கொட்டாஞ்சேனைப் பகுதியில் கடந்த 23-ம் திகதி அதிகாலை ஏக காலத்தில் மூன்று மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டதால் கொட்டாஞ்சேனையில் பல பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன. புறக்கோட்டைப் பகுதியில் இரு உப மின் நிலையங்கள் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டு 6 நாட்களின் பின்னர் இம்மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டதானது, கொழும்புப் பொலிஸ் வட்டாரங்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. கொட்டாஞ்சேனை ஜம்பட்டா வீதியில், வாசலை வீதியில், ஜிந்துப்பிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள மின்மாற்றிகளே அதிகாலை 4.20 மணியளவில் ஏக காலத்தில் பாரிய சத்தத்துடன் வெடித்துள்ளன. இக்குண்டுவெடிப்பினால் பொது மக்கள் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாதபோதிலும் சிறீலங்கா மின்சார சபைக்கு பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

# விறகுக்காக களவாடப்பட்ட தேவாலயச் சிலுவை!

சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலயத்தின் சிலுவை மரம் திருடர்களால் வெட்டிச் செல்லப்பட்டுள்ளது. 30 அடி நீளமான இந்தச் சிலுவைமரத்தின் 20 அடி நீளப்பகுதியை திருடர்கள் விறகுக்காக வெட்டிச் சென்றிருக்கின்றனர். அத்துடன் ஆலயத்தினுள் உண்டியலும் உடைக்கப்பட்டு பணம் களவாடப்பட்டுள்ளது. சிலுவை மரம் வெட்டிச் செல்லப்பட்டது குறித்து ஆலய பங்கு மக்கள் மிகுந்த வேதனை அடைந்துள்ளனர்.

# காரைநகரில் 15 அடி நீளச்சுறா

யாழ்ப்பாணம் காரைநகரில் 15 அடி நீளமான சுறாமீன் ஒன்று அப்பகுதிக் கடலில் பிடிக்கப்பட்டுள்ளது. இச்சுறா இருபதினாயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இச்சுறாமீனைப் பார்வையிட நூற்றுக்கணக்கானவர்கள் மூளாய்ச் சந்தைக்கு வந்திருந்தனர். இச்சுறாமீனின் வயிற்றுக்குள் 15 குட்டிகள் காணப்பட்டதாகவும் அவை ஒவ்வொன்றும் 200 ரூபா விதம் விற்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதிக்காக

தமிழர் நலன்புரிச்சங்கம்–சொலத்தூண்
நடத்தும் இரண்டாவது ஆண்டு
சுவிஸ் தழுவிய

பரதநாட்டியப் போட்டியும்
எழுச்சி நடனப்போட்டியும்


சிறப்புவிருது
99ம் ஆண்டுக்கான 'நாட்டியமயில்' விருது

காலம்:
22.05.99 சனி காலை 10.00 மணி
23.05.99 ஞாயிறு காலை 10.00 மணி

இடம்:
Rest. Flosserhof
Emmenstr. 4, 4562 Biberist (so)

தொடர்புகளுக்கு:
032/652 05 32, 032/685 65 35,
032/685 48 87 & 076/396 31 91

உணர்வோடு உறவாடும் தாயக உறவுகளே உங்களுக்காக
இரு நாட்கள் சலங்கைகளின் சங்கமம்.



# அவலங்களும் அனர்த்தங்களும் வாழ்வாக உள்ள தமிழினம் அழிந்துகொண்டிருக்கிறது

## குடாவில் சர்வ மதப்பிரார்த்தனை அமைப்பு அறிக்கை

தமிழ் மக்கள் நீதியான சமாதானத்துடனும் கௌரவத்துடனும் வாழவேண்டும் எனவும், செம்மணிப்புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கையை துரிதமாக்கும்படியும் கோரி யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இணையமும் மனித நேய அமைப்புக்களும் இணைந்து கடந்த ஞாயிறன்று யாழ்.மனித உரிமை ஆணைக் குழு அலுவலகம் முன்னால் நடாத்திய சர்வமதப் பிரார்த்தனையின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இராஜதந்திரிகளுக்கும், சர்வதேச சர்வமதத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இவ் அறிக்கையில்,

கடந்த ஒன்றரை தசாப்தங்களாக துன்பங்களையும் துயரங்களையும் தொடர் வரலாறாக்கிக்கொண்டு துவண்டுபோயிருக்கும் ஈழத் தமிழினத்தின் இன்னல்கள் அவலங்கள் நீங்கி நீதியுடன் கூடிய நிரந்தர சமாதானம் தோன்றவேண்டும். சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் கடந்துவிட்டாலும் தமிழினம் சுதந்திரத்தின் வாசனையை அறியாது உரிமையிழந்து அகதிகளாக்கப்பட்டு பல்வேறு விதமான அடிமை விலங்குகளைச் சுமந்தபடி வாழ்ந்துவருகின்றது. கைது செய்யப்படுதல், காணாமல் போதல், சித்திரவதை செய்யப்படுதல், ஆண்டுக்கணக்கில் தோன்றும் ஊரடங்கு, எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பய வாழ்வு இதுவே தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக எதிர்நோக்கும் சோகங்களாகும்.

வன்னியில் தொடரும்போர், உணவுப் பொருட்களின் பற்றாக்குறை, பட்டினிச்சாவுகள் இன்னும் எமது நிலையை வேதனைப்படுத்திவருகிறது. அனர்த்தங்களும் அவலங்களுமே வாழ்வாக தமிழினம் அழிந்துகொண்டிருக்கிறது. போர் ஓய்ந்து சமாதானக்காற்று வீசவேண்டும் என்பதற்காக மனித இனம் ஏங்கினாலும் ஆட்சி செலுத்துவோரின் பேரினவாதச் சிந்தனையில் இது உதித்ததாகத் தெரியவில்லை. சமாதானத்திற்காக விடுக்கப்படும் ஒவ்வொரு அழைப்பையும் அரச தட்டிக்கழித்தபடியே செல்கின்றது. எனவே சமாதானத்தை விரும்பும் அனைவரும் அதற்காக உழைப்பவர்களும் துன்பப்படும் தமிழ் மக்கள் இன்னல்கள் அகன்று நீதியுடன் கூடிய சமாதானம் நிலைக்க உழைக்குமாறும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# களுவாஞ்சிக்குடி சுற்றிவளைப்பு

(22.01.1999)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பிரதேசத்தை நேற்றுக் காலை சுற்றிவளைத்த சிறிலங்காப் படையினர் ஐம்பதுக்கு மேற்பட்ட இளைஞர்களையும் யுவதிகளையும் விசாரணைக்கென அழைத்துச் சென்றனர். அழைத்துச் செல்லப்பட்டவர்கள் முகாமில் வைத்து தீவிர விசாரணை செய்யப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஆயினும், அனைவரும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் முகாமிற்கு வந்து கையொப்பம் இடவேண்டும் எனவும் கட்டளை இடப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக சுற்றிவளைப்புக்களைக் குறைத்துக் கொண்டிருந்த படையினர் மீண்டும் தீவிரமாக சுற்றிவளைப்புக்களில் ஈடுபட்டுவருவதால் மக்கள் பெரும் கலக்கம் அடைந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வடமராட்சி அல்வாய் தெற்குப்பகுதியை கடந்த புதனன்று சுற்றிவளைத்த படையினர், அப்பகுதியில் நின்ற மக்களை வயது வேறுபாடின்றி முகாமிற்கு அழைத்துச்சென்று அவர்களது அடையாள அட்டைகளை பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் வீடு செல்ல அனுமதித்துள்ளனர்.

# வெளிநாட்டு பத்திரிகையாளர்களின் திகில் அனுபவம்

(24.01.1999)

சிறிலங்காவின் வடமேல் மாகாணசபையின் தேர்தல் தொடர்பான பிரச்சாரக் கூட்டங்களுக்குச் சென்ற மேற்குலகப் பத்திரிகையாளருக்கு திகில் அனுபவம் நேர்ந்ததுடன் அவர்கள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். கடந்த 20ம் திகதி ஆனைமடுவில் நடந்த ஐ.தே. கட்சியின் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கொழும்பிலுள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்கள் (இந்தியச் செய்தியாளர்கள் உட்பட) வாகனமொன்றில் சென்றனர். இவர்கள் ஐதேகட்சியின் கூட்டத்தை அவதானித்துவிட்டு சிலாபப் பகுதியை நோக்கி வந்துகொண்டிருந்த வேளை, வீதியின் நடுவே ரயர்கள் எரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இதனால் வாகனத்தில் இருந்த பத்திரிகையாளர்கள் தமது பயணத்தைத் தொடர முடியாது பீதியுடன் நடு வீதியில் நின்றனர்.

பின்னர் ஒருவாறு தமது பயணத்தைத் தொடர்ந்த வேளையில், திடீரென இவர்கள் வாகனத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. பயப்பீதியில் அலறிய செய்தியாளர்கள் வாகனத்தை மிக வேகமாகச் செலுத்தி ஒருவாறு தப்பி வந்துவிட்டனர். தமது வாகனத்தை அரசியல்வாதிகளின் வாகனம் என நினைத்தே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருக்கலாம் என மேற்கத்தேய பத்திரிகையாளர் ஒருவர் கூறியுள்ளார்.

# பேரினவாதக் கட்சிகளுக்கு ஆதரவு கொடுத்ததால் முஸ்லீம்கள் பின்தள்ளப்பட்டுள்ளனர்!

**- இஸ்சாத் ரகமத்துல்லா**

பேரினவாதக் கட்சிகளுக்கு கடந்த காலங்களில் தொடர்ந்து ஆதரவு கொடுத்து வாக்களித்து வந்ததனால்தான் முஸ்லீம் மக்கள் இன்று கல்வி, வேலை வாய்ப்பு, நிலஒதுக்கீடு, வர்த்தகம் போன்ற பல துறைகளில் பின்தள்ளப்பட்டுள்ளனர். சுயநலத் தேவைகளிற்காகவும், குடும்ப உறவு முறையினர் வளர்ச்சிக்காகவும் இன்றைய அரசியலில் ஈடுபட்டிருக்கும் பேரினவாதக் கட்சிகள் முஸ்லீம் சமூகத்திற்கு உருப்படியாக ஒன்றும் செய்துவிடவில்லை. இவ்வாறு முஸ்லீம் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த இஸ்சாத் ரகமத்துல்லா தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாணசபைத் தேர்தலையொட்டி நடைபெற்ற கட்சியின் கருத்தரங்குகளில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இன்று முஸ்லீம் பிரதேசங்களில் பேரினவாதிகளால் நடாத்தப்பட்டுவரும் அடாவடித்தனங்களையும், அட்டகாசங்களையும் கண்டும் காணாதவர்களாக பலர் இருப்பது நாம் அறியாததல்ல. அரசியல் என்பது ஒரு சில குடும்பத்திற்கு மட்டும் உள்ள உரிமையல்ல. புதிய தகுதியான பல தலைவர்கள் உருவாகுவதையும் இவ்வாறான குடும்ப அரசியல் தடைசெய்யப் பார்க்கிறது. அதற்கு எமது சமூகத்திலுள்ள ஒருசிலரும் உடந்தையாக உள்ளனர் எனவே இந் நிலையை மாற்ற ஒட்டுமொத்த முஸ்லீம் சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமலைக் கைதிகளை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் சந்தித்தனர்

திருமலை மாவட்டத்தில் உள்ள சிறிலங்கா பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களில் 173 பேரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் முதற்தடவையாக சந்தித்து விபரங்களை அறிந்து கொண்டுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் திருமலைப் பிரதிநிதி பியரே.அன்றியுநோட் செய்தியாளர் சந்திப்பொன்றின்போது தகவலைத் தெரிவித்துள்ளார்.

திருமலை மாவட்டத்தில் திருமலைப் பொலிஸ் தலைமையகம் உப்புவெளி பொலிஸ் நிலையம், துறைமுகப் பொலிஸ் நிலையம், கந்தளாய் பொலிஸ் தலைமையகம், திருமலை தடுப்புக் காவல் சிறைக்கூடம் ஆகியவற்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 281 பேரில் 173 பேர் முதற்தடவையாக செஞ்சிலுவைச் சங்கத்தினால் பார்வையிடப்பட்டவர்களாவர். பயங்கரவாதத் தடைச் சட்டம் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றினூடாகவே இவர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டவர்கள் என செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

# ‘மீனவ அடையாள அட்டை’ படையினர் வசம்

(24.01.1999)

யாழ். குடா கடலோரியில் மீன் பிடிக்கச்சென்ற மீனவர்களின் மீன் பிடிப்பதற்கான அடையாள அட்டைகளை வாங்கிச்சென்ற சிறிலங்கா படையினர் அவற்றினை மீள வழங்க மறுத்துள்ளனர். இதன் காரணமாக அடையாள அட்டைகளை இழந்த மீனவர்கள் தமது தொழிலுக்குச் செல்லாமல் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக்கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். குடா நாட்டின் பாதுகாப்புக் கருதி எனக் கூறப்பட்டு கடந்த டிசம்பர் மாதம் குருநகர் பிரதேசத்தில் மீன்பிடித்த மேற்படி மீனவர்களின் மீனவ அடையாள அட்டைகள், கடலில் ரோந்து சென்ற படையினரால் பறித்துச் செல்லப்பட்டது. இது குறித்து குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்கம் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கேட்டபொழுது, கடல் வளையத்தை மீறியதாலேயே மேற்படி அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இம் மீனவர்களுக்கு நிவாரண உதவிகள் எதுவும் வழங்கப்படாத காரணத்தால் இவர்களின் குடும்பங்கள் அன்றாட சீவனோபாயத்திற்கு பெரும் நெருக்கடியை சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மட்டக்களப்பில் வைரஸ் காய்ச்சல்

மட்டக்களப்பு பிரதேசத்தில் வைரஸ் கிருமியின் தாக்கத்தில் ஒருவகைக் காய்ச்சல் மிக வேகமாக பரவிவருகிறது. இதன் காரணமாக மட்டக்களப்பு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் சராசரி 1000 பேர் வரையில் தினமும் சிகிச்சைக்காக வருகின்றனர்.

வயது வித்தியாசமின்றி குழந்தைகள் முதல் முதியோர் வரையில் இந்த வைரஸ் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மையில் மட்டக்களப்பில் தொடர்ச்சியாகப் பெய்த பெருமழையின் வெள்ளம் வடிந்த பின்னரே இவ்வகையான காய்ச்சல் தோன்றியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிவாசினி வாகன சேவை
Chivashini Transport
வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு: ஜெயா
0614616984 / 0611289118 /
0614424117 / 01 42 05 44 04
டிஸ்னி ரெஸ்ரோறன்ட்


# தேர்தல்- வன்முறை - பெருமாள்

ஸ்ரீலங்காவின் வடமேல் மாகாணசபைத் தேர்தலில் வன்முறைகள், ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதராஜப் பெருமாளின் கொழும்புச் சந்திப்புக்கள் ஆகியன உட்பட கொழும்பில் கடந்தவாரம் சில நிகழ்வுகள் நடைபெற்றன. சிறிலங்காவின் தேர்தல் வரலாற்றிலேயே இல்லாத அளவு வன்முறைகள் வடமேல்மாகாணசபைத் தேர்தல் களத்தில் தலைவிரித்தாடியதாக பலதரப்பினரும் சுட்டிக்காட்டியிருந்தனர். வாக்களிப்பு நாளான 25ம் திகதிகூட அதி உச்சமான வன்முறைச் சம்பவங்கள் அங்கு இடம்பெற்றிருந்தன. ஏட்டிக்குப் போட்டியான வன்முறைகளில் அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஈடுபட்டது. 'மக்களுக்கான தேர்தல்' என வாயோயாது மேடைகளில் எல்லாம் முழங்கிய சந்திரிகா குழாம், தேர்தல் பின்னணியிலே எதிர்க்கட்சிகள் மீதெல்லாம் வன்முறைகளைப் பிரயோகித்தது. ஆனால் மறுபுறத்தே 17 வருடகால வன்முறை ஆட்சி அனுபவம்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியும் அதற்கு சளைக்காது பதில் வன்முறைகளில் ஈடுபட்டது. வாக்களிக்கவேண்டிய மக்கள் எங்கே வேட்டுச்சத்தம் கேட்குமோ என்ற பீதியில் தமது நாட்களைக் கழித்தமை சிங்கள தேசத்தில் நிலவும் அமைதியின்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு.


இத்தேர்தல் வன்முறையின் பின்னணியில் நடாத்தப்பட்ட தாவ் அதனை இரத்துச் செய்ய வேண்டும் என சிறீலங்காவின் இடதுசாரிக்கட்சிகள் கோரிக்கையும் விடுத்துள்ளன. இத் தேர்தல் களத்தில் வன்முறைகள் தலைவிரித்தாடியதை சிங்களதேசத்தின் குடிமக்கள் ஆச்சரியத்துடன் நோக்கினாலும், தமிழர் தேசத்தின் மீது கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகளின் மறுதாக்கம்தான் இவ்வாறான வன்முறைகள் என்பதை உணரும் பக்குவத்திற்கு வந்துவிட்டார்களா என்பது கேள்விக்குரிய விடயம். இத் தேர்தல் களத்திலே ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் முதன்மை வேட்பாளரான காமினி ஜெயவிக்கிரமபெரேராவை நோக்கினால் யாழ்மாவட்ட சபைத் தேர்தல்கள் நினைவிற்கு வரும். பல வருடங்களிற்கு முன்னர் யாழ்மாவட்ட சபைக்கு 'பலவந்தமான' தேர்தல் ஒன்றினை ஐக்கியதேசியக் கட்சி நடாத்திய போது, இதே காமினி ஜெயவிக்கிரமபெரேராதான் அங்கு வன்முறைகளை விதைக்கக் காரணமாக இருந்தவர். யாழ்மாவட்ட சபைத் தேர்தல்களுக்கென ஒதுக்கப்பட்ட தமிழ் ஊழியர்களை இடைநிறுத்திவிட்டு சிங்கள ஊழியர்கள் என்ற போர்வையில் குருநாகல் மாவட்டத்தில் உள்ள ஐக்கியதேசியக் கட்சியின் குண்டர்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியவரும் இவர்தான். தற்பொழுதுகூட இவருக்கு மெய்ப்பாதுகாவலர்களாக இருக்கும் முன்னாள் அதிரடிப்படையினர் இருவர் பொல்கொடவாவியில் சடலங்களாக மிதந்த தமிழ் இளைஞர்களின் படுகொலை சம்பவங்களில் கைதாகி பிணையில் வெளிவந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்ல ஜே.வி.பியின் கிளர்ச்சிக்காலமென கருதப்படும் 87ம் 88ம் ஆண்டுகளில் சிங்கள மக்களை உலுக்கிய 'கறுப்புப் பூனைகள்' என்ற கொலைக்குழுக்களுக்கு தலைமை தாங்கியவர்களான பொலிஸ் அதிகாரி பிரேமதாசா உடுகம்பொல, லக்கி அல்ஹம, இராணுவ அதிகாரி சிசில் வைத்தியரட்ன ஆகியோரும் ஐ.தே.க.வின் தேர்தல் மேடைகளில் வீற்றிருந்தமையும் கண்கூடு.

**சிங்கள மக்களை உலுக்கிய 'கறுப்புப் பூனைகள்' என்ற கொலைக் குழுக்களுக்கு தலைமை தாங்கியவர்களான பொலிஸ் அதிகாரி பிரேமதாசா உடுகம்பொல, லக்கி அல்ஹம, இராணுவ அதிகாரி சிசில் வைத்தியரட்ன ஆகியோரும் ஐ.தே.க. வின் தேர்தல் மேடைகளில் வீற்றிருந்தமையும் கண்கூடு.**

ஐ.தே.கட்சியின் வன்முறைத்தனம் இவ்வாறிருக்க, பொதுஜன ஐக்கிய முன்னணியின் வன்முறைத் தனமும் எதிர்க்கட்சிக்கு எவ்விதமும் சளைக்காத வகையில் கட்டியெழுப்பப்பட்டது. பல அமைச்சர்கள் தமது அடியாட்களைக்கொண்டு பாரிய வன்முறைச் சம்பவங்களைத் தூண்டிவிட்டனர். சிங்கள தேசத்தின் பொருளாதார நலிவு, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி ஏற்றம் என்பவற்றிற்கு ஐக்கியதேசியக் கட்சியினரே பொறுப்பு என தேர்தல் மேடைகள் எல்லாம் ஓயாது முழக்கமிட்ட சந்திரிகா, ஐக்கியதேசியக் கட்சியை விட மூர்க்கத்தனமான முறையில் போரொன்றினை தமிழ்த் தேசியத்தின் மீது, தான் கட்டவிழ்த்து விடுகிறேன் என்ற உண்மையை உணராது விட்டமை ஒரு வேடிக்கையான விடயம்தான். இராணுவத்தினர் பாவிக்கும் ஆயுத வகைகள் தாராளமாக வன்முறைகளில் உபயோகிக்கப்பட்டமை அரசின் வன்முறை காலத்திற்கு ஒரு பகிரங்க சாட்சியாகும். தேர்தல் தினத்தன்று இரண்டு மணிநேரத்திற்கிடையில் 95 வன்செயல்கள் இடம்பெற்றமை சிங்களதேசத்தின் தேர்தல் வரலாற்றின் ஒரு புதிய பதிவாகியிருக்கிறது.

**பேம்பி**


இந்தத் தேர்தல் வன்செயல்களுக்கிடையில் கொழும்பின் புறநகர் பகுதியான தெஹிவளையில் சிராகக் குழுவின் பாதுகாப்புடன் தங்கியிருக்கும் வரதராஜப்பெருமாள் தனது அரசியல் பிரவேசத்தை உறுதிசெய்வது போல் சில காரியங்களைச் செய்துவருகிறார். அமைச்சர்களான ஜி.எல். பீரிசையும், தர்மசிறீ சேனாநாயக்காவையும் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்திய பெருமாள், அரசின் தீர்வுப் பொதியை தான் ஏற்றுக்கொள்வது(?) தொடர்பாக ஆய்வு(?)செய்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



தேர்தல் 'தீ'

எட்டு வருடங்களின் பின்னர் இந்திய அஞ்ஞாதவாசத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய பெருமாள், இந்தியாவுடனும் பொதுஜனஐக்கிய முன்னணியுடனும் தான்கொண்டிருக்கும் செல்வாக்கை வைத்துக்கொண்டு தீர்வுப்பொதியில் ஒரு தரகராக செயற்படும் வாய்ப்பினை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்வதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கதை அடிபடுகிறது. கதிர்காமரைப் போன்ற கைத்தடிகளுக்கு அலையும் சந்திரிகா குழுவினருக்கு பெருமாளின் வரவு ஒரு இலாபமாகத் தென்பட்டாலும் பெருமாள் தரப்பால் முன்வைக்கப்படும் பேரம் என்னவாக இருக்கும் என்பதை இன்னும் அறியவில்லை. 1988ம் ஆண்டு இந்திய அரசின் திணிப்போடு மாகாணசபைகள் உருவாக்கப்பட்டபோது, இந்தியா தனது பங்காக அல்லது நன்றிக் கடனாக மாகாணசபையை அமைத்த ஈ.பி.ஆர்.எல்.எவ். காரர்களுக்கு மாதாந்தம் 2.5 மில்லியன் ரூபாய்களை வழங்கியிருந்தது. அதாவது மாகாணசபைப் பராமரிப்பிற்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் தமிழ்த் தேசிய இராணுவத்திற்கும் எனவுமே இப்பணம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இப் பணத்தின் பெரும்பகுதி ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர்களின் சொந்தக் கணக்கிற்குள்தான் சங்கமமானது. இப்பணத்தினைக்கொண்டு இந்தியாவில் திரைப்படத் தொழிற்துறை, உல்லாசப் பயணத்துறை, வீடுகள் காணிகள் வாங்கி விற்கும் வர்த்தகத்துறை ஆகியவற்றில் ஈ.பி.ஆர்.எல்.எவ். காரர்கள் முதலீடு செய்துகொண்டார்கள். பெருமாளின் காலகட்டத்தில் இவை நடந்தன. பெருமாள் இந்தியாவிற்குச் சென்றபின்னர் கொழும்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் சுரேஸ் பிரேமச்சந்திரன் பண வாங்கல் வேலைகளை இன்று வரை செய்துவருவது அனைவரும் அறிந்த உண்மை. போதாக்குறைக்கு தற்பொழுது பொதுஜன ஐக்கிய முன்னணியினரால் வழங்கப்பட்ட மீன்பிடிக் கூட்டுத்தாபன இயக்குநர் பதவியினால் கூட, பெருமளவு பணம் வழங்கப்படுகிறது. எனவேதான் தனக்குப் போட்டியாக பெருமாளின் விஜயத்தினை சுரேஸ் பிரேமச்சந்திரன் கணக்குப்போடுகிறார். ஆனாலும் வெளியே அதை காட்டிக்கொள்ளாது அடக்கி வாசிக்கும் நிலையில் அவர் தற்பொழுது உள்ளார். ஆனால் இந்த அடக்கிவாசிப்புக்கள் எதுவரை தொடரப்போகிறது என்பதுதான் தற்போது உள்ள கேள்வியாகும்.

**1988ம் ஆண்டு இந்திய அரசின் திணிப்போடு மாகாணசபைகள் உருவாக்கப்பட்டபோது, இந்தியா தனது பங்காக அல்லது நன்றிக் கடனாக மாகாணசபையை அமைத்த ஈ.பி.ஆர்.எல்.எவ்.காரர்களுக்கு மாதாந்தம் 2.5 மில்லியன் ரூபாய்களை வழங்கியிருந்தது.**



17 வருட வன்முறை ஆட்சியாளர்கள் வன்முறை பற்றி...


உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

(மக்கள் கடை முன்பாக)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

அனைத்து அச்சு வேலைகளும் சுத்தத் தவரணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணிவரை

60, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

# தேர்தலில் வென்றாலும் தோற்றாலும் இராணுவத் தாக்குதல்

## கொழும்பிலிருந்து ஊரோடி

வடமேல் மாகாணசபைத் தேர்தல் முடிந்துள்ள நிலையில் சிறீலங்காவில் ஏற்படப்போகும் அரசியல் மாற்றங்கள் தொடர்பான பல்வகைப்பட்ட ஊகங்கள் வெளிவருகின்றன. இரு கட்சிகளுக்கும் பலப்பரீட்சையாக வன்முறைக்களமாக அமைந்துள்ள வடமேல் மாகாணசபைத் தேர்தல் மூலமாக சிறீலங்கா அரசில் ஆட்சி அமைக்கும் கட்சி எது என்பதையும் மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய நிலை ஏற்படும்.

சிறீலங்காவில் சிங்கள மக்களைப் பொறுத்தவரை தேர்தல் முடிந்தால்போதும் என்ற மன உணர்வுதான் அவர்களிடையே மேலோங்கியிருந்தது. பொ.ஐ.ஐ. முன்னணி அரசைப் பொறுத்தவரை என்ன விலை கொடுத்தாயினும் ஐ.தே.கட்சியை தோற்கச் செய்ய வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருந்தது.

ஐ.தே.கவைப் பொறுத்தவரை இத் தோர்தலில் தாம் வெற்றி பெறுவதன் மூலம் சிறீலங்கா அரசின் அடுத்த ஆட்சியாளர்கள் தாமே என்பதை நிரூபிக்கவே முனைப்புடன் கொண்டிருந்தனர். ஆனால் இரு கட்சிகளுமே மாகாணசபையின் அதிகாரங்களையோ அல்லது மகாண சபை மூலமாக மக்களுக்கு தாங்கள் என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றியோ சிந்திக்கவில்லை. மக்களும் இந்த மாகாணசபை மூலம் தாங்கள் எவ்வகையான நன்மையை பெற்றோம் என சிந்திக்க தலைப்படவில்லை. ஆனால் இதே சிங்கள மக்களும் இதே அரசியல் வாதிகளும் அன்று அதாவது 1987ல் தமிழக பகுதிகளில் மாகாண சபைகளை தமிழ் மக்கள் விரும்பாத போதும் கட்டாயப்படுத்தப்பட்ட நிலையில் அமுல்படுத்தப்பட்டபோது, நாடு பிளவுபடப் போவதாக விதண்டாவாதம் புரிந்தனர். பேரினவாதிகளின் தூண்டுதல்கள்தான் எல்லாவற்றிற்குமே காரணம் என்பதை இன்றுகூட சிங்கள மக்கள் உணரத் தலைப்படவில்லை. தேர்தல் பிரச்சாரங்களிலோ புலிகளை தோற்கடிப்பதன் மூலமே இனப் பிரச்சினையை தீர்க்கமுடியும் எனக் கூறப்பட்டது.

**புலிகளை அழிக்கவேண்டும் என்பதையே இரு கட்சிகளும் தமது நிலைப்பாடாக மாற்றியுள்ளன. மாறாக தமிழீழப் பகுதிகளில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படை மனித உரிமைப் பிரச்சினைகள் பற்றியோ அல்லது அவர்களின் தாயக உரிமை தொடர்பாகவோ சிங்கள மக்கள் முன்னிலையில் பேசுவதில்லை.**

பொ.ஐ.ஐ. முன்னணி அரசிற்கு எதிராக தேர்தல் பிரச்சாரம் செய்த ஐ.தே. கட்சிகூட செம்மணி புதைகுழி விவகாரத்தை பிரச்சாரத்தில் முன்வைக்கவில்லை. 1994ல் நடந்த பொதுத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஐ.தேகட்சி அரசினால் செய்யப்பட்ட மனிதப் படுகொலைகளையும், அதற்கான புதைகுழிகளையும் தோண்டி எலும்புக் கூடுகளைக் காட்டியே தேர்தலில் வெற்றி பெற்றது. இன்று சந்திரிகா அரசினால் தமிழீழப் பகுதிகளில் செய்யப்பட்ட மனிதப் படுகொலைகளும், புதைகுழிகளும் சர்வதேச மட்டத்தில் பேசப்பட்ட போதும், அது தொடர்பாக ஐ.தே.கட்சி தேர்தல் பிரச்சாரத்தில் சர்ச்சையைக் கிளப்பாதது ஏன்? அன்று சந்திரிகா சூரியகந்த புதைகுழியைத் தோண்டி ஐ.தே.க அரசை வீழ்த்தியதுபோல செம்மணி புதைகுழி விவகாரத்தை சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்தி பொ.ஐ.ஐ.முன்னணி அரசை வீழ்த்தலாமே? அடுத்து வரும் மாகாணசபைத் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் ஐ.தே. கட்சி தமிழீழ பகுதிகளில் நடந்த மனிதப் படுகொலைகளையும், செம்மணிப் புதைகுழி விவகாரத்தையும் தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்துமா?

புலிகளை அழிக்கவேண்டும் என்பதையே இரு கட்சிகளும் தமது நிலைப்பாடாக மாற்றியுள்ளன. மாறாக தமிழீழப் பகுதிகளில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படை மனித உரிமைப் பிரச்சினைகள் பற்றியோ அல்லது அவர்களின் தாயக உரிமை தொடர்பாகவோ சிங்கள மக்கள் முன்னிலையில் பேசுவதில்லை. தமிழ் மக்கள் மீதான இரு கட்சிகளினதும் நிலைப்பாடு வடமேல் மாகாண சபைத் தேர்தல் பிரச்சாரத்தின் மூலம் தெளிவாகியுள்ளது. என்பதே அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும். தேர்தல் முடிவுகள் எவ்வாறாக இருந்தாலும் ஜே.ஓ.பி (J.O.B.)-யின் முதற்கட்ட வரையறுக்கப்பட்ட இராணுவத் தாக்குதல் அடுத்த மாத நடுப்பகுதியில் அல்லது இறுதி வாரத்தில் முல்லைத்தீவுக் கடற்பகுதியை அண்டிய கடற்புலிகளின் தளம் மீது மேற்கொள்ளப்படலாம் என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இத் தாக்குதலின் சமநிலையைப் பொறுத்து அமைச்சரவையிலும் சில மாறுதல்கள் ஏற்படலாம் என எதிர்வு கூறப்படுகிறது. எவ்வாறாயினும் ஐ.தே.க இத் தேர்தலில் வெற்றிபெறுமாக இருந்தால் உடனடியாகவே இராணுவத் தாக்குதல் ஆரம்பிக்கப்படலாம் எனவும் அதன் பின்னரே அமைச்சரவை மாற்றம் தொடர்பாக யோசிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆண்டு பாராளுமன்றக் கூட்டத் தொடருக்கு முன்பாக அமைச்சரவை மாற்றங்கள் ஏற்படலாம் என்றே அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. வடமேல் மாகாணசபைத் தேர்தலை மையப்படுத்தியே அடுத்த அரசியல் இராணுவச் செயற்பாடுகளை சந்திரிகா அரசு முன்னெடுக்கப் போகிறது என்பது தெளிவான போதும் இந்த ஆண்டு ஏற்படப்போகும் அரசியல் மாற்றம் சர்வதேச அரங்கில் சிறீலங்கா அரசின் அரசியல் பகிடிக்கிடமாக அமையப்போகிறது என்பதுதான் தெளிவான உண்மை.

# 1974 யாழ் தமிழாராட்சி மாநாட்டின் நினைவலைகள்

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் நடைபெற்ற மூன்றாவது அனைத்துலக தமிழாராட்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி நான்காவது அனைத்துலக தமிழாராட்சி மாநாடு இலங்கையில் தமிழ் மக்கள் செறிந்துவாழும் யாழ்ப்பாணத்தில் நடைபெற வேண்டும் என்பதாகும்.

மேற்படி தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்துலக தமிழாராட்சி மன்றத்தின் இலங்கைக்கிளை நடவடிக்கையில் இறங்கியபோதே, இங்கு வாழும் தமிழ் மக்கள் தமது பண்பாட்டு நிகழ்வினை ஒன்றினைத்தானும் சுதந்திரமாக வெளியார் தலையீடின்றி நடத்தும் சுதந்திரம் உண்டா? எனும் கேள்வியை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

யாழ். நகரமண்டபம், யாழ். திறந்தவெளி அரங்கு, யாழ். வரியிறுப்பாளரின் சொத்துக்கள், யாழ். வீரசிங்கம் மண்டபமோ யாழ் கூட்டுறவாளர்களது முயற்சியால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. யாழ் நகரிலுள்ள பாடசாலை மண்டபங்கள் அத்தனையுமே அரசு அலுவலகங்கள் உட்பட்டன போதும், அரசு அவற்றை பொறுப்பேற்பதற்கு முன் சமய நிறுவனங்களாலும், தனிப்பட்ட தமிழ் பெரியவர்களாலும் கட்டப்பட்டவையே! இருந்தும் மாநாட்டை நடாத்துவதற்கு மேற்படி மண்டபங்களின் உபயோகம் மறுக்கப்பட்டது. காரணம் தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகள் எள்ளளவேனும் பிரதிபலியாததும் அவர்களால் முழுமையாக நிராகரிக்கப்பட்டு இருந்ததுமான 1972ம் ஆண்டில் இலங்கை சோஷலிச ஜனநாயக குடியரசு யாப்பை தன்னிச்சை தனமாக தமிழ் மக்கள்மீது திணிக்கும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டி வந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரால், அச் சூழ்நிலையில் ராஜாங்கத் தலைவி என்ற கோதாவில் மேற்படி மாநாட்டை வைபவ முறைப்படி திறந்து வைப்பதற்கு யாழ்ப்பாணம் செல்ல முடியாது இருந்தமையேயாகும். ஆகவே, தமிழ் மக்களுக்கு உரித்தான மண்டபங்களின் உபயோகத்தை மாநாட்டு நிர்வாகிகளுக்கு மறுத்த அரசு, இம் மாநாட்டை தலைநகர் கொழும்பில் நடத்துவதாயின் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தை கட்டணம் அறவிடாது இலவசமாகத் தருவதற்கு தயாராக இருந்தது.

**மறுபக்கத்தில் உறுப்பினர்களுள் இளைய தலைமுறையினர் மாநாட்டை பாரீஸ் மாநாட்டு தீர்மானத்தின்படி யாழ்ப்பாணத்தில் நடாத்துவதில் உறுதியாக இருந்தனர்.**

அனைத்துலக தமிழாராட்சி மன்றத்தின் இலங்கைக் கிளைக்குள்ளும் அன்றும் அரசுக்குப் பக்கப்பாட்டு பாடுவதற்கு தயாராக இருந்தனர். ஆயினும், அவர்களோ எண்ணிக்கையில் சிறுபான்மையினரே! மறுபக்கத்தில் உறுப்பினர்களுள் இளைய தலைமுறையினர் மாநாட்டை பாரீஸ் மாநாட்டு தீர்மானத்தின்படி யாழ்ப்பாணத்தில் நடாத்துவதில் உறுதியாக இருந்தனர். எனவே இலங்கைக்கிளையின் தலைவர் டாக்டர் எஸ்.டபிள்யூ. தம்பையா தலைமைப் பதவியைத் துறந்தார். முற்போக்கு வட்டத்தினர் மன்றத்தை விட்டு வெளியேறி மாநாட்டையும் பகிஸ்கிப்பதற்குத் தீர்மானித்தனர்.

தொடர்பு ஊடகங்களோ மாநாடு இடம்பெறக்கூடிய சூழலையே ஐயத்துக்கிடமாக்கி இருந்தன. அக்கட்டத்தில்தான் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மன்றத்தின் தலைவராகவும், கட்டடக் கலைஞர் வி.எஸ். துரைராஜா செயலாளராகவும், கோபால பிள்ளை மகாதேவா பொருளாளராகவும் பொறுப்பேற்று மாநாட்டை நடாத்தி முடிக்கும் உறுதியோடு கருமமாற்றத் தலைப்பட்டனர்.

துரைராஜாவினால் வடிவம் அமைத்து தரப்பட்டிருந்த சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இடம் பெற இருந்த பண்பாட்டு பொருட்காட்சி பொறுப்புடையவரான பேராசிரியர் பத்மநாதன், மேற்படி கல்லூரியில் நடாத்திய ஒரு ஆலோசனை கூட்டத்தில் பொருட்காட்சியில் கூடங்கள் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் ஏதும் கைத்தொழில் வர்த்தக நிறுவனங்களிடம் இருந்து கிடைக்கப்பெறாமை குறித்து கவலை வெளியிட்டிருந்தார். தொடர்பு ஊடகங்களின் செயற்பாட்டின் தாக்கத்தை தனித்து, அவற்றையும் மாநாட்டுக்கு ஒத்திசைவாக மாற்றிக் கொள்ள மாநாட்டின் நிர்வாக செயலாளர் பேரம்பலம் நடவடிக்கையில் இறங்கினார் அவரது வேண்டுகோளின் பேரில் இலங்கை அடங்கலும் இருந்த அத்தனை திரைப்பட மாளிகைகளும் தமது காட்சிகளின் போது 'நான்காம் அனைத்துலக தமிழாராட்சி மாநாடு 1974 ஜனவரி மூன்று முதல் எட்டாம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் கட்டாயம் நடைபெறும்' எனும் வாசகத்தை கட்டணம் அறவிடாது இலவசமாக தமது திரைகளில் விளம்பரப் படுத்தியிருந்தன.

வீதி விளம்பரம் செய்வதற்கு மாநாட்டு நிர்வாகிகளுக்கு ஒலி பெருக்கி விளம்பர அனுமதி வழங்கியிராத போதும், ஏ.ரி.சுந்தரத்தின் வேண்டுகோள் பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தமையும் சேர, மாநாடு ஆரம்பமாகும் முன்பே யாழ். குடாநாடு விழாக் கோலம் காட்டி நின்றது.

*(மிகுதி அடுத்தவாரம்)*

சா. அ. தருமரத்தினம்

# சோனியா காந்தியை பிரதமராக வரவிடமாட்டேன்! சிவசேனைத் தலைவர் பால்தாக்கரே ஆவேசம்!!

இந்தியாவின் பிரதமராக சோனியா காந்தியை ஒருபோதும் வரவிடமாட்டேன் என பால்தாக்கரே ஆவேசம் பொங்கக் கூறியுள்ளார். தேச ஒற்றுமை மற்றும் பாதுகாப்புக் கருதி வடக்கு மும்பையில் உள்ள கோருவம் என்ற இடத்தில் பதினொரு நாள் லட்ச சண்டி மகாயாகம் தொடங்கப்பட்டது. 51 ஆண்டுகளுக்கு பிறகு இந்த யாகம் நடாத்தப்பட்டது. இதுபோன்ற யாகம் இந்தியா சுதந்திரமடைவதற்கு முன்பாக முதல்முறையாக நடாத்தப்பட்டது நாட்டின் விடுதலைக்காக அந்த யாகம் நடத்தப்பட்டது. தற்போது இரண்டாவது முறையாக இந்த யாகம் நடாத்தப் படுகிறது. இந்த மகாயாகத்தை சிவசேனைத் தலைவர் தொடக்கி வைத்து பேசுகையில் தெரிவித்ததாவது:—

ரோமில் உள்ள வத்திக்கான் நகரில் இருந்து ஏராளமான பணம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதன் மூலம் ஏழை இந்துக்கள் மதமாற்றம் செய்யப்படுகின்றனர். இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் இந்துக் கோவில்களில் வருவா



கும் உபரிப் பணத்தை ஏழை இந்துக்களுக்கு விநியோகிக்க வேண்டும். அவர்களை பொருளாதார ரீதியில் உயர்த்த வேண்டும்.


நாட்டை அரசியல் கட்சிகளால் மட்டுமே காப்பாற்ற முடியும் என்று எதிர்பார்க்க கூடாது. நாட்டை காப்பாற்ற மக்களும் ஒன்றுபட வேண்டும். வெளிநாட்டைச் சேர்ந்த சோனியா இந்தியாவின் பிரதமராக வருவதற்கு நான் ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன் என்று கூறினார்.

## கன்னிமாரா நூலகம் புனரமைப்பு பணி துவக்கம்!

(22.01.1999)

சென்னையில் உள்ள பழமைவாய்ந்த கன்னிமாரா நூலகத்தை புனரமைக்கும் பணி துவங்கியுள்ளது. 1890-ல் கன்னிமாரா நூலகம் கட்டும் பணி தொடங்கப்பட்டு 1896-ம் ஆண்டில் திறப்பு விழா நடைபெற்றது. அந்நாளில் இதைக் கட்டி முடிக்க ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ.5075 இலட்சம் மட்டுமே. 103 ஆண்டு பழமையும் அழகிய வேலைப்பாடுகளும் கொண்ட இந்நூலகம் புனரமைக்க தற்போது ரூ.1.21 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

மொத்தச் செலவில் மூன்றில் ஒரு பகுதியை மாநில அரசும் மீதியை மத்திய அரசும் ஏற்கின்றன. புனரமைப்பு வேலைகள் முடிய ஓராண்டாகும் என நூலக வட்டாரங்கள் தெரிவித்தன.




## இந்தியாவுக்குச் சென்றது 'யூரோ' ஏற்றுமதி மதிப்பு ரூ.50.04!

(23.01.1999)

'யூரோ' நாணயப் புழக்கம் இந்தியாவுக்கும் சென்றுவிட்டது. இந்திய வர்த்தகத்திற்குப் பயன்படுத்தும் வகையில் இந்தியாவின் சுங்கத்துறை அங்கீகரித்துள்ள 17 வெளிநாட்டு நாணயங்களின் பட்டியலில் 'யூரோ' நாணயமும் இடம் பெற்றுள்ளது. இறக்குமதிக்கு 'யூரோ' நாணயத்தின் விலை ரூ.50.76 எனவும் ஏற்றுமதிக்கு இதன் மதிப்பு ரூ.50.04 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது இந்திய அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது. அதே வேளையில் அமெரிக்க டொலரின் ஏற்றுமதி மதிப்பு ரூ.42.45 ஆகவும், இறக்குமதி மதிப்பு ரூ.42.75 ஆகவும் இருக்கும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஏற்றுமதி இறக்குமதியாளர்கள் பணப் பட்டுவாடா செய்வதற்கு வசதியாக 'யூரோ' நாணய மதிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. 'யூரோ' நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து, இந்தப் புது நாணயத்திற்கு தங்களை மாற்றிக் கொள்ளும்படி ஏற்றுமதியாளர்களை இந்திய ரிசர்வ் வங்கி கேட்டுள்ளது. அத்துடன் பிரான்சின் நாணயமான பிராங், ஜேர்மனியின் நாணயமான டொச் மார்க் அகற்றப்படலாம் என்றும் 'யூரோ' நாணயத்தை இங்கிலாந்து ஏற்றுக்கொள்ளாததால் இங்கிலாந்து நாணயத்தில் மாற்றம் இருக்காது என்றும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

# 'மறு மொழிபெயர்ப்பு': உலகு தழுவிய விவாதம் தேவை

*– தமிழ்நாட்டிலிருந்து 'சாதாரணன்' எழுதுகிறார்*

### காகித வடிவம் காணாமல் போய்விடுமா?

ஜனவரி எட்டாம் திகதி முதல் 17ம் திகதிவரை சென்னைப் புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. இப்புத்தகக்கண்காட்சி 22 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. பொங்கல்விழா நாட்களில் வந்தகச் சுற்றுலாப் பொருட்காட்சி, வி.ஜி.பி தங்கக் கடற்கரை, சென்னை மெரினா கடற்கரை போன்ற இடங்களில் மக்கள் கூட்டம் அலைமோதும். அவர்கள் உல்லாசத்தில் கேலிபேசுவர்.குறும்பு விளையாட்டுக்களில் குதூகலமடைவர். இதை மீறி புத்தகக் கண்காட்சியிலும் பெரும் கூட்டம் வருகைதந்து புத்தகங்களை வாங்கிச் சென்றனர். இதனால் புத்தக விற்பனையாளர்கள் உற்சாகம் பெற்றனர்.

புத்தகக் கண்காட்சியை கவிஞர் வைரமுத்து தொடங்கி வைத்தார். அவர்பேசும்போது 'இனிவரும் தலைமுறை புத்தகங்களைப் படிக்குமா? காட்சியுகத்தில் கரைந்துபோகுமா? என்ற கேள்விகள் எழுகின்றன. மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்களும் தொடர்ந்து புத்தகங்களைப் படிக்கும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

குறுந்தகடு வந்துகொண்டிருக்கிற சூழ்நிலையில் காகித வடிவமே காணாமல் போய்விடலாம். அமெரிக்காவில் கார்னெகிப் பல்கலைக்கழகம் முழுவதும் டிஜிட்டல் நூலகமாகிவிட்டது. அனைத்து நூல்களையும் இணையம் மூலம் படிக்க முடியும். இந்நிலையில் உலகத் தரத்திற்கு இணையாக தமிழ்ப் படைப்புகளைத் தரத் தயாராக வேண்டும்' என்றுரைத்தார்.

வரலாற்றுச்சாசனங்களைக் கல்வெட்டில் பொறித்த காலமுண்டு. கவிதைகளை, காவியங்களை ஓலைச்சுவடிகளில் எழுதிய காலமுண்டு. சிறுகதை நாவல்கள் அச்சுவாகனமேறி புத்தகவடிவம் கண்டன. கல்வி ஜனநாயகமயமாற்றத்திற்கு புத்தக வடிவமே உந்து சக்தியாக விளங்கியது. அறிவுலகில் ஜனநாயகம் நிலைபெற்றிருக்கும் வரை காகிதத்தின் முக்கியத்துவம் நிலைபெற்றிருக்கும் என்பது உறுதி.

* * *

### மறு மொழிபெயர்ப்பு: உலகுதழுவிய விவாதம் தேவை

'கம்யூனிசம்' என்ற சொல்லுக்குப் பொதுவுடமை என்ற தமிழ்ச் சொல்லாக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அனைவராலும் கையாளப் படுகிறது. கம்யூனிசம் என்ற சொல்லை ஒரு காலத்தில் அபேதவாதம் என்று மொழிபெயர்த்தனர். அதேபோல சாக்ரடீஸ் என்ற பெயரை சோக்ரத் என்று இராஜாஜி மொழிபெயர்த்தார். சேக்ஸ்பியர் என்ற பெயர் சேக்சுப்பியர், செகப்பிரியர், ஜெகசிற்பியர் என்று பல மாதிரி ஒலிபெயர்ப்புகள் செய்யப்பட்டன.

மொழிபெயர்ப்புக் குறித்து சிரத்தைமிக்க விவாதம் தேவைப்படுவதை எழுத்தாளர் கி.ராஜநாராயணன் 7.01.99 அன்று 'ஸ்நேகா' பதிப்பகம் நடத்திய நூல் வெளியீட்டு விழாவில் வலியுறுத்தினார்.

'தமிழில் மொழி பெயர்ப்புகள் நிறைய வரவேண்டும். அதேநேரத்தில் மொழிபெயர்ப்புகள் பற்றிய விவாதத்தைத் தமிழ்ப் பதிப்பாளர்களும் படைப்பாளர்களும் வாசகர்களும் செய்யவேண்டும். மொழி பெயர்ப்பில் பலவகை உள்ளது. எந்த மாதிரி மொழிபெயர்ப்புத்தேவை என்பதை நாம் விவாதிப்பது முக்கியம்.

ஏற்கனவே மொழிபெயர்க்கப்பட்ட நூல்களும் இக்கால நடைக்கு ஏற்ப மறுமொழி பெயர்ப்புச் செய்யப்பட வேண்டும். பிரெஞ்சு மொழியில் இத்தகைய மறுமொழி பெயர்ப்பு முயற்சிகள் நடைபெறுகின்றன.'

எழுத்தாளர் கி.ரா. தமது உரையில் மேற்கண்ட கருத்துரைகளை வழங்கினார்.

தமிழ்த்தன்மைக்கு ஏற்ப, தமிழ்ச்செயல் நடைக்கு ஏற்ப, மாறி வரும் நவீன மொழி நடைக்கு ஏற்ப மொழி பெயர்ப்பு நடைகளும் மாற்றப்படவேண்டும் என்பதையே மறுமொழி பெயர்ப்புத்தேவை என்ற கி.ராவின் குரல் வலியுறுத்துகிறது.

இயல்பான தமிழ்நடையை சமஸ்கிருத மேலாதிக்கம் பரவி 'மணிப் பிரவாளம்' ஆக்கியது. அவ்வாறே ஆங்கில ஆதிக்கமும் தமிழ் நடையைத் திரிபுபடுத்தி 'ஆங்கிலத் தமிழ்' என்ற போக்கை ஏற்படுத்தியது.

மறுமொழிபெயர்ப்பு விவாதம் இவை எல்லாவற்றையும் கணக்கில் கொள்ளவேண்டும். அது உலகு தழுவிய விவாதமாகவும் அமையவேண்டும்.

* * *

### உலகம் புகழும் கணித மேதை டாக்டர் வசந்தா கந்தசாமி

ஐ.ஐ.டி. எனும் பெயரிலான இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் சென்னை, பம்பாய், கௌகாத்தி போன்ற நகரங்களில் இயங்கிவரும் தொழில் கல்வி நிறுவனமாகும். இந்நிறுவனங்கள் ஜேர்மன் அரசின் நிதிஉதவி, இந்தியஅரசின் நிதி உதவி பெற்று பெரும் நிலப்பரப்பில் வணிக்க மாளிகை வளாக வசதிகளோடு இயங்கிவருகின்றன. இந்த ஐ.ஐ.டி. யை மேல்தட்டு மக்கள் முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றனர். பிற்படுத்தப்பட்ட மக்களையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் இந்நிறுவனத்தில் படிக்க நுழைய விடுவதில்லை. பணியில் சேரவும் விடுவதில்லை. எல்லாவித தடைகளையும் மீறி டாக்டர் வசந்தா கந்தசாமி கணிதத்துறையில் பணியில் சேர்ந்தார். பணியில் சேர்ந்த நாள்முதற்கொண்டு இந்நிறுவன மேல்தட்டுமக்கள் இவரை படாதபாடு படுத்தி வருகின்றனர். வசந்தா கந்தசாமி சளியாத உழைப்பாளி. இவருடைய உழைப்பே கணிதமேதை என்ற உலக அங்கீகாரத்தை ஏற்படுத்தித் தந்துள்ளது.

அமெரிக்கா, ஜேர்மன், சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து வெளிவரும் கணித ஆய்வு ஏடுகளில் ஐம்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். பல நூல்களையும் எழுதியுள்ளார். கேம்பிரிட்ஜில் உள்ள 'இன்டர்நேஷனல் பயாகிராபிக்கல் சென்டர்' டாக்டர் வசந்தா கந்தசாமியை சாதனைபுரிந்த 'உலகப் பெண்கள்' (1997-1998) விருதுக்குத் தேர்ந்தெடுத்துள்ளது.

சென்னை நகரப் போக்குவரத்துக் குறித்த ஆய்வு, மக்களின் தேவைக்கும் தொழிற் சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் அளவுக்கும் இடையே உள்ள உறவு நிலைகள், இந்திய அரசியலில் பொருளாதாரமும் சாதியும் குறித்த கணித ஆய்வுகள் முதலியன இவரது அண்மைக்கால ஆய்வுகள்.

இவரது சிறந்த ஆய்வுகள் மூலம் உலகின் கவனத்தைக் கவர்ந்தாலும், இவருக்குரிய அங்கீகாரத்தை சென்னை ஐ.ஐ.டி தர மறுக்கிறது என்பதே உண்மை.

* * *

# புத்தகச்சந்தை வளாகம்: தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை!

புத்தகச் சந்தை வளாகம் அமைக்க தமிழ்நாடு அரசு முன் வரவேண்டும் என்று பதிப்பாளர் வானதி திருநாவுக்கரசு கோரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:—

ஆண்டு தோறும் தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்கம், புத்தகக் கண்காட்சி நடத்தி வருகிறது. ஒரே இடத்தில் புத்தகச் சந்தையை உருவாக்கி மக்களின் அறிவு வளர்ச்சிக்கு இச்சங்கம் பாடுபடுகிறது. புத்தகக் கண்காட்சிக்கு வாசகர்கள் பெருமளவு வருவதற்கு காரணம் ஒரே இடத்தில் எல்லா நூல்களையும் ஒரே நேரத்தில் பார்த்து வாங்கலாம் என்ற எண்ணத்தில்தான். டெல்லியில் நடைபெறும் உலகப் புத்தகக் கண்காட்சிக்கு இடவசதி முதல் அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்கிறது. அதைப் போல் தமிழக மக்கள் பெரிதும் வரவேற்கும் இப்புத்தகச் சந்தைக்கு வளாகம் அமைப்பதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் அரசு செய்யவேண்டும்.

மக்கள் இப்போது சுய முன்னேற்ற நூல்களையும் தொழில் வாய்ப்புக்குரிய நூல்களையும் பெரிதும் விரும்பிப் படிக்கிறார்கள். அத்துடன் மதியை பெருக்கி விதியை எப்படி வெல்லலாம் என்று யோசனைகள் கூறக் கூடிய நூல்களையும் அறிவியல் நூல்களையும் பெரிதும் விரும்புகிறார்கள். தொலைக்காட்சி ஊடகத்தாலும் சினிமாவாலும் புத்தக விற்பனை பாதிக்கும் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. தொலைக்காட்சியை ஒருவர் பல மணி நேரம் பார்த்துக் கொண்டே இருக்க முடியாது. நினைக்கும் பொழுதெல்லாம் புத்தகத்தை படிக்க முடியும். இவ்வாறு வானதி திருநாவுக்கரசு கூறினார்.

# அவுஸ்திரேலிய மதகுரு கொலை தலைவர்கள் கவலை!

(24.01.1999)

அவுஸ்திரேலிய மதகுரு கிரஹாம் ஸ்டுவர்ட் ஸ்டெயின் அவரது இரு மகன்களும் எரித்து கொலை செய்யப்பட்டது குறித்து விசாரிப்பதற்காக சம்பவம் நடந்த ஒரிசா மாநிலம் மனோகரபுரத்துக்கு மத்தியக்குழு அனுப்பப்படும் என்று உள்துறை அமைச்சர் அத்வானி தெரிவித்தார். ஒரிசா சம்பவம் குறித்து டெல்லியில் ஞாயிற்றுக்கிழமை உள்துறை அமைச்சக அதிகாரிகளுடன் அத்வானி ஆலோசனை நடத்திய பிறகு நிருபர்களுக்கு அளித்த பேட்டி பஜ்ரங்தள தொண்டர்கள்தான் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறதே என்று கேட்டபோது, அதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால் இதில் தமக்கு தொடர்பு ஏதும் இல்லை என்று விஎச்பி. மறுத்துள்ளது என்றார் அத்வானி. இக்கொலை சம்பவத்துக்கு குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தொழுநோயாளிகளுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த அந்த நல்லவருக்கு நன்றி சொல்லி பாராட்டுவதைவிட்டு இப்படி கொடூரமாக கொலை செய்தது கடுமையாக கண்டிக்கத்தக்கது என்றார் அவர். பிரதமர் வாஜ்பாயும் கண்டித்துள்ளார். கொலையாளிகள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு கடும் தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

கல்லூரி மாணவர்கள் உட்பட 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஒரிசா மாநில டிஜிபி பாண்டா தெரிவித்தார்.

இக்கொலையில் முக்கியக் குற்றவாளியான ரவீந்திர குமார் பால் குறித்து தகவல் கொடுத்தால் ரூ.25 ஆயிரம் பரிசளிக்கப்படும் என்று பொலிசார் அறிவித்துள்ளனர். அவரது புகைப்படம் டிவி, பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது.

# சொத்து விபரங்களை அமைச்சர்கள் அறிவிக்க வேண்டும்! – பிரதமர் வாஜ்பாய்

(25.01.1999)

குடும்பத்தினர் உட்பட தங்களின் அனைத்து சொத்துக்களின் மதிப்புகளையும், அவற்றின் பட்டியல்களையும் மத்திய அமைச்சர்கள் இம்மாத இறுதிக்குள் தாக்கல் செய்யவேண்டும் என்று பிரதமர் வாஜ்பாய் கட்டளையிட்டுள்ளார்.

பிரதமர் வாஜ்பாய் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும், தாங்கள் மிகவும் வெளிப்படையான ஒரு ஆட்சியை நடத்தப்போவதாக அறிவித்திருந்தார். அதன்படி தன்னுடைய அமைச்சரவையில் உள்ள அனைத்து அமைச்சர்களும் தங்களுடைய சொத்து விபரங்களை வெளியிடுவார்கள் என்று பிரதமர் வாஜ்பாய் முன்பு கூறியிருந்தார்.

இதற்கு முன்பு சில அமைச்சர்கள் பல்வேறு வடிவில் வெவ்வேறு திகதியிட்டு, வெவ்வேறு திகதி வரம்புகளில் தங்களின் சொத்து விபரங்களை வெளியிட்டு இருந்தனர். அதனால் இப்போது இது குறித்த விரிவான விளக்கத்தையும், அச்சிட்ட படிவத்தையும் பிரதமர் வாஜ்பாய் அமைச்சர்களுக்கு அளித்துள்ளார்.

இது சம்பந்தமாக, தன்னுடைய அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களுக்கு பிரதமர் வாஜ்பாய் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இந்த கடிதத்துடன் ஒரு விளக்கப்படிவத்தையும் அவர் இணைத்து அனுப்பியுள்ளார்.

அமைச்சர்களுக்கு பிரதமர் வாஜ்பாய் எழுதிய கடிதத்தில், சொத்து விவரங்களையும், அதன் மதிப்புகளையும் இந்த மாத இறுதிக்குள் தாக்கல் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார், அமைச்சர்கள் தங்கள் பேரில் உள்ள சொத்து விவரங்களை மட்டுமல்லாது, அவர்களது குடும்பத்தினரின் நெருங்கிய உறவினர்களின் சொத்து விவரங்களையும்கூட தாக்கல் செய்ய வேண்டும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

அமைச்சர்களின் சொத்து விவரப்பட்டியல்கள், அறிக்கைகளின் நகல்கள் பாராளுமன்ற நூலகத்தில் வைக்கப்படும் என்றும் அந்தக் கடிதத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அவரின் கடிதத்தில் மேலும் கூறியிருப்பதாவது:

சென்ற ஆண்டு மார்ச் மாதம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே அமைச்சர்கள், அவர்களது உறவினர்கள் ஆகியோரின் சொத்து விவரங்களை வெளியிட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. மேலும், பொது மக்களுக்கு வெளியிடுவதற்கு 90 நாட்களுக்கு முன்பே பிரதமருக்கு அதை தெரிவிக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி சென்ற ஆண்டு மார்ச் 31-ம் திகதி முடிவடைந்த காலவரம்புக்குட்பட்டு, அனைத்து சொத்து விவரங்களையும் அமைச்சர்கள் இம்மாத இறுதிக்குள் தாக்கல் செய்யவேண்டும்.

இவ்வாறு பிரதமர் வாஜ்பாய் அமைச்சர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் பிரதமர் வாஜ்பாய் உறுதி!

(22.01.1999)

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற மாநிலங்களிடை மன்றக்கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் பிரதமர் இக்கருத்தை வெளியிட்டார். இந்தக் கூட்டத்தில் மாநிலங்களின் முதல்வர்கள், மத்திய அமைச்சர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தமிழ்நாடு சார்பாகச் சட்ட அமைச்சர் ஆலடி அருணா கலந்துகொண்டார். இது மாநிலங்களிடை மன்றத்தின் ஐந்தாவது கூட்டமாகும். அக்கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:—

சுதந்திரத்திற்குப் பின் மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டன. அதனால் தேசியப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. முந்தைய அரசுகள் மத்தியில் அதிகாரங்களைக் குவித்ததால் மாநில அரசுகள் பலவீனமடைந்துவிட்டன. அரசு தம்மிடம் அதிகாரத்தை வைத்துக்கொள்ள முனைவதால் பஞ்சாயத்து அமைப்புகளும் பலவீனமடைந்து விட்டன. எமது அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை பகிர்ந்து அளிக்க உறுதி பூண்டுள்ளது. மத்திய அரசும் மாநில அரசுகளும், பஞ்சாயத்து அமைப்புகளும் பலமாக இருந்தால் தான் பலமான இந்தியாவை உருவாக்க முடியும் என்றார் பிரதமர் வாஜ்பாய்.

## வாய்மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

☺ இந்த ஆண்டு எழுத்தாளர்களுக்கு- அவர்கள் எழுதும் நாவல்கள் கவிதைகள், கட்டுரைகளுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெருகும், இலக்கிய ஆர்வம் கொடிகட்டிப் பறக்கும், தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிடும் பதிப்பகங்களின் விற்பனை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு பெருகும் என்பதை - இந்த ஆண்டின் தொடக்கத்திற்கு முன்பு - போன ஆண்டின் இறுதியில் காலச்சுவடு பதிப்பகம் நடத்திய வெளியீட்டு விழா சொல்லாமல் சுட்டிக்காட்டிவிட்டது. அரங்கு நிறைந்து, மாடிப்படிகள் வரையில் வாசகர் கூட்டம். உள்ளே உட்கார இடமில்லை. கௌரவம் பார்க்காமல் பல பேர் கிடைத்த இடத்திலே தரையிலேயே அமர்ந்துவிட்டார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக நிகழ்ச்சி முடியும் வரையில் கூட்டம் கலையவில்லை. விற்பனையும் அற்ப சொற்பமல்ல. அன்று வெளியிடப்பட்ட புத்தகங்கள் அந்தச் சில மணி நேரங்களில் மட்டும் 43000 ரூபாய்க்கு விற்றிருக்கின்றன என்றால் இந்த ஆண்டின் தொடக்கமே அல்லது போன ஆண்டின் இறுதியே தமிழக இலக்கியத்திற்கு ஜோதிடர்கள் பாசையில் யோக காலமாக அமைந்திருக்கிறது என்று சொல்வதில் என்ன தவறு இருக்க முடியும்.

*– 15-01-1999 நக்கீரன் இதழில் சின்னக்குத் தூசியின் கட்டுரை*

❀ ❀ ❀

☹ கவிஞர் வைரமுத்து ரொம்பவும் வருத்தப்பட்டார். 'தமிழ்க்கொலை' நடக்கிறதே என்று கண்ணீர் விட்டார். என்ன செய்ய? அவராலேயே தடுக்க முடியவில்லையே! கண்ணெதிரே தோன்றினாள் படத்திற்காக பாடல் பதிவு நடந்தபோது தற்செயலாக அங்கு போயிருக்கிறார். இவர் எழுதிக்கொடுத்த பாடலை உதித் நாராயணன் பாடிக்கொண்டிருந்தார். 'பிரியமான பெண்ணை ரசிக்கலாம்' என்ற கவிஞர் எழுதிக் கொடுத்த வரியை, பாடகர் 'பெரியம்மா பெண்ணை ரசிக்கலாம்' என்று பாடிக்கொண்டிருந்தாராம். பிறகென்ன வைரமுத்து அர்த்தமும் திருத்தமும் சொல்லியிருக்கிறார்.

திரைப்பாடல்களில் குரல் இனிமை வேண்டும் என்பதற்காக தமிழ் புரியாதவர்களைக் கொண்டு வந்தவர்களில் முதல் குற்றவாளி ஏ.ஆர். ரகுமான்தான். கவிஞர் தடுத்து நிறுத்துவாரா? அடுத்து யுத்தத்தை தமிழன் சந்தித்து நூற்றாண்டுகள் ஆகிவிட்டது என்றார் கவிஞர். ஈழத்தை எப்படி மறந்தார் இவர்?

*– தேவி ரம்ழான் சிறப்பிதழில்*

❀ ❀ ❀

☹ இந்தியாவில் பெண்களுக்கு எதிரான பெருங்கொடுமை என்று எதை நினைக்கிறீர்கள்?

பாலியல் பலாத்காரம்தான். கடந்த வருடம் மட்டும் பெண்கள் தாக்கப்பட்டதாக ஒன்றரை லட்சம் வழக்குகள் பதிவாகி இருக்கின்றன. 1988-ம் வருட முதல்பாதியில் மட்டும் ஒரு நாளுக்கு நான்கு பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டதாக வழக்குகள் பதிவாகியுள்ளன.

ஒரு நாளைக்கு நான்கு கற்பழிப்புகள்? இதை இந்தியா தாங்குமா? ஒரு சாதிக்கலவரம் நடந்தால் கூட சாதி வெறியர்களின் முதல் இலக்கு எதிர் இனப் பெண்கள்தான். இதில் அதிகம் பாதிக்கப்படுவது தலித் பெண்கள்தான்.

*– 20-01-1999 தமிழன் எக்ஸ்பிரஸ் இதழின் பேட்டியில் அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கப் பொதுச் செயலாளர், பிருந்தா கரத்.*

❀ ❀ ❀


☺ காகிதத்தில அச்சாகிற படத்திற்கே சபலம் ஆகிறவன் நேரில் ஒரு அழகான பெண்ணைப் பார்த்தாலும்தான் சபலம் ஆவான். அதற்காக நேரில பெண்ணுங்க வரக் கூடாதுன்னு சொல்ல முடியுமா?

*– பெண்மணி பொங்கல் சிறப்பிதழில் ஓவியர் ஜெயராஜ்*


❀ ❀ ❀

☺ இராமேஸ்வரத்திற்கும் தனுஷ்கோடிக்கும் இடையில் உள்ள கடல் சேதுக்கடல் எனச் சொல்லப்படும். சேது என்றால் சிவப்பு என்று பொருள். இப்பகுதி பவளப்பாறை நிறைந்தது. எனவே சேதுக்கடல் எனப் பெயர்பெற்றது. சேது என்றால் பாலம் என்று பொருள். இந்த இடத்தில் கடலில் பாலம் கட்டி இராமரும் வானரப்படையும் இலங்கைக்குச் சென்றார்கள். இதனாலும் சேது என்ற பெயர் பெற்றது. சேதுக்கடல் பகுதி இராமநாதபுரம் மன்னர்களுக்கு சொந்தமானது. எனவே அவர்களை சேதுபதி என்று சொல்வார்கள். அங்குள்ள பெருமாளுக்கு சேதுமாதவப் பெருமாள் என்று பெயர். இராமேஸ்வரம் தல புராணம் சேது புராணம் என்று பெயர் பெற்றது. இராமருக்கே சேது ராமன் என்று பெயர் உண்டு. இராமேஸ்வரம் கடலில் நீராடுவதை சேதுக்குளியல் என்பார்கள். தனுஷ்கோடியில் உள்ள தீர்த்தக்கட்டம் சேது என்று சொல்லப்படும்.

*– ராணி ரம்ழான் இதழில்*



# மரண அறிவித்தல்



தோற்றம்:

03 – 05 – 1962

மறைவு:

23 – 01 – 1999

# ஆறுமுகம் இளங்கோ

புங்குடுதீவு 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற
இளைப்பாறிய தலைமை ஆசிரியர்
திரு. ஆறுமுகம் - திருமதி பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வன்
ஆறுமுகம் இளங்கோ அவர்கள் 23.01.99 சனிக்கிழமை அன்று
சுவிசில் அகால மரணமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவர், கௌறிஷன் கௌசிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும்
மைதிலி (கனடா), இளங்கீரன் (கனடா), இளங்குமரன் (கோபு-
பாரிஸ்) ஆகியோரின் சகோதரரும், ஜெனோதாஸ் (கனடா),
புனர்ச்செல்வி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவர்.

உற்றார் உறவினர், நண்பர்கள் இத் தகவலை
ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**

*0033 (1)46 71 55 60 (பாரிஸ்)*
*001 44 16 42 57 082 (கனடா)*

**தகவல்:**

*இளங்குமரன் (கோபு-பாரிஸ்)*
*(சகோதரன்)*




## ஈராக்

# அமெரிக்க உதவியை ஏற்க குர்திஷ் அமைப்பு மறுப்பு

(24.01.99)

ஈராக்கின் 'வட' பகுதியில் இயங்கிவரும் பிரதான குர்திஷ் எதிர்க்குழுவினர் அமெரிக்கா வழங்க விரும்புவதாகக் கூறும் உதவித் தொகையை ஏற்க மறுத்துள்ளனர். அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் ஈராக்கில் ஜனாதிபதி சதாம் ஹூசேனை பதவியில் இருந்து அகற்ற எதிர்க்கட்சிகளைக் கொண்ட கூட்டணியொன்றை அமைக்கவேண்டும் என்றும் அதற்கு தமது அரச நிதி உதவிகளை வழங்கும் என்றும் கூறியிருந்தார். இதன்படி ஈராக்கிற்கு உள்ளேயும் வெளியேயும் இயங்கும் ஏழு எதிர்க் குழுக்களுக்கு தாம் 97 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்கப்போவதாயும் அறிவித்திருந்தார். இந்த அறிவித்தலை ஈராக்கிற்குள் இயங்கும் குர்திஷ் தான், ஜனநாயகக் கட்சியினர் ஏற்க மறுத்துள்ளனர். அக்கட்சியின் தலைவரான மசூத் பர்சானி இதுபற்றிக் கூறுகையில் எமக்கு இவ்விதமான உதவிகள் அவசியமில்லை. நாம் அவற்றைப் பெற்றுக்கொள்ளவும் மாட்டோம். நாம் அவற்றில் தங்கியிருக்கவில்லை. என்றவர் தமக்கு சதாம்ஹூசேனை பதவியில் இருந்து அகற்றும் எண்ணமும் கிடையாது எனக்கூறினார்.

இதற்கிடையே தெஹெரானை மையமாகக் கொண்டியங்கும் ஈராக்கிய புரட்சிகர சபையினர் தாம் இந்த அமெரிக்க உதவியை ஏற்றுக்கொள்வதாக அறிவித்திருந்தனர். இதேபோன்று சியாத் மதப்பிரிவைச் சேர்ந்த இலண்டனை மையமாகக் கொண்டியங்கும் இரண்டு அமைப்புக்களும் ஜோர்தானை மையமாகக் கொண்டியங்கும் ஓர் அமைப்பும் கிளின்டனின் உதவி அறிவிப்பை ஏற்றுக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல்

# வெளியேற்றப்பட்ட பாதுகாப்பு அமைச்சர் புதிய கட்சி அமைத்தார்

(24.01.99)

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவினால் கடந்த சனியன்று பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட பாதுகாப்பு அமைச்சர் யிட்சாக் மோர்தேசாய் புதிய கட்சியொன்றினை அமைத்து எதிர்வரும் மே மாதம் 17-ம் திகதி இடம்பெற இருக்கும் தேசியத் தேர்தலில் பங்குபற்றி இருப்பதாக அறிவித்துள்ளார். இவர் கடந்த ஞாயிறன்று டெல் அவீவில் ஆதரவாளர்கள் மத்தியில் பேசியபோது, 'இன்று நாட்டிற்கு உண்மையான ஓர் தலைமைத்துவம் அவசியம். அதுவும் நம்பிக்கைக்குரிய தலைமையாக இருக்கவேண்டும். சரியான வழியை காட்டக்கூடிய தலைமைத்துவம் அமைய வேண்டும்' எனக் கூறினார். இவரது புதிய நடுநிலைக் கட்சிக்கு இதுவரை பெயரேதுவும் இடப்படாத நிலையில், இஸ்ரேலின் நான்கு வலதுசாரித் தலைவர்கள் இணைந்துகொள்வார்கள் என நம்பப்படுகிறது. முன்னாள் இராணுவத் தலைவர் லிப்கின் - சாஹக், முன்னைநாள் நிதி அமைச்சர் டன் மெரிடோர், முன்னாள் டெல்அவீவ் நகர மேயர் ரொனிமிலோ போன்றவர்களே புதிய கட்சியில் இணைந்து கொள்பவர்களாவர்.

கடந்தவாரம் நத்தன்யாகுவின் அமைச்சரவையில் இருந்து மிகவும் பிரபல்யமான அங்கத்தவரான மொர்தேசாய் வெளியேற்றப்பட்டபோது அவர் தனது எதிரிகளான லிப்கின் -சாஹக் மற்றும் சில நடுநிலைவாதிகளுடன் தொடர்புகொண்டிருந்தார் என குற்றம்சாட்டப்பட்டது. ஈராக்கிய குர்திஷ்தானில் 1944-ம் ஆண்டு பிறந்த இவர் தனது உயர் கல்வியை கேம்பிரிச் பல்கலைக் கழகத்தில் முடித்தார். பின்னர் இஸ்ரேலில் கலந்துகொண்ட பிரசித்திபெற்ற சண்டைகள் யாவற்றிலும் முக்கிய பங்கினை வகித்தவர் 1996-ம் ஆண்டு ஜூன் மாதம் நத்தன்யாகு பிரதமராக பதவி ஏற்றபோது அவரது அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராக பதவி ஏற்றார்.

கடந்த வருடம் அமெரிக்காவில் கைச்சாத்திடப்பட்ட அமைதி ஒப்பந்தத்தினை வரவேற்ற இவர் அதனை நடைமுறைப்படுத்துவதில் பிரதமர் நத்தன்யாகு பின் நிற்கின்றார் என்றும் நத்தன்யாகு வெளியேறும் வழியில்லாத ஓர் பாதையினூடு செல்ல முற்படுகின்றார் என்றும் குற்றம் சாட்டியிருந்தார்.

இதற்கிடையே எதிர்த்தரப்பில் உள்ள தொழிலாளர் கட்சியின் தலைவர் எகுட் பரக் தான் மொர்தேசாய் பதவி விலகியதை யிட்டு சந்தோஷமடைவதாயும் தனது அரச அமையும் பட்சத்தில் இவர் தன்னுடன் இருக்க வேண்டும் என்றும் விரும்புவதாயும் கூறினார்.

## எகிப்து

# பேருந்து பாலத்திலிருந்து கவிழ்ந்ததில் 22 பேர் மரணம்

(25.01.99)

எகிப்தின் இரண்டு நகரங்களிற்கிடையே சேவையில் ஈடுபடும் பேருந்து ஒன்று தலைகீழாக கவிழ்ந்ததில் 22 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 21 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினார்கள். இப்பேருந்து தலைநகர் கெய்ரோவில் இருந்து, 400 மைல் தொலைவில் உள்ள நைல்நதிக் கரை நகரமான சோஹாக் இலிருந்து தலைநகரை நோக்கி வந்துகொண்டிருந்த சமயம் தலைநகரின் மையப்பகுதியில் ஒருபாலமொன்றில் இருந்து கீழே தலைகீழாக விழுந்தது.

இப்பேருந்து விழுந்த நெருங்கிய பகுதி பெருமளவு மக்கள் கூடும் இடமாக இருந்தபோதிலும் இந்த விபத்திலிருந்து உயிராபத்து குறைக்கப்பட்டுள்ளது அதிர்ஷ்டவசமானது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். அத்துடன் இதே பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவது வழக்கம் என்றும் இப் பகுதியில் இம்மாதத்தில் ஏற்பட்ட ஐந்தாவது விபத்து இது என்றும் இதே பகுதியில் கடந்த 6-ம் திகதி இரண்டு பேருந்துக்கள் மோதிக்கொண்டதில் ஒரு ஜேர்மன் உல்லாசப்பயணி உட்பட 9 பேர்கள் காயமடைந்தனர். பின்னர் இதே பகுதியில் 13-ம் திகதி நடந்த மற்றுமோர் விபத்தில் 9 பேர் இறந்தும் 32 பேர் காயமடைந்தனர். இதேவேளை எகிப்தின் வடபகுதியில் கடந்த சனியன்று நடந்த ஒரு விபத்தில் 12 பேர் கொல்லப்பட்டு 16 பேர் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அங்கோலா

# ஐந்து ஆபிரிக்க நாடுகளை அங்கோலா குற்றம் சாட்டுகிறது யுனிட்டாவிற்கு உதவுகின்றனவாம்

(23.01.99)

அங்கோலாவில் மீண்டும் தோற்றம் பெற்றுள்ள அரச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு சில ஆபிரிக்கநாடுகள்தான் காரணமென அங்கோலா குற்றம்சாட்டியுள்ளது. அங்கோலாவின் தலைவர் ஜோசே எடுவார்டோ தோசன்டோஸ் இதுவரை காலமும் ஆபிரிக்க நாடுகள்தான் காரணம் எனக்கூறிவந்தபோதிலும் இதுவரை எந்தவொரு நாட்டையும் நேரடியாகச் சுட்டிக்காட்டவில்லை. ஆனால் கடந்த சனியன்று அங்கோலா அரச வெளியிட்ட அறிக்கையொன்றில் பூர்கினாபாசோ, டோகோ, ருவாண்டா, உகண்டா மற்றும் சாம்பியா போன்ற நாடுகள் அங்கோலா போராளிகளுக்கு மீள ஆயுதங்களை வழங்கியுள்ளதாக குற்றம்சாட்டியுள்ளது. அத்துடன் அமைதியை ஏற்படுத்தவேண்டுமெனக் கூறிவரும் ஐ.நா. சபை கூட ஜோனாஸ்சாவிம்பியின் அமைப்புடன் சற்று இலகுவாகவே நடந்துகொள்கின்றதென அங்கோலா குற்றம்சாட்டியது.

கடந்த டிசெம்பர்மாதம் 5ம் திகதி அங்கோலா அரசதரப்பினர் மத்திய மலைப்பகுதியில் அமைந்திருந்த யுனிட்டா அமைப்பினரின் பலப்பிராந்தியம் மீது தாக்குதலை நடாத்த ஆரம்பித்தனர். ஆனால் யுனிட்டா அமைப்பினர் அத்தாக்குதலை முறியடித்ததோடு மட்டுமல்லாது நாட்டின் பல பாகங்களிலும் அரச படைகள் மீது தாக்குதலை நடத்தினர். இன்று மீண்டும் ஆரம்பித்துள்ள யுத்தமானது நான்கு வருடங்களாக இடம் பெற்றுவரும் அமைதி நடவடிக்கைகளுக்கு குந்தகத்தினை விளைவிக்கும் என ஐ.நா. சபையினர் தெரிவிக்கின்றனர்.

இரண்டுவாரங்களிற்குமுன் அங்கோலாவில் இரண்டு ஐ.நா விநியோக விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து அங்கு ஐநாவின் கண்காணிப்பு குழு செயற்படுத்தப்பட வேண்டும் என ஐநாவின் செயலாளர் நாயகம் கோபிஅனான் பிரஸ்தாபித்திருந்தார். ஆனால் இன்று அந்நாட்டில் நடைபெறும் யுத்தம் காரணமாக ஐநா கண்காணிப்புக் குழுவினர் அங்கு செயலாற்ற முடியாத நிலையே தோன்றியுள்ளது என ஐநாவின் பேச்சாளர் ஒருவர் கருத்துத்தெரிவித்தார். முன்னாள் போத்துக்கேய காலனி நாடான அங்கோலாவில் 30 வருட காலமாக தொடர்ந்து யுத்தங்களே நடந்துவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

உலகுவாழ் தமிழ் கலைஞர்கள், அறிஞர்கள்,
பொதுப்பணியாளர்கள் போன்றோர்களை ஒன்றிணைக்க
சித்திரை முதல் வாரப்பத்திரிகையாக வெளிவரவிருக்கின்றது

**தாகம்**

வன்னைத் தெய்வம், துரைஸ், அமின், இராஜநாயகம் France
வண. பிதா குசைநாதன் Belgium,
ஸ்ரீரங்கன் - England,
முருக பூபதி - Australia,
வீரகேசி மூர்த்தி - Canada,
என்.எஸ்.பிரபு - Norway,
பொன்னண்ணா - Denmark,
சவுந்தர் - Holland,
செல்வராஜா - Switzerland,
தன்னம்பிக்கை பாலசுப்பிரமணியம் - Malaysia,
அமலதாஸ் - Italy,
நமினை விஜயன், சிவனடியான் ஸ்ரீபதி - Germany

ஆகியோரின் செயல்பாட்டில்

தத்தம் கலைப்படைப்புகள், ஆற்றல்கள், ஆலோசனைகள்,
பொதுப்பணிகள் மூலம் உங்கள் மனதைக் கொள்ளை
கொண்டவர்களின் வாழ்க்கைச் சரித்திரம்,
உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் கலை கலாச்சார
விளையாட்டு நிகழ்வுகள், சின்னஞ்சிறு கதைகள்,
சித்திரத்துணுக்குகள், சிறுவர்களுக்கான ஆக்கங்கள்
போன்றவற்றை வாரப்பத்திரிகை தாகம் ஊடாக உலகுவாழ்
தமிழர்கள் அறிய நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
**Thaagam, P.o.Box 750162, 60531 Frankfurt, Germany**

## ஈராக்

# பாஸ்ரா நகர் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்

(25.01.99)

அமெரிக்க பிரித்தானிய ஏவுகணைகள் கடந்த திங்களன்று ஈராக்கின் தென்பகுதி நகரான பாஸ்ராவைத் தாக்கின என்றும் சன நடமாட்டம் அதிகரித்திருந்த மக்கள் பகுதிகளிலேயே இந்த ஏவுகணைகள் வீழ்ந்து வெடித்தன என்றும் இதனால் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாயும் ஈராக்கின் உத்தியோகபூர்வ செய்தித் ஸ்தாபனம் அறிவித்துள்ளது. திங்களன்று காலை 9.00 மணியளவில் இடம்பெற்ற இந்த தாக்குதலில் ஏராளமான வீடுகள் நிர்மூலமாகின என்றும் ஏராளமான சிறுவர்களும், குழந்தைகளும் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏவுகணைத்தாக்குதல் இடம்பெற்ற பகுதிகளில் இருந்துவரும் தகவல்களின்படி சவுதிஅரேபியா பக்கமிருந்தே இந்த ஏவுகணைகள் புறப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் சவுதியரேபியாவில் முகாமிட்டிருக்கும் அமெரிக்க படைகள் இதுபற்றி உடனடியான கருத்துக்கள் எதனையும் கூறவில்லை.

அமெரிக்க விமானங்கள் ஈராக்கின் தென்பகுதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது வழக்கம். அண்மையில் பிரித்தானிய அமெரிக்க விமானங்கள் ஈராக்கில் நடத்திய தாக்குதல்களின் பின் இப் பகுதிகளில் ரோந்து செல்லும் அமெரிக்க விமானங்கள் மேல் ஈராக் தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளது. இப்பகுதியில் ஈராக்கின் விமானங்கள் பறப்பதை அமெரிக்கா 1991ம் ஆண்டு முதல் தடை செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# 1999ம் ஆண்டிற்கான தமிழர் நிகழ்ச்சி நிரல் - பிரான்ஸ்

**ஜனவரி**

08.01.1999 . 17.01.1999 தை பிறந்தால் வழி பிறக்கும் உண்டியல் வாரம்.
14.01.1999 - "தமிழ்சசோலை" பொங்கல் விழாக்கள்
17.01.1999 - தளபதி கேணல் கிட்டு மற்றும் ஒன்பது தோழர்களினதும் 6ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு (வீரச்சாவு 16.01.1993) - பிராந்தியம் 78
24.01.1999 - "ஒளிவிழா" (புனர்வாழ்வுக் கழகம்) Bagnolet, Montreuil.

**பெப்ரவரி**

20.02.1999 - "செஞ்சோலை மாலை" (தமிழ்ப் பெண்கள் அமைப்பு - செவ்றோன்)

**மார்ச்**

14.03.1999 - சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு (மார்ச் 08) **"சுதந்திரக் கீற்று"** (தமிழ்ப் பெண்கள் அமைப்பு - பிரான்ஸ்)

**ஏப்ரல்**

18.04.1999 - "கரப்பந்தாட்டம்" மாவீரர் நாள் விளையாட்டுப் போட்டி - 99
25.04.1999 - உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின் 11ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு "செஞ்சோலை கலை மாலை" தமிழ்ப் பெண்கள் அமைப்பு - சார்சல்
25.04.1999 - "பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம்" மாவீரர் நாள் விளையாட்டுப் போட்டி 99

**மே**

01.05.1999 - **மே தின அணிவகுப்பு** (தொழிலாளர் தினம்) - மாணவர் அமைப்பு பிரான்ஸ் -
16.05.1999 - சதுரங்கம், கரம் மாவீரர் நாள் விளையாட்டுப் போட்டி - 99
16.05.1999 - **"இசை முரசு - 99"** (ஈழமுரசு)
23.05.1999 - "ஒளிவிழா" (தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - சேர்ஜி பொந்துவாஸ்)
30.05.1999 - செவ்றோன் தமிழ்ச்சங்க ஆண்டுவிழா
30.05.1999 - "துடுப்பெடுத்தாட்டச் சுற்றுப்போட்டி" மாவீரர் விளையாட்டுப் போட்டி 99

**ஜூன்**

03.06.1999 - தமிழீழ மாணவர் எழுச்சிநாள்
06.06.1999 - "கலை விழா" மாணவர் அமைப்பு - பிரான்ஸ்
13.06.1999 - மென்பந்து துடுப்பெடுத்தாட்டச் சுற்றுப்போட்டி மாவீரர் நாள் விளையாட்டுப் போட்டி - 99
20.06.1999 - "தமிழர் விளையாட்டு விழா 99" (தெரிவுப் போட்டிகள்)
27.06.1999 - **"விடுதலை மாலை"** தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ்
27,06.1999 - உதைபந்தாட்டம் தெரிவு மாவீரர்நாள் விளையாட்டுப் போட்டி - 99

**ஜூலை**

05.07.1999 - **கரும்புலிகள் தினம்** **துயர் துடைப்பு வாரம்** - தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
18.07.1999 - தடகளப் போட்டி தெரிவு மாவீரர் நாள் விளையாட்டுப் போட்டி - 99
25.07.1999 - உதைபந்தாட்டம் 2ம் சுற்றுப்போட்டி மாவீரர் நாள் விளையாட்டுப் போட்டி 99

**ஓகஸ்ட்**

01.08.1999 - மெய்வல்லுனர் போட்டிகள் முடிவு மாவீரர்நாள் விளையாட்டுப் போட்டி - 99
22.08.1999 - **"தமிழர் விளையாட்டு விழா - 99"** (இறுதி நிகழ்ச்சி)

**செப்டம்பர்**

12.07.1999 - சோதியா கலைக் கல்லூரி ஆண்டு விழா
19.09.1999 - "கலை விழா" - இவ்றி - பிராந்தியம் 91 -
26.09.1999 - தியாகி திலீபனின் 12ம் ஆண்டு நினைவுநாள் - நுவசி லு குறோண்ட் பிராந்தியம் 93

**ஒக்ரோபர்**

10.10.1999 - "கஸ்தூரி" வீரச்சாவடைந்த முதற் பெண்போராளி 2ஆம் லெப்.மாலதி நினைவாக (10.10.1987) - தமிழ்ப் பெண்கள் அமைப்பு - பிரான்ஸ்

**நவம்பர்**

27.11.1999 - **"மாவீரர் நாள் 99"** விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப் பணியகம்

**டிசெம்பர்**

26.12.1999 - ஒளிவிழா - தமிழர் புனர்வாழ்வுக் கழகம்




ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# இனியாவது கண் திறக்குமா?

அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம், செய்தித்தணிக்கை ஆகிய சிறீலங்கா அரசின் 'ஜனநாயக பாதுகாவல் சின்னங்கள்' அப்படியே இருக்க வன்முறைகள் மலிந்த நிலையில் – தமிழ் குழுக்களின் 'வாய்பார்த்த' நிலையோடு சிறீலங்காவில் தேர்தல் ஒன்று நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது. வாக்களிப்பு முடிந்த கையோடு வைத்தியசாலைகள் யாவும் வன்முறைக்கு இலக்காவோரை ஏற்றுக்கொள்ள தயாரான எச்சரிக்கை நிலையில் இருந்தமை தேர்தலின் 'ஜனநாயகத் தன்மைக்கு' ஒரு உதாரணம்.

தமிழ் தேசியத்தின் மீது பேரினவாதிகளால் ஏவிவிட்ட வன்முறைகள் தற்போது 'கட்டாக்காலித்தனமாக' தமது திசை நோக்கி வருவதை சிங்களத்தின் குடிமக்கள் இத் தேர்தல் மூலமாவது கொஞ்சம் உணர்ந்திருப்பார்கள்.

சிறீலங்காவின் தேர்தல் வன்முறைகள் பற்றியோ அல்லது தேர்தல் நடாத்தப்பட்ட 'ஒழுங்கு' பற்றியோ நாம் இவ்வேளை அலசுவது 'விழலுக்கு இறைத்த நீருக்கு ஒப்பானதென்றாலும் சிறீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் தூதரக அதிகாரிகள் இத் தேர்தல் தொடர்பாக தெரிவித்திருந்த கருத்துக்கள் சற்று நோக்கத்தக்கவை.

சிறீலங்காவின் தற்போதைய அரசியல் தடைமுறைகள் தமக்கு விசனத்தை அளிப்பதாக இவர்கள் குறிப்பிட்டுள்ளனர். சிறீலங்காவில் காலத்திற்கு காலம் ஆட்சியைப் பிடிக்கும் பேரினவாத அரசுகள் தமது அரசியல் நடைமுறையிலே தமிழர் மீதான ஒடுக்கு முறைத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து வருவதும், உதவி வழங்கும் நாடுகளில் கையேந்திப் பெறும் நிதி உதவிகளில் 'கண்கட்டுவித்தைகள்' புரிந்து அதனை தமிழ் மக்கள் மீதான போருக்கு திருப்பி வருவதும் தெட்டத்தெளிவான உண்மை ஆனால், இந்நிலைகளையும், தமிழ் மக்கள் சிறீலங்காவின் யுத்தத்தில் சிக்குண்டு அல்லலுறும் உண்மை நிலையினையும் புறக்கணித்தவாறுதான் இந்நாடுகள் சிறீலங்காவிற்கு நிதியுதவிகளை வழங்கி வந்திருக்கின்றன.

சிங்கள தேசத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே தாம் நிதியுதவி வழங்குவதாகவும் யுத்தத்திற்கு செலவு செய்யவல்ல எனவும் நிதி வழங்கும் நாடுகள் அடிக்கடி ஒப்புக்கு கூறினாலும், சிறீலங்கா தமது நிதியை கையாளும் விதம் குறித்து இவர்கள் முறையான ஆய்வுகளைச் செய்யவில்லை என்பது வருந்தத்தக்க விடயம்.

எனவே சிறீலங்காவின் வடமேல் மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக தாம் தெரிவித்த கருத்துக்களை ஆரம்பப் படியாகக்கொண்டு மேற்குலகின் நிதி வழங்கும் நாடுகள் சிறீலங்காவிற்கான தமது நிதி வழங்கலை மறுபரிசீலனை செய்வதுடன், தமிழ் தேசியத்தின் நியாயமான அவாவினையும் புரிந்துகொள்ளவேண்டும்.

# ஆளுமையும் முரண்பட்ட நலன்களும்

பார்வை

தென்தமிழீழத்தில் இரு 'மாநாடுகள்' இடம்பெற்றுள்ளன. நோர்வே நாட்டு தூதுவர் தனது அரசு நிதி வழங்கி செயற்படுத்தும் திட்டங்கள் தொடர்பான கருத்தரங்கொன்றை மட்டக்களப்பில் நடாத்தினார். சிங்கள தரைப்படைத் தளபதி தமது தமிழ் துணைப்படைகளை அழைத்து மற்றுமொரு பாதுகாப்பு சந்திப்பை நடாத்தினார்.

முன்னைய கருத்தரங்கில் இராணுவ ஆக்கிரமிப்பில் இல்லாது விடுவிக்கப்பட்ட தமிழர் பிரதேசங்களிற்கும் நோர்வே உதவித்திட்டம் பயனளிக்கவேண்டும் என மட்டக்களப்பு தமிழ் உயரதிகாரிகள் நோர்வே தூதுவரிடம் வேண்டுகோள் முன்வைத்தனர். பின்னயதில் ஈ.பி.ஆர்.எல்.எவ். ராசிக்கும், ரெலோ அன்வரும் எப்படி காட்டிக் கொடுப்பது என்பதுபற்றி தரைப்படைத்தளபதியிடம் பாடம் எடுத்தனர்.

இச் சந்திப்புக்கள் 'துருவங்களாகும்' தமிழ்-சிங்கள நலன்களை கோடிட்டுக்காட்டுகின்றன.

விடுவிக்கப்பட்ட தமிழர் பிரதேசங்களை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும் என்ற நியாயபூர்வமான அழுத்தத்தை தமிழ் உயரதிகாரிகள் ஏற்படுத்தினர். இது தமிழர் நலன்சார் விடயமாகும். படிப்படியாக பல்வேறு கிராமங்களும், நகரங்களும் புலிகளினால் விடுவிக்கப்பட்டு தமிழர் சுய அரசு தாபிக்கப்படுவதை நிராகரித்து தமது ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளில் மட்டும் சிவில் நிர்வாகம் நடைபெறுகிறது என உலகுக்குச் சொல்ல வேண்டிய சிங்கள இராஜதந்திர உத்தியை தமிழர்கள் முன்வைத்த கோரிக்கை தோற்கடிக்க முயல்கிறது. நியாயபூர்வமாக, போரில் உணவு-மருத்துவ வசதிகளும் மக்களுக்கு எதிரான (எதிர்த்தரப்பு வீரர்களுக்கு எதிராகக்கூட) ஆயுதமாக பாவிக்கப்படக்கூடாது. சிங்கள அரசு அதனை மீறுகிறது. சுய உற்பத்திமூலம் உணவு பஞ்சத்தை போக்க முயலும் விடுவிக்கப்பட்ட பிரதேச மக்களின் முயற்சியை இல்லாதொழிக்கும் பாரிய சதி திட்டத்தின் ஒரு பகுதியாக சர்வதேச உதவிகள் இம்மக்களைச் சென்றடையும் பாதைகளையும் சிங்கள அரசு மூடிவிடுகிறது. பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் சந்திரிகா/கதிர்காமர் குழுவினால் இழுத்து மூடப்பட்டு விரட்டப்பட்டுவிட்டன.

தமது இழுப்புக்கு விட்டுக்கொடுக்கும் ஐ.நா நிறுவனத்தின் உப பிரிவுகளை மட்டும் சிங்கள அமைப்பு விட்டுவைத்துள்ளது. இது ஒரு சமப்படுத்தும் வித்தையாகும். அரசியல் சக்திகளால் வழிநடாத்தப்படும் சர்வதேச அமைப்புக்களை தமது இராஜதந்திர வித்தைகள் மூலம் கையாளலாம் என்ற அடிப்படை உகைத்துடன் UNDP, WHO (உலக சுகாதார நிறுவனம்), FAO (உணவு விவசாய நிறுவனம்) என்பவற்றை சாதுர்யமாக கையாளும் சிங்களம் 'நோறாட்' போன்ற உதவி நிறுவனங்களை சர்வதேச விதிகளைக்காட்டி கட்டுப்படுத்துகின்றது. தம்மை மீறி நடந்து கொண்ட 'பீஸ் பிரிகேட்' போன்றனவற்றை நாட்டைவிட்டு வெளியேற்றுகின்றது.

இந் நிலையில் சர்வதேச தூதுவர்கள் மத்தியில் அடிமட்ட மக்களின் வேண்டுகோளை முன்வைத்ததன் மூலம் தென் தமிழீழ தமிழ் அதிகாரிகள் நிறுவனமயப் படுத்தப்படும் தமிழீழ கருத்துருவத்தை வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை சிறீலங்கா தரைப்படைத் தளபதி சிறிலால் வீரசூரியா தமது போர்த்திட்டத்தின் ஒரு பகுதியாக கைக்கூலி தமிழ் ஆயுதக் குழுக்களின் ஆட்பல எண்ணிக்கையை அதிகரிக்க முற்பட்டார். கூடிய அளவில் ஆட்களைச் சேர்த்து புலிகளின் ஊடுருவலைத் தடுத்து நிறுத்த உழைக்குமாறு வீரசூரியா இவர்களை பணித்துள்ளார்.

சிங்களத்திற்கு ஏற்பட்டுள்ள மனித வலுப் பற்றாக்குறையை போக்க இத் தமிழ் குழுக்களை முழு அளவில் உபயோகிக்கும் இத்திட்டமானது சிங்கள நலனை பிரதிபலிப்பது, தமிழர் நலன்களை தோற்கடிப்பதற்கான சிங்கள நலன்களை வெளிக்காட்டுவது.

இவ்வாறு தெளிவாக இனம்காணப்பட்ட நலன்சார் நடவடிக்கைகளால் தமிழ்-சிங்கள தேசியங்களில் உருவாக்கும் உந்துதல் பெறுகிறது.

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை நிராகரிப்பது என்பது சர்வதேச விதிமுறைகளுக்குள் முரணான செயற்பாடாகும். தமது ஆளுமையை இழந்துவிட்ட பகுதியில் இனப்படு கொலைகளைத் தூண்டிவிட சிங்கள அரசு ஒருபுறம் முயல்கிறது. இதற்காக பொருளாதார முற்றுகையைத் துண்டிவிடுகிறது.

மறுபுறம் போர் மூலம் ஆளுமையை மீளப் பெற முயல்கிறது.

தமிழர்கள், சிங்களத்தின் ஆளுமையை முறியடிப்பதற்கான போர் கட்டுமான திட்டங்களை அமுல்படுத்திவரும் அதே வேளை, உலக சமூகம் தமிழர் ஆளுமை உள்ள பிரதேசங்களை அங்கீகரித்தே ஆக வேண்டும் என்பதை பல்வேறுபட்டவர்களின் நடைமுறை ரீதியான ஆதாரங்களுடன் வலியுறுத்திவருகின்றனர்.

இந்தப் போராட்டத்தின் போக்கில் படிப்படியாக சர்வதேச இணக்கங்கள் ஏற்பட ஆரம்பிக்கின்றன. தமிழர்களின் வாழ்வுரிமைக்கான கோரிக்கையை நியாயமற்றது என எந்த சர்வதேச நாடுகளும் நிராகரிக்கவில்லை. இதனை உள்நாட்டு இனச்சிக்கலாக பார்த்த இவை இன்று வெளி உலக மத்தியத்துவம் தேவை என்பதை ஏற்றுக்கொள்கின்றன. இதன் அடுத்த பரிமாணமாக மட்டக்களப்பில் தமிழ் உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதுபோல் விடுவிக்கப்பட்ட/ தமிழர்களினால் ஆளப்படும் பிரதேசங்களை உலகநாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போது தான் சிக்கலை கையாளலாம் என்ற உண்மையை உலக சமூகம் இப்போது படிப்படியாக ஏற்றுக்கொள்கின்றன. சிங்களம் தமிழர் மீதான தன் அரசுரிமை என்ற சர்வதேச அங்கீகாரத்தை இப்போக்கினூடு இழந்துவிடும்.

- ராஜா




நன்றி:

# செயற்கைக்கோள் தொலைத்தொடர்புகளால் உலகம் நெருங்கிவருகிறது

*வன்னிநேரம்: பிற்பகல் 2.30*
*புதுக்குடியிருப்பில் தொலைபேசி கிணுகிணுக்கிறது. தொலைபேசியை எடுத்தவர் எவ்வித பரபரப்புமின்றி தொலைபேசி அழைப்புக்காக காத்திருக்கும் அன்னையொருவரை நோக்கி "உங்களுக்கு பாரிஸ் மகனிடமிருந்து அழைப்பு வந்திருக்கம்மா"*
*என்றதுதான் தாமதம் 10 வருடங்கள் கேட்காத தனது மகனின் குரலைக் கேட்க தொலைபேசியை நோக்கித் தாவிச் செல்கிறாள் அந்தப் பாசமிகு அன்னை.*
*இது கனவா? இல்லை கற்பனையா?*
*இல்லை. இரண்டுமே இல்லை; இது நிஜமானது. செய்மதி தொலைத் தொடர்பு பரிவர்த்தனையின் தொழிநுட்பத்தில் விளைந்த விந்தைகள்*
*இனி கட்டுரைக்குள் நுழைபுவோம்.*

தொலைபேசித் தொழில் நுட்பம் உலகை ஆக்கிரமித்து நூற்றாண்டு - சென்று விட்ட நிலையில் இன்னும் பல நாடுகள் சரியான தொலைபேசி வசதிகளைப் பெற்றுக்கொள்ள வில்லை. தொலைத்தொடர்பில் இந்நாடுகள் பின்தங்கியுள்ளதற்கு புவியியல், அரசியல் காரணங்கள் பலவற்றைக் காரணம் கூறலாம். தொலைத்தொடர்புத் துறையில் பல புதிய தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுவரும் இன்று, செயற்கைக்கோள் தொலைபேசிகள் மாத்திரமே எல்லாத் தடைகளையும் உடைத்து உலகின் எப்பகுதிக்குள்ளும் செல்லக்கூடியதாக உள்ளன.



செயற்கைக்கோள் தொலைபேசிகள் பல வருடகாலமாகவே செயற்பட்டு வருகின்றனவென்ற போதிலும், அதனது பாவனை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டே இருந்தன. இதற்கு, இத்தொழில் நுட்பத்தில் ஈடுபட்டது ஒரு சில நிறுவனங்கள் என்பதுவும், அவைகளின் கட்டுப்பாட்டில் இயக்கப்பட்ட செயற்கைக்கோள்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததுவும் காரணங்கள் எனலாம். அத்துடன் இத் தொலைபேசித்துறையில் தொடர்புக்கட்டணமும் மிக அதிகமாக இருந்ததுவும் பாவனை மட்டுப்பட்டிருந்ததற்குக் காரணமாகலாம். தொலைத் தொடர்பு செயற்கைக் கோள்கள் என்பது இன்று வரை Inmarsat எனும் நிறுவனத்தின் பெரும்பான்மை ஆதிக்கத்திற்குள்ளேயே இருந்து வருகின்றன. இந்த 'இன்மார்சற்' செய்மதிகள் (Geostationary Earth orbiting Satellites) எனும் உயர் சுற்று வட்ட வலையத்தில் வலம்வந்து கொண்டிருந்தன. இவை பூமியில் இருந்து 36000 கிலோமீற்றர் உயரத்தில் இருந்ததால் இதன்மூலம் பெறப்படும் தகவல்களைப் பெற சாதாரண அளவு தொலைபேசிகளால் இயலவில்லை. ஒரு குடை போன்ற தகவல் பெறும் கருவி (Antenna) பொருத்தப்பட்டு கைப்பை அளவிலான தொலைபேசி ஒன்றே இதற்குப் பயன்படுத்தப்பட்டது. அத்துடன் பூமியில் அனுப்பப்படும் ஒரு செய்தி, மறுமுனையில் இருக்கும் ஒருவருக்குப் போய்ச் சேரமுதல் 72.000 கிலோ மீற்றர்கள் பயணம் செய்யவேண்டியிருந்தது. இந்த ஒலிப் பயணத்தில் இருவருக்குமிடையே தகவல் பரிமாறப்பட்டபோது இடையே கால் 'செக்கன்' தாமதம் ஏற்பட்டது. இது என்றுமே திருத்தப்பட முடியாத ஒன்றாக இருந்தது. இது திருத்தப்பட வேண்டுமானால் செயற்கைக்கோள்களின் வலம் வரும் உயரம் குறைக்கப்பட வேண்டும் என்றும், தகவல் பெறும் மையங்கள் பூமியில் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பின் தான் புதிய செயற்கைக் கோள் தொலைபேசித் திட்டங்கள் பல நிறுவனங்களாலும் தயாரிக்கப்பட்டன. முன்பு போலன்றி இம்முறை செயற்கைக்கோள் தொலைபேசித் திட்டத்தில் உலகின் ஏராளமான தொலைபேசி நிறுவனங்கள் பங்குபெறுகின்றன. புதிய செயற்கைக்கோள் தொலைத் தொடர்பினை சாதாரண கைத் தொலைபேசியின் அளவுகொண்ட தொலைபேசிகள் பெற்றுக் கொள்ளும். தற்போதுள்ள GSM வகைக் கைத்தொலைபேசிகள் சிறிய மாற்றமொன்றின் மூலம் செயற்கைக்கோள் தொடர்புகளை பெறக்கூடியவகையில்

**பூமியில் அனுப்பப்படும் ஒரு செய்தி, மறுமுனையில் இருக்கும் ஒருவருக்குப் போய்ச் சேரமுதல் 72.000 கிலோ மீற்றர்கள் பயணம் செய்யவேண்டியிருந்தது. இந்த ஒலிப்பயணத்தில் இருவருக்குமிடையே தகவல் பரிமாறப்பட்டபோது இடையே கால் 'செக்கன்' தாமதம் ஏற்பட்டது.**

பயன்படுத்தக்கூடியனவாக தயாராகின்றன. புதிய செயற்கைக் கோள் தொலைத் தொடர்பில் பங்குகொள்ளும் நிறுவனங்கள், அவற்றின் செய்முறை போன்றவற்றை இப்போது பார்ப்போம்.

செயற்கைக்கோள் தொலைத் தொடர்பு முறையின் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு பத்து வருடங்களாகின்றன. இவற்றின் செயற்பாடுகள் கடந்தவருட இறுதியிலேயே ஆரம்பமாகின. இது புதியவடிவ செயற்கைக் கோள் தொலைத்தொடர்பின் ஓர் அங்கமே எனலாம். ஆரம்பத்தில் சரியான தொலைத்தொடர்பை வழங்கவேண்டும் எனில் செயற்கைக்கோள்களின் உலா வரும் உயரம் குறைக்கப்பட வேண்டும் என திட்டமிடப்பட்டது. இதன்படி தாழ்சுற்றுவட்ட வலையம் எனப்படும் LEO என்ற பூமியில் இருந்து 700 முதல் 1500 கிலோ மீற்றர்கள் உயரத்தில் ஏராளமான செயற்கைக்கோள்களை உலவ விடுவதென்றும் கூறப்பட்டது. உயர்சுற்றுவட்ட வலையத்தில் உள்ள தகவல்தொடர்பு செயற்கைக் கோள்களின் எடை 5 தொன்கள் வரை இருந்த போதிலும் புதிய தாழ்சுற்று வட்ட வலையத்தில் நிறுத்தப்படவுள்ள செயற்கைக்கோள்களின் பாரம் 450 முதல் 750 கிலோ கிராம் வரையானதாகும். வேறு பல நிறுவனங்களும் செயற்கைக் கோள்களை விண்ணிற்கு அனுப்பி தாழ்சுற்றுவட்ட வலையத்தில் நிறுத்துவதென்று திட்டமிட்டன.

செயற்கைக்கோள் தொலைத் தொடர்பின் பிரதானமான நிறுவனங்களாக உலகின் தொலைத் தொடர்பு முன்னோடியான Modorola, அல்காடெல், மைக்றோசொப்ட் போன்றவைகளைக் குறிப்பிடலாம். இவைகள் தங்களது திட்டங்களுக்கு முறையே Iridium, Skybridge, Teledesic என பெயரிட்டன.

## Iridium தொழில்திட்டம்

இது மோட்டோரோலா நிறுவனத்தின் நீண்டகாலத் திட்டமாகும். கடந்த ஜனவரி மாதம் இதன் முதற்கட்டம் முடிவடைந்துள்ளது. இச் செயற்கைக்கோள் தொலைபேசி - முறைக்கான தொலைபேசிகளையும் இவர்களே வடிவமைத்துள்ளார்கள். இவர்களது திட்டம் 66 செயற்கைக் கோள்களை தாழ்சுற்று வட்ட பகுதியில் நிலைப்படுத்தி அதன்மூலம் தொலைத்தொடர்பினை ஏற்படுத்துவதாகும். இவர்களது திட்டத்தில் உலகின் பல முன்னணி தொலைத்தொடர்பு நிலையத்தினர் பங்குகொள்கின்றனர்.

## Sky Bridge தொழில்முறை

இதனை அல்காடெல் நிறுவனம் அமைக்கவுள்ளது. இவர்களும் 64 செயற்கைக்கோள்களை தாழ்சுற்றுவட்டத்தில் நிறுத்தி தொலைத்தொடர்பு வலையை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளனர். இவர்களது முதல்கட்ட வேலைத் திட்டம் 2001ம் ஆண்டில் முடிவடையும் பட்சத்தில் உலகம் பூராகவும் 15 முதல் 20 மில்லியன் பாவனையாளர்கள் பயன்பெறுவார்கள் என இந்நிறுவனத்தினர் கூறுகின்றனர்.

## Teledesic

இத் திட்டத்தினை கணினித் துறையில் முன்னோடியான 'மைக்றோசொப்ட்' நிறுவனத்தினால் அமெரிக்காவின் முன்னோடி தொலைத்தொடர்புத் துறையினரான AT&T நிறுவனத் தொடர்புடன் இணைந்து உலகின் மிகப் பாரிய செயற்கைக் கோள் தொலைத் தொடர்பினை அமைக்க முனைந்துள்ளனர். இவர்கள் தங்களது திட்டத்தின் படி 840 வரையான செயற்கைக் கோள்களை தாழ்சுற்றுவட்டத்தில் நிலைப்படுத்தி அதன் மூலம் தொலைத்தொடர்பு, தகவல் வலைத்தொடர்பு போன்றவற்றை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளனர்.

இது தவிர MEO எனப்படும் மத்திய சுற்றுவட்ட வலையத்தில் அதாவது, பூமியில் இருந்து 10,000 கிலோ மீற்றர் உயரத்தில் செய்மதிகளை அனுப்பி மற்றுமோர் தொலைத்தொடர்புத் திட்டத்தினை ஏற்படுத்த Odyssey எனும் நிறுவனம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இவர்கள் 12 செய்மதிகளை இதற்காகப் பயன்படுத்தியுள்ளதாகக்கூறுகிறார்கள். இந்நிறுவனம் Inmarsat நிறுவனத்தின் ஓர் சகோதர நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய செயற்கைக் கோள் தொலைபேசித் திட்டத்தினால் எதிர்காலத்தில் உலகின் எந்தமூலையில் இருந்தும் எந்த வொரு இடையூறுமின்றி மிகக் குறைந்த கட்டணத்தில் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய வசதிகள் தோன்றும் மற்றும் மின்சார வசதிகள் இல்லாத பகுதிகளில் கூட இந்த செயற்கைக்கோள் தொலைத்தொடர்பின் மூலம் பொதுத்தொலைபேசிகளை ஏற்படுத்தி மக்களுக்கான செயற்பாடுகளை விரிவுபடுத்த இவை உதவும். இவைகளைவிட தகவல் வலைத் தொடர்பில் இந்த



செயற்கைக்கோள்களின் பங்கு மிக முக்கியமானவை. இன்று சாதாரண தொலைத்தொடர்பு வழியாக இயக்கப்படும் தகவல் தொடர்புத்துறை எதிர்காலத்தில் செயற்கைக்கோள்களின் மூலமானதாக மாற்றமடையும் போது சாதாரண தொலைக்காட்சிப் பெட்டிகளில்கூட தகவல் வலைச் செய்திகளை பார்க்கக் கூடிய வசதிகள் ஏற்படும். எதிர் வரும் காலத்தில் மாறிவரும் நவீன தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப உலக நடைமுறை நகர்வின் பிரதான கர்த்தாவாக இந்த தொலைத்தொடர்பு செயற்கைக்கோள்களே செயற்பட இடமுண்டு என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**- உ.தயவன்**


**A.S.C.E.S இன் புதியவகுப்புகள்**
14 ஆசிரியர்களின் கல்வி புகட்டலால் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர்

பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறும் ஒரே இடம்
bio,chimie,maths,tamoul,anglais,français,histoire etc
dictee, orthographe, résumé, expression écrite

பிரெஞ்சு
23.01.99 சனி காலை 10.00 மணி
07.02.99 ஞாயிறு காலை 10.00 மணி
18.01.99 திங்கள் பி.ப. 4 மணி (Paris 18 இல்)
20.01.99 புதன் பி.ப 3 மணி (Paris 18 இல்)

பிரஞ்சு கற்க சிறந்த கை நூல் நடைமுறை பிரஞ்சு

ஆங்கிலம்
Cambridge,Toefl பரீட்சைகளுக்கும் பாடசாலை மாணவர்களுக்குமான வகுப்புகள்
07.02.99 ஞாயிறு பி.ப 1.30மணி-3.30 மணி
06.02.99 சனி காலை,10 மணி

கணினி
Win95/98,Win NT,Word,Excel, hardware பயிற்சி
06-07.02.99 சனி-ஞாயிறு காலை 10 மணி பி.ப 1.30 மணி
பிரதி சனி பிற்பகல் 1.30மணி முதல்
நடன வகுப்புகள் ஞாயிறு பி.ப 1.30மணி
தையல் கேக் அலங்காரம் : 06.02.99 சனி பி.ப 2 மணி-3.30மணி
சங்கீத வயலின் ஓர்கன் வகுப்புகள்
சனி ஞாயிறு காலை 9 மணி திங்கள் புதன் 3.30 மணி

சனி ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்
41, rue Didot 75014 PARIS M° Pernety Dir N° 13
Tél 01 42 57 23 56
திங்கள் செவ்வாய் புதன் வகுப்புகள் நடைபெறும் இடம்
2,rue Esclagnon 75018 Paris M° Porte de Clignancourt

# தலதா மாளிகை புத்தர் 'இராணுவ முற்றுகைக்குள்!'

சிறீலங்காவில் சர்வதேச ரீதியில் பௌத்த மதத்தின் பெருமையைக் கூறும், மலையகத் தலைநகரில் எழுந்துள்ள தலதா மாளிகை இன்று இராணுவத்தின் பலமான முற்றுகைக்குள் உட்படுத்தப்பட்டுள்ளது என்றும் பௌத்தனின் வழிபாட்டு ஸ்தலம் இராணுவ வலையமாக மாற்றமடைந்துள்ளது வேதனைக்குரிய விடயம் என்றும் கொழும்பில் இருந்து வெளிவரும் லங்கா தீப வார இதழ் கூறியுள்ளது. அப்பத்திரிகையில் வெளியாகியுள்ள ஓர் கட்டுரையில், அதன் கட்டுரையாளர் தலதாவின் இன்றைய நிலையை இப்படி விபரிக்கிறார்.

அன்று இலவாதிகளின் விருப்புக்களுக்கு ஆரம்பிக்கப்பட்ட சிவில் யுத்தம், இன்று பாரிய அளவில் மூர்க்கமாகியுள்ள நிலையில் ஒரு பௌத்த மகனின் அமைதியான, சுதந்திரமான வழிபாடுகூட கேள்விக்குறியாகியுள்ளது. புனித வழிபாட்டுத் தலமான தலதாமாளிகைக்குள் பௌத்தர்கள் உட்செல்வது அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள இரும்பு வேலிகள், இராணுவ பாதுகாப்பு நிலைகள், பயங்கர ஆயுதங்களுடன் கூடிய இராணுவ நிலைகள் போன்றவற்றால் தடைப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று தலதாமாளிகைக்குள் பௌத்தர்கள் நுழையும்போது அவர்களுக்கு ஒருவித பயமும், பாரிய இரும்பு கம்பிகளுடன் கூடிய வேலிகளாலும், மண் நிரப்பப்பட்ட பீப்பாய்களாலும், மாளிகையின் நான்கு புறங்களிலும் அமைக்கப்பட்டுள்ள இராணுவ பங்கர்களாலும், ஆயுதங்களை கைகளில் ஏந்திய இராணுவ, பொலிசாரினாலும், எப்போதுமே சந்தேகத்துடன் பார்க்கும் இரகசிய உத்தியோகத்தாலும் ஏற்படும் அச்சமுமே நிலைக்கின்றனவே தவிர அமைதியோ, புனித எண்ணங்களோ தோன்றுவதில்லை.

அன்று மக்கள் திரளால் நிரம்பிப்போயிருந்த தலதா மாளிகை, இன்று பாழடைந்தது போன்ற தோற்றத்துடன் பாதுகாப்பு பிரிவினர்களால் மட்டுமே நிரப்பப்பட்ட ஓர் இடமாகக் காட்சியளிக்கிறது. இன்று பிரதான மண்டபத்திற்குள் செல்லும் பெரியோர் முதல் சிறுவர் வரை ஆழமான சோதனைக்குட்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் இரண்டாவது முறையாக இடையே மீண்டுமொருமுறை சோதனைக்குள்ளாகிறார்கள். நீண்ட தூரங்களில் இருந்து புத்தரைத் தரிசிக்க வருவோர்களும் வெளிநாடுகளில் இருந்து உல்லாசப் பயணிகளாக வருபவர்களும் இராணுவத்தின் சோதனைகளுக்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்கிறார்கள். ஆனால் சில செல்வாக்குமிக்கவர்கள் மாத்திரம், தங்கள் கைகளை அசைத்துவிட்டு வெகு அழகாக பாதுகாப்பு நிலைகளைத் தாண்டி உள்ளே சென்றுவிடுகிறார்கள். ஆனால் நாட்டிற்காக போர்க்களம் சென்று கண் குருடாகிப்போன ஓர் இராணுவ வீரனுக்கோ அவருடன் செல்லும் பெற்றோருக்கோ இப்படியான சலுகைகள் இல்லை. மாளிகை நிலைதான் இப்படியென்றால் அதன் சுற்றுப்புறங்களின் நிலையோ மிக மோசமானது. எல்லாப் பாதைகளும் வாகனப் போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டுள்ளது. பொலிஸ், இராணுவ வாகனங்களோ அல்லது அவர்களது அனுமதியுடனான வேறு வாகனங்களோ மட்டுமே அருகில்வர முடிகிறது. அன்று இரவு 9 மணிவரை தலதாமாளிகைக்குள் செல்லக்கூடியதாக இருந்தபோதிலும், இன்று மாலை 4 மணிவரையே உட்செல்ல முடிகிறது.

400 வருட காலத்திற்கு மேற்பட்ட கண்டியுகத்தின் பிரதான நிலைகளின் இன்றைய நிலை இப்படியாகிப்போயுள்ளது. சென்ற வருடம் குண்டுவெடிப்பு நிகழ்ந்ததுதான், அதற்காக இன்றுகூட கண்டியின் மக்கள் பாதிக்கப்படவேண்டுமா? தலதாமாளிகைக்கு அருகாக உணவுப் பொதிகளைக் கொண்டு செல்லும் ஒருவர்கூட இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு உணவுப்பொதி திறக்கப்பட்டு சோதனை செய்யப்படுகிறார். பிரயாணப் பை கொண்டு செல்லும் ஒருவரின் நிலையும் இது போன்றதே.

குதிரை பாய்ந்து சென்றதன் பின் குதிரை லாயத்தை இறுக மூடிய கதைபோன்றது இன்றைய அரசின் நிலைப்பாடு என்கிறார்கள் கண்டியின் மக்கள்.

## சிங்களம் கூறும் சில....

– மாந்தன்

# யுத்தத்தில் இதுவும் ஒரு கோலம்

அண்மையில் சிறிலங்காவின் வடக்கு - கிழக்கு யுத்த முனைகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கு ஓர் கையேடு வழங்கப்பட்டது. சண்டைக்களங்களில் இராணுவத்தினரின் தியாகங்கள், அவர்களது வீர பங்களிப்புக்கள் போன்றவைகளை விளக்கி அவர்களது மனோதிடத்தை அதிகப்படுத்தும் பல உதாரணங்கள் விளக்கப்பட்டிருந்தன. இராணுவத்தலைமை, களத்தில் நிற்கும் இராணுவத்தினருக்கு அறிவுறுத்தல்களையும், விளக்கங்களையும் கையேடுகள் வழியாக கொடுத்துக் கொண்டிருந்த வேளையில் அரச உயர் அதிகாரிகளோ அவற்றை வேறுவிதமாக அர்த்தம் கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். ஒரு இராணுவத்தின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் மூன்றாம் இடத்திலேயே இருக்க வேண்டும் என இராணுவ கையேடுகள் சொல்கின்றன. ஆனால், எமது பல இராணுவ அதிகாரிகளோ தங்கள் விருப்பு வெறுப்புக்களை முதன்மைப்படுத்தி பதவிச் செல்வாக்கை தங்கள் தேவைகளுக்கு பயன்படுத்துகிறார்கள். கொழும்புக்கு அண்மித்த பகுதியில் உள்ள ஒரு இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியான ஒருவர் நீண்டகாலமாக இராணுவத்திற்குத் தேவை எனக்கூறி பல வழிகளிலும் தனது தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த இராணுவ உயர் அதிகாரி இராணுவ முகாம் அமைப்பதற்கு தேவை எனக் கூறி ராகம, மருதானை போன்ற புகையிரத திணைக்கள உதிரிப்பாகப் பகுதிகளில் ஏராளமான சிலிப்பர் கட்டைகளை பெற்றுக் கொண்டுள்ளார். இப்படி பெற்றுக் கொண்ட பெருந்தொகையான சிலிப்பர் கட்டைகளை இராணுவ வாகனங்களிலேயே ஏற்றி கொண்டு சென்று தனது தோட்டங்களுக்குத் வேலிகளை அமைப்பதற்கு பாவித்தது மட்டுமல்லாமல், வேறு நபர்களுக்கும் கொடுத்துள்ளார். இதே அதிகாரி தான் காணிப் பகுதியில் கட்டிய வீடு ஒன்றிற்கு பொருட்களை கொண்டுசெல்ல இராணுவத்தின் வாகனங்களையே பயன்படுத்தியுள்ளார். நாம் இங்கு கூறும் இராணுவ அதிகாரியின் ஆலோசனையின் பெயரில் குத்தகை அடிப்படையில் இராணுவத்தின் தேவைக்கென கொள்முதல் செய்யப்பட்ட ஓர் லைற் ஏஸ் வாகனம் ஒன்று இன்றுவரை முகாமிற்கு வரவில்லை. இப்படி ஏராளமான தில்லு முல்லுகளை புரிந்த அதிகாரியை விசாரிக்க, ஓர் விசேட விசாரணைக் குழு ஒன்று முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், எந்த ஒரு இராணுவ வீரனும் அங்கு சாட்சியமளிக்க முன்வரவில்லை. இராணுவ உயர் அதிகாரியின் மறைமுக அச்சுறுத்தலே இதற்கு காரணம் எனச் சொல்லப்பட்டது.

ஏராளமான வாகனங்களைக் கொண்டுள்ள அந்த இராணுவ முகாமில் ஓர் இராணுவ வீரன் விபத்துக்கு உள்ளாகிவிட்டார். அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல அன்றைய தினம் எந்த ஒரு வாகனமும் கிடைக்கவில்லை. முகாமிலிருந்து சோதனைகளுக்காக நாய்களைக் கொண்டு செல்லும் வாகனத்திலேயே அந்த விபத்துக்குள்ளான இராணுவத்தினர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். சரியான சமயத்தில் வாகன உதவி கிடைக்காத காரணத்தால், இடைவழியில் அவர் மரணமானார். இந்த அனாவசியமான மரணத்திற்கு பொறுப்பற்ற இராணுவ அதிகாரிகளின் செயற்பாடுகளே காரணம் என்பதை மறுக்கவே முடியாது. யுத்தம் ஒருபுறம் நடந்துகொண்டிருக்க யுத்தத்தைவைத்து ஒருதரப்பினர் பிழைப்பு நடத்துகின்றனர். அதில் ஒருவர்தான் இவர். இன்னும் இவர்போல ஏராளம்.

# மக்களை ஏமாற்றும் படைத்தலைமை படையினரையும் ஏமாற்றுகிறதா?

முன்னாள் இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவ கூறியது போன்று இந்த யுத்தத்தை அடுத்த சந்ததிக்கு ஒப்படைக்க மாட்டோம் என்ற உறுதிப்பாடு எல்லோரிடமும் இருக்க வேண்டும். ஆனால் நாட்டின் துரதிர்ஷ்டம், அப்படியான எண்ணங்களுடன் கூடிய இராணுவ அதிகாரி 'மருந்துக்கு'க்கூடக் கிடையாது. மேலோட்டமாக அப்படி எதாவது கூறினாலும் அவர்கள் யுத்தத்தைவைத்து பிழைப்பு நடத்தவே நினைக்கிறார்கள். யுத்தம் நடந்தால் தங்களது மடிகளும் நிரம்பிவிடுமே என்ற எண்ணம் தான் இவர்களுக்கு. ஆனால், யுத்தத்தை வேண்டாம் எனக் கூறுபவர்கள், அமைதியைத் தேடுபவர்கள்; சாதாரண பொது மக்கள் மாத்திரமே. ஜெயசிக்குறு நடவடிக்கை 'சாதகமான முறையில் முடிவடைந்ததாக' கடந்த டிசம்பர் மாதம் நடவடிக்கை தலைமையகம் அறிவித்தது. ஜெயசிக்குறு நடவடிக்கை சாத்தியமான முறையில் முடிந்தது எப்படி என்ற கேள்வியை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோனிடம் வினவியபோது, அவர் சொன்னார்; மூன்று கட்டங்களில் இந் நடவடிக்கை முடிவடைந்ததாக. ஆனால் ஜெயசிக்குறுப் ஆரம்பத்தில் சொன்னது பாதை திறப்பதே பிரதான நோக்கம் என்றே அன்று கூறப்பட்டது. இராணுவ முக்கியஸ்தர்களின் விளக்கங்களின் படி பாதுகாப்பு பிரதி அமைச்சர், கடந்த வருட சுதந்திர தினமன்று (பெப்.4) கிளிநொச்சியிலிருந்து கண்டிக்கு பஸ் சேவை ஒன்றினை நடத்த தீர்மானம் கொண்டிருந்தார். ஆனால் இறுதியில் தலதா மாளிகையில் குண்டு வெடிப்புடன் எல்லாமே முடிவடைந்தது. அத்துடன் வருட இறுதியில் அவசரமாக எப்படியும் வருட இறுதிக்குள் ஜெயசிக்குறுவை முடிப்பதாக கூறிய போதிலும், அதுவரை எமது கட்டுப்பாட்டிலிருந்த கிளிநொச்சியும் 'எம்மை விட்டுப்' போய்விட்டது. ஜெயசிக்குறுப் வெற்றிகரமாக முடித்துவைக்கப்பட்டதாக நாட்டிற்குக் கூறிய இராணுவத் தலைமை, தனது அதே கதையை இராணுவத்திற்கு உள்ளே உள்ளவர்களுக்கும் கூறுவதற்கு வழிகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. ஆனால், வானொலி மூலமாக அல்ல. 'மாவீரர்கள்' என்னும் பெயரில் வெளியிட்ட மாதாந்த சஞ்சிகை ஒன்றின் மூலமே ஆகும்'. நத்தார் விழாவின் போது வெளியிடப்பட்ட இந்த மாதாந்த வெளியீட்டின் கடைசிப் பக்கத்தில் போர்முனைக்குச் சென்ற படையினர் பலரின் படங்களைப் பிரசுரித்து அதன் கீழ் பெரிய எழுத்துக்களில் நாம் ஜெயசிக்குறுவை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வந்தோம் என்ற வசனங்கள் அச்சிடப்பட்டிருந்தன. ஜெயசிக்குறு வெற்றிகரமாக முடிவுக்கு வந்ததாக சொல்லப்பட்டதை நாட்டின் மக்கள் சிலவேளைகளில் ஏற்றுக் கொண்டாலும், அதேகதையை இராணுவத்தினருக்கு கூறும் போது அவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்களா என்பது சந்தேகம்தான். ஏனென்றால் யுத்தத்தின் சகல நிலைமைகளையும் அறிந்தவர்கள் அவர்களே என்பதே.

# இராணுவத் தலைமை மாற்றங்களும் யுத்தமும்

அரசியல் தீர்வொன்றின் மூலம் யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றும், எதிரி அழிக்கப்படுவதை விட தோல்விக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் 'புதிய' இராணுவத் தளபதி அண்மையில் பத்திரிகை ஒன்றிற்கு கூறியிருந்தார். ஆனாலும், அவருக்கு முன் பதவியில் இருந்த இராணுவத் தளபதியின் எண்ணம், எதிரி அழிக்கப்பட வேண்டும் என்பதிலேயே இருந்தது. அதற்காகவே ஜெயசிக்குறுப் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான பாதை திறப்பு யுத்தம் நடக்கும்போது பலத்த தாக்குதல்கள் மூலம் எதிரிக்கு பேரழிவை ஏற்படுத்தப் போவதே இராணுவத்தின் நோக்கம் என பலதடவை கூறியிருந்தார்.

இராணுவத் தலைமையில் மாற்றம் ஏற்பட்டாலும் அதன் பிரதான நோக்கத்தில் மாற்றம் ஏற்படுவதில்லை. ஆனால் இங்கு அப்படியான ஒரு நிலை தோன்றியுள்ளது. புதிய தளபதி எதிரிகளை அழிப்பதைவிட தோற்கடிப்பதே சரியான வழி எனக் கூறுவதானது, பிரதான இராணுவ நகர்விலும் அதன் இலக்கிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையே காட்டுகிறது. ஆனால், கடந்த கால நிகழ்வுகளின்படி எதிரியைத் தோற்கடிப்பது இலகுவான காரியமல்ல. அப்படியானால் அவர்களது அழிவைப் பற்றி எப்படி யோசிக்க முடியும்? இன்று ஒவ்வொருவரின் விருப்புக்கு ஏற்ற முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதல்ல இன்றைய தேவை. எந்தவழியிலாவது உடனடியாக யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவர வேண்டும். வருடத்திற்கு பல ஆயிரம் கோடி ரூபாய்களை விழுங்கும் இந்த யுத்தம், இதே வகையில் இன்னும் பத்து வருடங்களுக்கு நடத்தப்படுமானால் என்ன மிஞ்சும் என்பதை யோசிக்க வேண்டிய தேவையே இல்லை.

இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வி தமயந்தி திருச்செல்வத்தை** பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## குறள் முற்றம்

**'அன்போடு இயைந்த வழக்கு என்ப ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு'**

எமது உடலோடு பொருந்திய அருமையான உயிர்க்கு அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கைதான் பயனுடையதாக அமையும்.

## அறிவியல் முற்றம்

### சொற்சிதறல் எண் - 14

பின்வரும் தமிழ்ச் சொற்களின் ஒத்த கருத்துள்ள சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவையாவும் நான்கு எழுத்துக்களைக் கொண்டதாகவும், சிதறியும் இடம்மாறியும் காணப்படுகின்றன. அவற்றைக் கண்டு பிடிக்கவும்.

**போர், சீற்றம், சுதந்திரம், பூமி, புயல், இளைஞன், சிந்தனை, மகிழ்ச்சி, சொந்தநாடு, செவிமடுத்தல்.**

| | |
|---|---|
| யு ரா ப ன் | கு டு க லை |
| கி ம த ம் | எ ய த ம் |
| வி றா ட ம் | இ ய ண ளி |
| வை த் ம ம் | தா ட் ர ம் |
| சூ ன் க ம் | கே ண் வ ல் |

1.................................... 6....................................

2.................................... 7....................................

3.................................... 8....................................

4.................................... 9....................................

5.................................... 10....................................

பிள்ளைகளே!

சரியான விடையைக் கண்டுபிடித்து குறித்து வையுங்கள்: விடை அடுத்தவாரம்!

### சொற்சிதறல் எண் பதின்மூன்றின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| நட்சத்திரம் | - தாரகை | மகளிர் | - மாதர் |
| சுத்தம் | - தூய்மை | வயோதிபம் | - முதுமை |
| அழகு | - எழில் | குழந்தை | - மழலை |
| நலம் | - சுகம் | ஆழி | - கடல் |
| சுற்றாடல் | - சூழல் | | |

(தர்மம் என்ற சொல் தவறுதலாக விடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்)

## தகவல் முற்றம்

### குரங்குகள் பலவிதம்

**ஸ்பைடேர்ஸ் (Spiders)**

ஸ்பைடேர்ஸ் என்றால் ஆங்கிலத்தில் சிலந்தியைக் குறிக்கும். சிலந்தியின் பெயரைக்கொண்ட இக் குரங்குகள் தங்கள் வாலை தங்களது மூன்றாவது கையாகப் பயன்படுத்துகின்றன. பற்றிக்கொள்வதற்கும், கிளைகளில் தாவிச் செல்லவும், தலைகீழாகத் தொங்கவும் இவை வாலை மிக எளிமையாக கையைப்போல பயன்படுத்துகின்றன.

**வொல்லி (Wolly)**

அமெரிக்க இனக் குரங்குகளில் 27 அங்குல நீளமுடைய நீண்ட வாலைக் கொண்ட குரங்காகும். சீரான தட்ப வெட்பமுடைய பகுதியில் இவை வாழும். வேறு இடங்களுக்குச் சென்றால் இவை இறந்துவிடும். கருநிற முடிகள் உடலெங்கும் அடர்ந்து காணப்படும். குழந்தைகளைப் போல் தோற்றம் கொண்டவை இவை.

**ஸ்கொய்ரல்ஸ் (Squirrls)**


அணிலைப்போல முகத்தோற்றமும் வாலில் அதிக முடியும் கொண்டவை. தனக்குப் பொருத்தமான சோடிக்குரங்கு கிடைத்துவிட்டால் நீண்டகாலம் உயிர்வாழ்வன.

**மர்மோ செட்ஸ் (Marmosets)**

ஒரு கைப்பிடிக்குள் அடங்கிவிடும் அளவிற்கு மிகச்சிறிய குரங்கு வகை இது. பெரிய பறவைகள் விலங்குகளுக்கு விரைவில் இரையாகி விடக் கூடியது.

**ஒவில் (Owl)**


ஆந்தையைப் போல இரவில் மட்டும் நடமாடும் குரங்கு. பகல் முழுவதும் தூங்கும். வட்டமுகம். ஆந்தையைப்போல கண்கள் கொண்டது. உருவத்திலும் சிறியது.




## குட்டிக் கதை படியுங்கள்

### குள்ள நரியும் முதலையும்

ஒரு முதலையும் குள்ளநரியும் சேர்ந்து விவசாயம் செய்யப் புறப்பட்டன. உருளைக் கிழங்குகளைப் பயிரிடலாம் என அவை முடிவு செய்தன. உருளைக்கிழங்கு மண்ணின் உள்ளே, நிலத்திற்கும் கீழேதான் விளையும். நிலத்திற்கு மேலே அதன் இலைகள் படர்ந்திருக்கும். இலைகள் ஒன்றிற்கும் பயன்படாது. முதலை, உருளைக்கிழங்கு இலைகளிடையே காய்த்துத் தொங்கும் என்று எண்ணிக் கொண்டிருந்தது.



முதலை, குள்ள நரியைப் பார்த்து, 'இதோ பார்! உருளைக்கிழங்குகளைப் பயிரிட்டு முடிந்ததும், அதன் நிலத்திற்குக் கீழே உள்ளவற்றை உனக்குத் தந்துவிடுவேன். மேலுள்ளவற்றை நான் எடுத்துக் கொள்வேன்' என்று அதட்டலுடன் கூறிற்று.

'சரி' என்று மனதுக்குள் சிரித்தவாறே கூறிற்று குள்ள நரி. உருளைக்கிழங்குச் செடிகள் நன்றாக வளர்ந்துவிட்டன. முதலை, உருளைக்கிழங்குச் செடியின் இலை முதலியவற்றை மேற்புறமாக வெட்டி எடுத்துக்கொண்டது. வீட்டுக்குக்கொண்டு சென்றது. இலைகளிடையே அது உருளைக்கிழங்குகளைத் தேடியது. அங்கே, ஒரு உருளைக்கிழங்குகூட அகப்படவில்லை. மிகக் கோபத்துடன் வயலை நோக்கிச் சென்றது. அங்கே குள்ளநரி நிலத்தைத் தோண்டி உருளைக்கிழங்குகளை, எடுத்துக்கொண்டிருந்தது. இதைக் கண்ட முதலைக்கு ஏமாற்றமும், கோபமும் தாங்க முடியவில்லை. அடுத்த முறை, இந்தக் குள்ளநரிக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று அது முடிவு செய்துகொண்டது.

பின்னர், குள்ளநரியும் முதலையும் சமாதானமாகப் பேசிக்கொண்டன. இருவருமாகச்சேர்ந்து நெல் பயிரிடுவதென்று முடிவு செய்துகொண்டன. நரியை மிகக் கவனமாக நடத்துவதென்று முதலை தீர்மானித்தது.

'இந்த முறையும், பயிர் செய்ததும் நீ நான் சொல்வதன்படியே பங்கிட வேண்டும். சென்ற முறையைப் போல இல்லாமல் இந்தமுறை, எனக்கு இந்தப் பயிரின் நிலத்துக்குக் கீழ் உள்ள விளைச்சலை எல்லாம் நீ, கொடுத்துவிட வேண்டும்' என்று முதலை கூறியது.

நெல், அறுவடை நாளும் வந்தது. குள்ளநரி, பயிரின் மேல் பகுதி யாவற்றையும் அறுவடை செய்து கொண்டு போனது. முதலை, மிகுந்த சந்தோஷத்துடன் வயலுக்கு வந்தது. நிலத்தை நன்றாகத் தோண்டத்தொடங்கியது. ஆனால், நெற்பயிரின் வேரில் என்ன தான் கிடைக்கும்? மிகுந்த ஏமாற்றத்துடன் வயலை விட்டு வெளியேறிற்று. அதன் மனதில் தாங்க முடியாத கோபம்,

'குள்ளநரியே, நான் உனக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன்' என, முதலை சபதம் எடுத்துக்கொண்டது. அடுத்தமுறை என்ன பயிரிட்டாலும், பயிரின் மேற்பகுதியைத் தான் எடுத்துக்கொள்வதென்று முதலை முடிவுசெய்தது.

மூன்றாவது தடவை, கரும்பு பயிரிடலாம் என்று குள்ளநரியும், முதலையும் தீர்மானித்துக் கொண்டன.

கரும்பு நன்றாக வளர்ந்தது. அறுவடை நேரமும் வந்தது. முதலை முந்திக்கொண்டு 'நான் இந்தப் பயிரின் மேற்பகுதியை வெட்டி எடுத்துக்கொள்கிறேன்' என்றது.

'நீ என்ன சொல்கிறாயோ அதன் படி நான் நடந்து கொள்வேன்' என்றது குள்ளநரி. முதலை கரும்பின் நுனிப்பகுதியை வெட்டிக்கொண்டு செல்வதை பார்த்தபடியே நின்றது நரி.

முதலை அங்கிருந்து போனதும் நரி, நல்ல கரும்புத் தடிகளை வெட்டிக்கொண்டு, தன் வீட்டுக்குச் சென்றது. வீட்டிலிருந்து ஆனந்தமாக இனிக்கும் கரும்பைத் தின்னத்தொடங்கியது. முதலை, தான் அள்ளிச் சென்ற கரும்பு இலைகளை, ஆவலோடு தின்னத் தொடங்கியது. அந்த இலைகள் அதற்கு உப்பு ருசியில் இருந்தது. மிகவும் ஏமாற்றத்துடன் கரும்பின் இலைகளை தூக்கி வீசியது. பின்னர், குள்ளநரியைத் தேடிச் சென்றது.

குள்ளநரி, முதலையை மிகவும் பணிவோடு வரவேற்றது.

முதலை கோபத்துடன், குள்ளநரியைப் பார்த்தது. வெறுப்போடு கூறியது.

'நான் இனி, உன்னோடு பயிர் செய்வதற்கு வரமாட்டேன். நீ ஒரு ஏமாற்றுப் பேர்வழி. இத்தகைய உன்னை நான், ஒருபோதும் என் சிநேகிதனாக இனியும் வைத்திருக்கமாட்டேன். ஒரு 'ஏமாற்றுக்காரனோடு சினேகம் வைத்துக்கொண்டால், தலைகீழாகப் புரள வேண்டிய நிலைமை ஏற்படும். நீ இங்கிருந்து ஓடிப் போய்விடு' என்று, முதலை குள்ளநரியை அங்கிருந்து விரட்டியடித்தது.

- செ. யோகநாதன்

## ஆத்திசூடி

* அனந்தல் ஆடேல்— மிகுதியாகத் தூங்காதே.
* அறனை மறவேல்— தருமத்தை எப்போதும் மறவாமல் செய்.
* இளமையில் கல்— இளமைப்பருவத்திலேயே கல்வியைக் கற்றுக்கொள்ளத் தொடங்கு.
* அழகு அலாதன செயேல் — இழிவான செயல்களைச் செய்யாதே.
* வஞ்சகம் பேசேல்— கபடச் சொற்களைப் பேசாதே.
* இயல்பு அலாதன செயேல்— நல்லொழுக்கத்திற்கு மாறான செயல்களைச் செய்யாதே.
* பருவத்தே பயிர் செய் — எச் செயலும் அதற்குரிய காலத்திலே செய்யப்பட வேண்டும்.
* நன்றி மறவேல்— உனக்கு பிறர் செய்த நன்மையை எப்பொழுதும் மறக்காதே.
* தந்தை தாய்ப்பேண் — உன் தாய் தந்தையரை அன்புடன் போற்றிக் காப்பாற்று.
* இயம்பட உரை — கேட்பவர்களுக்கு இன்பம் உண்டாகும்படி பேசு.
* கண்டு ஒன்று சொல்லேல்— கண்ணால் கண்டதற்கு மாறாகச் சொல்லாதே.

## கவிதை முற்றம்

### முயன்றால் முடியும்

கண்கள் இல்லா மனிதன் ஒருவன்
கூடை பின்னுகின்றான்!
கைகள் இல்லா மனிதன் கூட
இறப்பர் கையால் உழைக்கின்றான்!
கால்கள் இல்லா பெண்ணும் கூட
நடனம் ஆடுகின்றாள்!
கருத்து, முயற்சி, தெளிவிருந்தால்
அவனே வெல்லுகின்றான்!

- சங்கை வேலன்


# மணலாறு ஒரு வீரவரலாறு 1

**மணலாறு தமிழீழத்தின் காவலரண். தமிழீழ விடுதலைக்காக உறுதியுடன் போராடும் தேசியத் தலைவரை, தளபதிகளை, போராளிகளை தன்னகத்தே அடக்கி பாதுகாத்த மண். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், ஆக்கிரமிப்பு படைகளால் இருந்து அதிகூடிய போர் தொடுக்கப்பட்டது இந்த மண்ணின் மீதுதான். இந்தியப் படைகளினால் தலைவரை அழிப்பதற்காக ஐந்து பாரிய படையெடுப்புகள் நடாத்தப்பட்டன. அதன் பின்னர் சிறீலங்கா இராணுவத்தால் எட்டுப் பாரிய இராணுவ நடவடிக்கைகள் நடாத்தப்பட்டன. அத்தனை தாக்குதல்களையும் முறியடித்து இன்று மரபுவழிப் படையாக விடுதலைப் புலிகள் எழுந்து நிற்பது உலகே வியக்கும் ஒன்று. இத்தனைக்கும் காரணம் தலைவரின் உறுதியான இலட்சியத்தின் பின்னால் எழுந்து நிற்கும் நுட்பமான திட்டமிடலும், அதனை செயல்படுத்தும் போராளிகளின் திறனும்தான்.**



எஸ்.தீரன்

தமிழீழத்தின் வட-தென் பகுதிகளை இணைத்து நிற்கின்றது மணலாறு. இந்த மண்தான் சிங்கள அரசிற்கே பெரும் ஆபத்தானதாகத் தோன்றியது. தமிழ் மக்களின் தமிழீழம் என்ற நிலைப்பாட்டை உடைக்க வேண்டுமென்றால் இந்த மண் துண்டாடப்பட்டே ஆகவேண்டும். அப்போதுதான் தமிழீழமென்ற நிலைப்பாட்டையே உடைக்க முடியும் என்பதுதான் சிங்களத்தின் எண்ணமாக இருந்தது. அதனால் தனது திட்டத்தை வேகமாகச் செயற்படுத்தவும் தொடங்கியது. கொக்கிளாய், நாயாறு பகுதிகளில் இருந்த தமிழ் மக்கள் விரட்டப்பட்டு, சிறையில் கைதிகளாக இருந்த சிங்களவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கி அவர்களது குடும்பங்களுடன் அப்பகுதிகளில் குடியேற்றத் தொடங்கியது சிங்களம். அங்கிருந்துகொண்டு, தனது ஆக்கிரமிப்புக் குடியேற்றத்தை விரிவுபடுத்தி மணலாறுவரை மேற்கொண்டது மட்டுமல்லாமல் மணலாற்றை 'வெலிஓயா' என பெயர் மாற்றமும் செய்தது. பாதுகாப்பிற்காக இராணுவ முகாம்களை அமைத்து, காடையர்களுக்கு ஆயுதங்களையும் வழங்கி, அந்த மண்ணில் இருந்து தமிழர்களை முற்றாகவே விரட்டியடித்து, எதிர்த்துக் குரல் கொடுப்பதற்கு யாரும் இல்லாத நிலையில், தமிழ் மக்கள் சொந்த மண்ணைவிட்டு வெளியேறினார்கள். ஆனால் அந்த மண்தான் தமிழீழ விடுதலையைக் காக்கும் காவலரணாக இருக்கப் போகின்றது என்று யாரும் அன்று கற்பனை செய்துகூட பார்த்திருக்கமாட்டார்கள். 1983 ஜூலையில் சிங்கள அடக்குமுறைக்கு எதிராகக் கொடுக்கப்பட்டது முதலடி. விடுதலைப் புலிகளின் தலைவர் தொடக்கிவைத்த வீர வரலாறு கண்டு தமிழ் மக்கள் மகிழ்வுகொண்டனர். தமக்காக, தமிழீழ மண்ணிற்காக குரல் கொடுக்க மட்டுமல்ல, தம் உயிர்களையே அர்ப்பணிக்கத் தயாராக நின்ற புலிகளைக் கண்டு மக்கள் மகிழ்வுகொண்டது ஒன்றும் வியப்பதற்கல்ல. அடிக்க அடிக்க அடிகளை வாங்கிக்கொண்டு 'அகிம்சை'யென கோஷமிட்டவர்களுக்கு மத்தியில், அடித்தவர்களைத் திருப்பி அடிக்க முனைந்து நின்ற புலிகளை, தமிழ் மக்கள் தமது பாதுகாவலர்களாகவே ஏற்றுக்கொண்டனர்.




காலவேகத்தை விட புலிகள் வேகவேகமாக அணியாகி தமிழர் படையணியாக எழுந்துநின்றனர். சிங்களம் ஆக்கிரமித்து நிற்கும் தமிழீழப் பகுதியெங்கும் படைமுகாம்கள் தாக்கப்பட்டன. அடங்கிக்கிடந்த தமிழ் இனம் எழுச்சிகொண்டு எழுந்தபோதுதான் 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என கூக்குரலிட்டார் ஜே.ஆர். ஜெயவர்த்தனா. ஆனால் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்தன. தமிழ் மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் ஒவ்வொரு நிமிடமும், தாம் அடிபட்டு அழியவேண்டும் என்பதை சிங்களம் அறிந்துகொள்ளத் தவறவில்லை. கபட நாடகத்தில் கைகோர்த்த ஜே.ஆர். தமிழ் மக்களை பாதுகாக்கவெனக் கூறி இந்திய-சிறீலங்க ஒப்பந்தத்தை நடாத்திமுடித்தார். தமிழ் மக்களைப் பாதுகாக்க எனக் கூறிக்கொண்டு இந்தியப் படைகளும் தமிழீழப் பகுதிகளில் ஆயுதங்களுடன் வந்திறங்கியது. தமிழ் மக்களின் பாதுகாவலராக நின்ற புலிகளின் ஆயுதங்களையும், வஞ்சகத்தனமாகப் பறித்தெடுத்தது. பாதுகாப்பாக இருக்கும் படைகளென நினைத்த இந்தியப்படை, போராளிகளில் இருந்து பொது மக்கள்வரை தாக்குதல்களையும், கைதுகளையும் மேற்கொண்டது. இராணுவ நடவடிக்கையில் மட்டுமல்ல, அரசியல் நடவடிக்கைகளிலும் நுட்பமான அறிவைக்கொண்டிருந்த தலைவர் இந்தியப் படைகளின் உள்நோக்கத்தைத் தெளிவாகத் தெரிந்துகொண்டார். அகிம்சை வழியில் போர் தொடுத்தார். திலீபனின் தியாகத்தினால் காந்திதேசம் தலைகுனிந்துகொண்டது. அதன் பின்னரும் [illegible] தளபதிகளை கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு செல்ல முயன்றவேளை, பன்னிரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். இந்தியப் படைகள் வந்த நோக்கம் என்ன என்பது இதன் மூலம் திட்டவட்டமாக நிரூபிக்கப்பட்டது. 10.10.87 அன்று இந்திய படைகளுடனான தமிழீழப்போர் தொடங்கியது.

ஒரு மரபு ரீதியான படையணியே இல்லாத கெரில்லா அமைப்பான விடுதலைப் புலிகளால் உலகிலேயே மூன்றாவது சிறந்த தரைப்படை எனக் கருதப்படும் இந்தியப் படைகளை வெற்றிகொள்ள முடியுமா? என கேள்வி எழுப்பியவர்கள் ஆயிரம். முடியவே முடியாது! என அடித்துக் கூறியவர்கள் அதைவிட அதிகம். ஆனால் அவர்களின் கேள்விகளுக்கெல்லாம் 'செயலில் மட்டுமே' பதில் கொடுத்தவர் தலைவர்.



இந்தியப் படைகளுடனான போர் ஆரம்பமானதில் தொடங்கிய சில நாட்களில் போராட்டத்தின் தேவை கருதியும், போராட்டத்தை வளர்த்தெடுக்க வேண்டிய அவசியம் கருதியும் தலைவர் மணலாற்றுக் காட்டிற்குச் சென்றார். மணலாற்று மண் தலைவரையும், தளபதிகளையும், போராளிகளையும் வரவேற்று தன்னுள்ளே அடக்கிக்கொண்டது. ஆனால் காட்டிக்கொடுக்கும் எட்டப்பர் கூட்டத்தினால் இந்தியப் படையினருக்கு தலைவர் மணலாற்றுக்குச் சென்றிருப்பது தெரியவந்தது. **நாற்பதினாயிரம் இந்தியப் படையினர் மணலாற்றுக் காட்டைச் சுற்றி இறக்கப்பட்டனர். விமான இறங்கு தளங்களுடன் கூடிய பாரிய முகாம் நித்திகைக்குளத்தில் அமைக்கப்பட்டது. மேலும் ஆறு முகாம்கள் மணலாற்றுக் காட்டினைச் சுற்றி அமைக்கப்பட்டன.**



சில நூறு புலிகளை சுற்றிவளைத்து பல ஆயிரக்கணக்கான படையினர். அன்றைய நிலைகளின்படி பார்த்தால் ஒரு புலி வீரனை எதிர்த்துப் போரிட நூறு படையினர் நின்றனர் என்றுதான் கூறவேண்டும். புலிகளின் கதை இத்துடன் முடிந்தது என இந்தியப் படைகள் கணக்குப்போட்டன. குறிப்பிட்ட நாட்களுக்குள் புலிகளை முற்றாகவே அழித்துவிடுவோம் என்றுகூட கூற விரும்பவில்லை. குறிப்பிட்ட மணித்தியாலங்களிற்குள்ளேயே புலிகளை தலைமையுடனே அழித்துவிடுவோம் என இந்தியப் படை வாய்விட்டுக்கூறியது. **இந்தியாவின் கண்டுபிடிப்பான சதுரங்க விளையாட்டில், எதிர்ப் படையினரின் முற்றுகைக்குள் 'ராஜா' அகப்பட்டுக்கொண்டால் 'செக்' என்று கூறுவார்கள். இங்கு ராஜாவுக்கு 'செக்' கூறினால், அந்தப் படையே செயல் இழந்ததாக அர்த்தம். தனது கண்டுபிடிப்பான சதுரங்க விளையாட்டில் இறுதித் தாக்குதல் ராஜா மீது என்பதுபோல், புலிகளின் மீதான இறுதித் தாக்குதலுக்கு தயாரானார்கள். தலைவரை அழிக்கும் இறுதி நடவடிக்கை எனக்கூறி தமது தாக்குதலுக்கு 'செக்மேற்' எனப் பெயரிட்டனர்.** ஆனால் 'செக்மேற்' சொன்னவர்களே 'செக்மேற்'றிற்கு உள்ளாக்கப்பட்டனர். இது எவ்வாறு?

(வரலாறு அடுத்தவாரம் ஆரம்பமாகும்)




# இருள்விருந்து

வீடு சத்தமில்லாம வெறுமையாக்கிடக்கு. அதுக்காக வீட்டில ஒருத்தரும் இல்லையாக்குமெண்டு நினைச்சிடப்படாது. அம்மாவைவிட மற்ற எல்லாரும் வீட்டிலதான் இருக்கிறம். காலம வெள்ளாப்போடயே சயிக்கிளில வாழைச்சேனைக்குப்போன அம்மா பதினொரு மணியாகியும் இன்னும் வரல்ல. அதுதான் எல்லாற்ற முகத்திலயும் யோசினை. ஆனா அப்பா பெரியண்ணாச்சி, தங்கச்சி எல்லாரும் வீட்டிலதான் இருக்கிறம்.

அப்ப, பெரியண்ணாச்சியும் அப்பாவும் வேலைக்குப் போறேல்லையோ? இல்ல. போகேலா போன திரும்பி வரேலா. பாழாப்போன ஆமியோ பொலிசோ ஊர்காவற்படையோ கொண்டு போடுவானுகள். கொண்டுபோனாக் கொண்டுபோனதுதான். எங்கையெண்டும் எப்பயெண்டுமில்ல. இருக்கோ இல்லையோவெண்டுமில்லை. வீட்டுக்காறர் ஒண்டு ரெண்டு வருசத்துக்கு அழுதுபோட்டு பிறகு மனசுக்குள்ளேயே பூட்டி வைச்சுக் குமுறுறத விட வேற ஒண்டுஞ்செய்யேலா.

அதுசரி... தங்கச்சி ஏன் பள்ளிக்கூடம் போறேல்ல? அதையேன் கதைப்பான்? பொம்பிளைப் பிள்ளையளை வெளியால விட்டிட்டு பிறகு அதுகளைக் காணேல்ல எண்டு தேடுறதவிட வீட்டிலயே வைச்சிருக்கலாம். அப்ப அண்ணாச்சியும் அப்பாவும் வேலைக்குப் போகாட்டி வீட்டுப்பாடுகள் கவனிக்கிறதார்? அதெல்லாம் அம்மாதான். அதுக்குத்தான் அம்மா இப்ப சயிக்கிளில வெளிக்கிட்டிருக்கிறா. காலம வெள்ளாப்போட ராத்திரி உறைய வைச்ச தயிர வாழைச்சேனைப் பக்கத்தில கொண்டுபோய் வித்துப்போட்டு அங்கயிருந்து கடல்மீனை வாங்கி 'ஐஸ்' போட்டு பிளாஸ்ரிக் வாளிக்குள்ள எடுத்துக்கொண்டந்து வீடுவீடா வித்துத்தான் அம்மா வீட்டுப்பாட்டைக் கவனிக்கிறா...

எங்கட ஊர் தென் தமிழீழத்தில இருக்கிற எல்லைக்கிராமங்களில ஒண்டு. முல்லை, மருதம் எண்டு சொல்லிற நிலங்கள்தான் எங்கட ஊர். ஊரின்ர ரெண்டு பக்கமும் ஆறு ஓடுது. அதோட குளமும் இருக்கு. இந்தப் பிரச்சினைக்கு முந்தி ஊர், தாயைக் கண்டாச் சிரிக்கிற சின்னப்பிள்ளையள் போல சந்தோசமாத்தான் இருந்திச்சு. வயல் செய்யிறதும் காட்டில பிரம்பு வெட்டுறதும் ஆத்திலயும் குளத்திலயும் மீன்பிடிக்கிறதும் பட்டிமாடடைக்கிறதும் தான் ஊராக்களின்ர தொழில்.

வீட்டு ஆம்பிளையள் எல்லாரும் இந்த நாலில ஏதாவது ஒரு தொழிலைச் செய்வினம். இதனால வீட்டுக்கு வருவாய் எப்பவுமே பிரச்சினையா இருக்கேல்லை. எங்கட ஊருக்கு இயற்கை தந்த கொடை அது. தொழில் செய்ய ஒரு முதலுமில்லையெண்டாலும் பிரச்சினையில்ல. ஒரு சின்னக் கத்தியோட பிரம்பு வெட்டுறாக்களோட பிரப்பங்காட்டுக்குப்போனா. வரேக்க ஒரு பெரிய கட்டுப் பிரம்போட வரலாம். கூடை, கதிரை பின்னிற ஆக்களுக்கு அதை வித்தா, கையில காசு வீட்டுச்சிலவும் தளம்பலில்லாமப் போகும்.

மாடும் கண்டும் எங்கட ஊரின்ர கண்மாதிரி. பட்டிக்காறர் காட்டு அடைச்சிருப்பினம். வெள்ளாப்போடயே போய் பால் கறந்து போட்டு மாடுகளைச் சாய்ச்சுக்கொண்டுபோய் மேயிறதுக்கு விடுவினம். பாலைப் பாற்சாலையில குடுக்கிற. மாதம் முடியக்காசு. பின்னேரம் மாடுகளைச் சாய்ச்சுக்கொண்டு வந்து 'காலை'யில அடைச்சுப்போட்டு விட்ட வந்தா நிம்மதியான சீவியம். இந்த நாம்பன் கண்டுகள் ஒரு கணக்கான பருவம் வந்தோடன காட்டில போயிடுங்கள். இதால அதுகளை கணக்கான வயது வரேக்க ஒண்டில் விப்பினம்; அல்லாட்டி கரத்தை மாட்டுக்கு பழக்குவினம்.

ஆத்தங்கரையில வேற ஊராக்கள் வந்துவாடி போட்டுத்தங்கிப் பொயிலை செய்யிறவை. இங்கத்தைப் பொயில சுருட்டுக்கு வலு திறமானதாம். அதால யாழ்ப்பாணத்துச் சுருட்டு முதலாளிமார் இங்கைவந்து பொயில வாங்க வருவினம். ஊரில வயல் செய்தாப் பொன்விளையும். ஆத்தங்கரையில இருந்து பாத்தால் கண் பார்வைக்கு ஏலாத தூரம்வரைக்கும் வயல்வெளிதான். வருசத்தில ரெண்டு போகமும் சும்மா பச்சைப்பாய் கணக்கா வயல்வெளி பச்சைப் பசேலெண்டு இருக்கும். வயல் வெட்டி சூடடிச்ச நெல்லை ஏத்திக்கொண்டு வந்து வீடு நிறைய அடுக்கி வைச்ச நெல்லை வித்தா, கையில ஆறு இலக்கத்தில காசு வரும். நெல்லு வித்தாப் பிறகு வயல்காறர் வீட்டுக்காறரோட ரவுணுக்குப்போனா கரத்தை பிடிச்சுத்தான் சாமான் ஏத்திக்கொண்டருவினம். பிறகு ஊர்க் கோயிலுகளில திருவிழா. தீமிதிப்பு, கொம்பு விளையாட்டு எண்டு ஒரே கொண்டாட்டந்தான்.

முந்தியே சொன்னனான்தானே ஊரின்ர ரெண்டு பக்கமும் ஆறும் குளமும் இருக்கெண்டு. ஊராக்கள் அதில மீன்பிடிக்கிறவை. குளத்தில விரால், யப்பான், சுங்கன் மீனுகள் பிடிபடும். ஆத்தில பெரிய பெரிய செப்பலி மீன் பிடிக்கலாம். தூண்டில் போட்டும், சின்னச்சின்ன தோணியில போயும் மீன் பிடிப்பினம். உந்த மீனை ஊர்க்கடைத் தெருவில வித்துப்போட்டுப்போனா குடும்பப்பாட்டக் கவனிக்கலாம். சிலபேர் மீன் பிடிக்கிறதோட பட்டிமாடும் அடைப்பினம். இல்லாட்டி மீன் பிடிக்கிறதோட பிரம்பும் வெட்டுவினம். மீன் பிடிக்கப்போற ஆக்களிட்டச் சொல்லிக் கரையில நிக்கிற சின்னனுகள் தாமரைப் பூப்புடுங்குவிக்குங்கள். நீந்தத் தெரிஞ்சவை கொடிவிலத்திப் போய்ப் பூவும் தாமரை இலையும் பிடுங்கி வருவினம். ஊர்க்கோயிலில தாமரைப் பூவாலதான் பூசையாக்குவார் பூசாரியார். தாமரை இலையிலதான் கடையிலயும் சபையளிலயும் சாப்பிடுறது.

இத்தனை தொழில் இருந்தும் ஏன் ஊர் ஆம்பிளையள் தொழிலுக்குப் போறல்ல? ஏன் வீட்டோட இருக்கினம்? ம்... அதையேன் கேட்பான்? இந்தப் பிரச்சினை தொடங்கின பிறகு அவனுகள் எங்களைப் படுத்துறபாடு சொஞ்சமோ? ஊருக்கு நடுவில பொலிஸ் ஸ்ரேசனைக் கொண்டந்திற்றாங்கள். ஒரே குறுக்காலயும் மறுக்காலயும் நடந்து திரிவாங்கள். றோட்டு நீட்டுக்கும் அவனுகளின்ர ஜீப் ஓடித்திரியும். இரவாகிற்றெண்டா, துண்டா வெளிக்கிடேலா; வீட்டோட இருக்கிறதெண்டாலும் விடுறாங்களே? இருந்தாப்போல வந்தானுகளெண்டா கண்ணிலகாணுற ஆக்களையெல்லாம் அள்ளிக்கொண்டு போயிடுறானுகள். எங்களைக் கடவுள் தான் காப்பத்தணும்.

இப்ப பட்டிக்காறர் பாடு பெரிய கஸ்ரம். மாடுகளைக் காட்டுப்பக்கம் தானே மேய்ச்சலுக்குச் சாய்ச்சுக்கொண்டு போற சிலநேரத்தில மாடுகள் காட்டுக்கையும் போகுந்தானே. அந்த மாடுகளைப் பிடிக்கக் காட்டுக்கைபோனா, காட்டுக்கை ஒழிச்சிருக்கிற பெடியனுகளோட கதைச்சிற்று வாறமெண்ட சந்தேகத்தில 'கொட்டியா சப்போட்' எண்டுசொல்லி இழுத்திற்றுப் போனானுகளெண்டா பிறகு, ஆளே இல்ல. இப்பிடி எத்தனை பெடியனுகளைக் கொண்டு போயிற்றானுகள். முந்தி எவ்வளவு பெடியனுகள் நிண்டு வேலை செய்வானுகள் இப்ப பெடியனுகளைக் கண்ணிலயும் காண ஏலா. கொம்பு இழுக்கிறதெண்டா முந்தி எவளவு பெடியனுகள். துள்ளிக்கொண்டு நிப்பானுகள். இப்ப கொம்பிழுக்க



ஆக்களும் இல்ல, கொம்பு விளையாட்டும் இல்ல. ஊரில இருக்கிற பெடியனுகளை எண்ணிப்போடலாம். அவளவு ஆக்கள்தான் மிஞ்சியிருக்கினம். ம்.....

பிரம்பு வெட்டுற, மீன் பிடிக்கப்போற ஆக்களின்ரயும் இந்தக் கதைதான். அதுகள் ஆத்துக்கு குளத்துக்கு பிரப்பங்காட்டுக்குப் போனா, அங்கு நிக்கிற பெடியனுகளுக்கு சாமான் கொண்டு போய்க் குடுக்கிறதெண்டு சொல்லிப் பிடிச்சிற்றுப் போயிடுவானுகள். அதால மீன் பிடியுங்குறைவு. எந்த நேரம் எந்த இடத்தில ஒழிச்சிருந்து சுடுவானுகள். இல்லாட்டி, பிடிப்பானுகள் எண்டு தெரியா. எப்பிடியும் ஒவ்வொரு நாளும் ஆராவது அவனுகளிட்ட மாட்டுப்படுவினம். அதால மீன் பிடியும் சரியாக் குறைஞ்சுபோயிற்று.

வயல் செய்யிறது அடியோட இல்ல. எங்கட வயலுகளில சிங்களவரைக் குடியேத்திப்போட்டாங்கள். ஒரே சிங்களமயம். மிச்சசொச்ச வயலுகளைச் செய்வமெண்டாலும் இவனுகளிட அட்டகாசம். வயல் செய்தா ஆமியும் ஊர்காவற் படையும் வந்து வயலையும் எரிச்சு, ஊராக்களையும் சுட்டு அநியாயமாக்கிப்போடுவானுகள். இப்பிடி எத்தினதரம் நடந்திருக்கு. இப்ப என்னடாண்டா நாங்கள் வயல் வெட்டி சூடடிச்சா அட் டேக்க வந்து எங்களைச் சுட்டுக் கலைச்சுப்போட்டு, எங்கட நெல்லை அவனுகள் அள்ளிக்கொண்டு போயிற்றானுகள். வீடு நிறைய நெல்லிருந்த காலம் போய் இப்ப சோத்துக்கு அரிசி வாங்கிற நிலமை வந்திற்று.

அந்தா அம்மா வாறா. மணிசி செரியா மாஞ்சு போயிற்று. வெள்ளாப்போடயே எழும்பி முப்பது கட்டை சயிக்கிள் மிதிச்சு பிறகு வீடுவீடா மீன் வித்து வாறதெண்டா அம்மா பதினொண்டு, பன்னிரண்டு மணிக்குத்தான் மீன் கொண்ட வாறதால, ஊராக்கள் வாங்கிறதும் குறைவு. அதோட அதுகளிட்டயும் மீன் வாங்கக் காசுமில்ல. தொழில் செஞ்சாத்தானே காசு. இப்ப ஊர் தொழிலில்லாம சோர்ந்து வாடிப்போய்க் கிடக்கு. அதால அம்மாவுக்கு மீன் விக்கிறதும் பெரியபாடுதான். எண்டாலும் என்னத்தைச் செய்யிற. எல்லாம் எங்கட தலையெழுத்தெண்டு தாங்கிறதான். முந்தியெண்டா சில நேரத்திலதான் ஊருக்கு கடல்மீன் வரும். மீன் வந்துதெண்டா வந்து அரை மணித்தியாலத்துக்குள்ள முடிஞ்சிடும். கொஞ்சம் பிந்தினா மீன் கிடைக்காது. ஆனா இப்ப வீட்ட கொண்டந்து குடுத்தாலும் வாங்கிறதுக்கு சனத்திற்ற காசில்ல.

எங்கட வீடு றோட்டு ஓரத்தோட இருக்கு. எங்கட வீட்டுக்கு வலதுபக்கத்திலதான் பொலிஸ் ஸ்ரேசன். இடது கொலனிக்குப் போறபாதை. அதில அவனுகளிட சென்றி. சென்றிக்கும் ஸ்ரேசனுக்குமிடையில் நடந்தும் ஜீப்பிலயும் திரிவானுகள். இரவெண்டா அவனுகளிட சத்தந்தான். நாயும் விடாம குலைக்க கடவுளே பகலிலயெண்டா வளவுக்கையும் வருவானுகள்... பெரிய பயங்கரம்.

அம்மா கொண்டுவந்த காசுக்கு சாமான் வாங்கி சமைச்சு சாப்பிடக்குள்ள பின்னேரமாகிப் பொழுதும் மங்கிற்று. இனி ஒருத்தரும் வெளியில வெளிக்கிட ஏலா. பக்கத்தில வீட்ட கூடப் போகேலா. வீட்டுக்குள்ளயே இருக்கிறதுதான் எல்லாரும் நேரத்தோடயே படுத்திருவம். படுத்தாலும் உடன நித்திரைக்குப் போக ஏலா. ஒரே அவனுகளின்ர சப்பாத்துச் சத்தம் கேக்கும் வீடு றோட்டுக்குப் பக்கத்தில இருக்கிறதால எங்கட நெஞ்சில நடக்கிறமாதிரி பயங்கரமாக் கேக்கும். நான் காதுக்குள்ள பஞ்சு வைச்சுக்கொண்டுதான் படுக்கிற. இல்லாட்டி நித்திரைகொள்ள ஏலா.

எனக்கு வெளியில போக வேணும் போல இருக்கு. ஆனா வெளியில ஒரே இருட்டாயிருக்கு. அதோட அவனுகள் நிண்டாலும் நிப்பானுகள். வெளியில போகப் பயமாயிருக்கு. அதால பேசாமப்படுத்திற்றன்.

இருட்டு விடியத்தானே வேணும்.

**பு. சத்தியமூர்த்தி தென்தமிழீழம்**

# உதிர் இலை காலம்:

# புத்தக அறிமுகம்

# நா.கண்ணன் சிறுகதைகள்

கண்ணனின் கதைகளை கால அடிப்படையில் இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

1. இந்திய மனோபாவம் கொண்ட கதைகள்.
2. இந்திய / தமிழக / ஈழ / புகலிட மனோபாவம் கொண்ட கதைகள்.

கண்ணனின் பிரதிகளில்

1. மனித உறவுச் சிக்கல்கள் மனோவியல் பரிமாணத்துடன் வெளிப்படும் கதைகள்.
2. தத்துவ விகார ஆன்மீக விசாரணைகள்.
3. இந்திய மனோபாவம் கொண்ட கதைகள்
4. இந்திய / தமிழக / ஈழ / கிழக்கிந்திய / புகலிட மனோபாவம் கொண்ட கதைகள்

இடம் பெறுகின்றன.

கண்ணனின் கதைகள் ஐரோப்பாவுக்கு தொழில் நிமித்தம் வரநேர்ந்த இந்தியத் தமிழர்களின் மனோபாவத்தைத் தவிர்க்க இயலாமல் கொண்டிருக்கின்றன. அதேவேளை அதைக் கடந்து புதிய பிரதேசங்களுக்குள் பிரவேசிக்கும் தன்மையையும் கடந்து கொண்டிருக்கின்றன. கண்ணனின் கதைகள் எவ்வகையில் 'தமிழக மேற்கத்திய மனோபாவக்காரர்களின்' எழுத்திலிருந்து வித்தியாசமானவை? தமிழக மேற்கத்திய மனோபாவக்காரர்கள். மணியன் சாவி, கிதா, அப்புறமாக தொழில் நிமித்தம் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்த தமிழகத் தமிழர்களின் மனோபாவத்தைச் சொல்லலாம். இட்லி, சட்னி மிளகாய்ப்பொடி கலாச்சாரம் கொஞ்சம்; மது மாது, மாமிசத்தோட கலாச்சாரம் கொஞ்சம், எம்பயர் ஸ்டேட் பில்டிங் கம்பியூட்டர் விளையாட்டு என கொஞ்சம்; இவர்களுக்கு மேற்கத்திய சமூகம் பற்றிய விமர்சனமோ கிழக்கிந்திய, வாழ்க்கை பற்றிய ஆழ் படிப்போ இல்லை. அடிப்படைவாத மனோபாவமே இவர்களுக்கிடையில் மிஞ்சும். சிலவேளை ஜுனியர் போஸ்ட், பிரகாஷ் ஸ்வாமி, இந்தியா டுடே ஸ்வப்பன்தாஸ், குமுதம் மாலன் வழியாகவும் இவர்களின் மேற்கு - கிழக்கு பற்றிய அபிப்பிராயங்கள் வெளிப்படும். இவர்களுக்கு மேற்கத்திய கலாச்சாரம், மாற்றுக் கலாச்சாரத்துக்கான போராட்டத்னம் என்பன வெல்லாம் முற்றிலும் அந்நியம். விடற்றவர்கள் பத்திரிக்கை கொண்டு வருவதையோ பிச்சைக்காரர்கள் நாடகம் போடுவதையோ இவர்களால் புரிந்து கொள்ள முடியாது. பாதுகாவலை விலைகளாகவே விகாரப்படுத்திச் சொல்வார்கள். மற்றொன்று; படித்துவிட்டு தொழில் நிமித்தம் அமெரிக்கா போன முதல் தலைமுறைத் தமிழர்கள் பெரும்பாலும் பிராமண மனோபாவத்தைக் கொண்டவர்கள். அதைப் போலவே ஐரோப்பாவுக்கும் படிப்பு நிமித்தம் வந்து மேற்கத்தேய வாழ்வைத் தேர்ந்து கொண்ட ஈழத் தமிழர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாண சாதீய மனோபாவம் கொண்டவர்கள்.

நல்லவேளையாக இவர்களிடமிருந்து உருப்படியான தீவிர இலக்கியமோ கோட்பாட்டு எழுத்துக்களோ வரவில்லை. இலக்கியமும் கோட்பாட்டுச் சர்ச்சைகளும் அதனது தீவிரத் தன்மையுடன் இரண்டாம் இடப்பெயர்வு எனச் சொல்லத்தக்கபடி மேற்குக்கு வந்த அகதித் தமிழர்களின் கையில் வந்து சேர்ந்தது.

இன்று வருகிற பத்திரிகைகள், தொகுப்புக்கள், கோட்பாட்டு எழுத்துக்கள் அனைத்துமே இவர்களிடமிருந்துதான் வருகின்றன. இவர்கள் அரசியல் பிரக்ஞை கொண்டவர்கள். மாற்றுக் கலாச்சார நம்பிக்கை கொண்டவர்கள். டார். அந்நியத்தின் அந்நியத்தையும் ஆராயத்துவங்கிவிட்டார். 'இரிட்டிகல் மாலாக' தமிழன் இல்லையென்பதை அவதானித்து பொதுவான விழுமியங்களில் அமைதி காணும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' நிலைக்கு வரமுடியாது. அவர்கள் துரத்தப்பட்டவர்கள். உயிர் தப்பிப்பிழைக்க வெளியேறியவர்கள். கண்ணனின் வாழ்பனுபவத்தில் இத்தகைய தமிழர்கள் வந்து விட்டார்கள். அவரது படைப்பு மாந்தர்களாகிய அவர் ஆரம்ப அபிப்பிராயங்களிலிருந்தே தொடங்கினாலும், பாத்திரங்கள் சுயாதீனம் பெறும் போது இனை விபரங்களுக்கிடையில் அதிகாரம் விரியும், இதை சமூகத்துக்குள் இருக்கும் அதிகாரமாகவே பார்க்கவேண்டும்; ஆசிரியனுக்குள் பிரக்ஞை பூர்வமாக இயங்கும் அதிகாரமாக இதைப் பார்க்க முடியாது.

ஆசிரியன் எந்த அளவுக்கு தன்னை தனது சூழல் மீறி மனிதப்புரிதலை விரித்துக்கொள்கிறானோ அந்த அளவிலேயே பன்முகப் போக்குகளும் சுயாதீன மனிதர்களும் கதா மாந்தர்களும் தோன்றுவார்கள். கண்ணனின் கதைகளில் அவ்வகையில் தனது கதை மாந்தர்கள் குறித்து 'புரிதல்'தான் செயல்படுகிறதேயில் களும், அவரது பவுண்டேச்சுக்கு நிதி வழங்கிய கோதாய்ஸ் மது உற்பத்தியினர் பங்கை நினைக்கவும், ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் மறைவுக்குப் பின் வந்த அவரது விதிமீறல்கள் பற்றிய புத்தகங்களை நினைக்கவும் சங்கடமாகத்தான் இருக்கிறது. எண்ணத்தை நாம் கடந்து போக முடியும் என்றும் தோன்றவில்லை. கூடவே புதுப்பெரியவாள் வீட்டுக்குத்தூரமான பெண்ணை கோயிலுக்கு வராதே என்று சொன்ன உபதேசமும், எழுத்தாளர் சிவசங்கரி 'நீங்கள் மூக்கை நுழைக்கவேண்டாம்' என்று சீறியதும் ஞாபகம் வந்து போகிறது.

கண்ணன் ஆபத்துக்களை உணர்ந்துதானிருக்கிறார். ஆகவே கண்ணன் அதிருஷ்டவசமாக தனது பிற்காலத்திய இலக்கியத்தை இவர்களுக்கிடையிலிருந்து படைக்கமுடிகிறது. இவருக்கான இன்றைய சமூகப் பின்புலமாக இவர்களே ஆகிவிருக்கிறார்கள். அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் தொழில் நிமித்தம் குடிபெயர்ந்தோருக்குக் கிடைக்காத பரிமாணம் இது. மாலன், வசந்தி, சுஜாதா, சாவி, ஜெயமோகன் என்பவர்களை 'விமர்சனபூர்வமாகப் பார்க்கும் தலைமுறை' வாழும் இடம் இது.

கண்ணன் கதைகளை அணுகுவதற்கான சிக்கல்கள் குறித்து கண்ணன் அவதானித்திருக்கிறார். சிறு பத்திரிகைச் சூழலில் இருந்துவந்த இந்தியத் தமிழர்கள் தற்போது மேற்கில் வாழ்கிறார்கள். சிறு பத்திரிகைச் சிந்தனையாளர்கள் வந்துபோகிறார்கள். கோ.ராஜாராம் அமெரிக்காவில் வாழ்கிறார். தீவிர இலக்கியப் பரிசான விளக்கு அமெரிக்காவிலிருந்து வழங்கப்படுகிறது. இந்திரான அப்பாத்துரை பாரிசில் வாழ்கிறார். யமுனாராஜேந்திரனாகிய நான் இங்கிலாந்தில் இருக்கிறேன். நாங்கள் சுழற்சிப் சிறு பத்திரிக்கை பற்றியும் அறிந்தவர்கள். இந்திய/தமிழக/ஈழ/ஐரோப்பிய வாழ்வு குறித்து விமர்சனம் கொண்டவர்கள். கண்ணன் சொல்கிற மாதிரி புகலிட சிறு பத்திரிகை சார்ந்தவர்களுக்கிடையில் இந்திய புகலிட தீவிர தமிழக எழுத்தாளர்களை மதிப்பிடுவதில் சிக்கல்கள் இருக்கும்போல்தான் தோன்றுகிறது. காரணம் இரண்டு பிரதேசங்களின் வாதப்பிரதிவாதங்கள், வளர்ச்சிப் பிரச்சினைகளை ஒருவேளை அறியமுடியாதவர்களாகவும் இருக்கக்கூடும். ஈழ அரசியல் சார்ந்தவர்கள், தலித் மனோபாவம் கொண்டவர்கள் என்றுமட்டும் புகலிடத் தமிழ் எழுத்தாளர்களை அவதானிக்கும் முறை ஆரோக்கியமானதாகப் படவில்லை. பிரதேச வாதங்களைத் தாண்டி புகலிட தமிழ் இலக்கிய விவாதங்களை எடுத்துச்செல்லவேண்டிய தேவை இன்று இருக்கிறது.

கண்ணன் ஆறுமுகம் கரையில் தவிக்கும் நிலையினின்று அடுத்த கட்டத்துக்கு வந்துவிட்டவர்கள் இன்னும் ஆகவில்லை. கண்ணனின் படைப்பு அந்த எல்லையை நோக்கியும் விரியும் போது மானுடம் புதிதாய் பிறக்கும்.

மேற்கில் முஸ்லீம் மக்கள் மீதான ஒதுக்குதல் இருக்கிறது. வீடு பார்த்துக்கொடுக்கும் ஏஜெண்டும், வீட்டுக்காரனும், அரசதிகாரியும் இதைத் தெரிந்து கொள்ளவே முயல்வான். வெள்ளைநிறம் புத்தத்தின்போது




நிலைமை இன்னும் மோசம். கண்ணன் கதையில் இப் பிரச்சினை வருகிறது. நிறம் பற்றிய விமர்சன பூர்வமான பிரக்ஞை கண்ணனுக்கு இருக்கிறது. நிறவாதம் பற்றி அவர் கதைமாந்தர்கள் நகைக்கிறார்கள். கண்ணன் கதைகளில் பிராமணபாஷை இருக்கிறது. அகமுடையாள், பெரியவன் என மொழி பாவிக்கப்படுகிறது. கண்ணன் வேறு வழியாகத் தமிழ் எழுதியிருக்க முடியாது. அவர் அனுபவத்தை; அவர் வாழ்வை; அவர் நம்பிக்கையைத்தான் எழுதமுடியும். கதை விவரணப் பிரதி, படைப்பு மாந்தர் விவரணப் பிரதி, உரையாடல் பிரதி என இலக்கியப் பிரதிக்குள் பல்வேறு பிரதிகள் ஊடறுத்துச் செல்கின்றன. படைப்பு மாந்தர் விவரணப் பிரதியிலும், கதை விவரணப் பிரதியிலும் நாம் அதிகாரத் தொனியை நேரடியாகக் காண முடியும். உரையாடல் பிரதியில் படைப்பு மாந்தர் குறித்த அவர்கள் வாழ்வு குறித்த ஆசிரியரின் வாது, விரோதமான அதிகாரம் செயல்படுவதில்லை. ஜாதிய மனோபாவத்தையோ, திர ஒதுக்கலையோ, ஆரிய மனோபாவத்தையோ கண்ணன் கதைகளில் காணமுடியாது.

கண்ணன் கதைகளில் மிக வெளிப்படையாக பெண்களின் மார்பகம் பற்றிய ஆசிரிய விவரணைகள் இடம்பெறுகிறது. சில கதைகளில் பாத்திர விவரணங்களாக இடம்பெறுகிறது. மார்பினை பாலியல் கவர்ச்சி உறுப்பாகவும், புனித பிம்பமாகவும் இரண்டுவிதமாகப் பார்க்கும் மரபு நம்முடையது. மேற்கில் மேலாடையின்றி நேரடியாக நமக்குத் தட்டுப்படும் முலைகள் உடனடியில் தம் சுபாவத்தில் பரவசத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தத்தான் செய்கிறது. கண்ணன் அதை வெளிப்படுத்திவிடுகிறார்.

கண்ணனுக்கும் கண்ணனின் கதை மாந்தர்களுக்கும் உள்ள பிரச்சினைகள், எல்லா இந்திய /ஈழ ஆண்களுக்கும் கல்வி மரபார்ந்த பிரச்சினைதான்.

அவரவர் மதம் சார்ந்த தத்துவ மரபுகளிலிருந்து நவீன விஞ்ஞானக் கருத்துக்களை அணுகும் போக்கு, எல்லா மத நம்பிக்கைகொண்ட அறிவு ஜீவிகளுக்கும் இருக்கிறது. குரானை முன்வைத்து பரிணாமத் தத்துவத்தை மறுக்க முயற்சி நடக்கிறது. Mcz சூத்திரத்தை முன்வைத்து நடராஜரின் பிரபஞ்ச நடனம் விளக்கப்படுகிறது. கண்ணனும் இந்தியத் தத்துவ மரபிலிருந்து 'சக்தி'யை 'சிவனோடு' சம்பந்தப்படுத்தி மதமரபும்/விஞ்ஞானக்கோட்பாடும் ஊடாகச் செல்லச் சொல்லிக் கொண்டுபோகிறார். ஜெயமோகனின் விஷ்ணுபுரம் விமர்சனத் தில்கூட பொஇங்கிலாந்து விஞ்ஞானி ஹாக்குன்ஸியர் சென்ற காலம்/ எதிர்கால மற்ற காலப் பெருவெளி, Black Hole பற்றியெல்லாம் பேசுகிறார். தன்னை மீறி நாவலில் வந்துவிட்ட நாத்திக பேதம்பற்றி துணுக்குறுகிறார் ஜெயமோகன்.

கண்ணனுக்கும் தான் விஞ்ஞானி எனும் அளவில் அப்படிப்பேச உரிமை இருக்கிறது. ஆனால், எண்ணம் கடந்த ஞானம் பற்றிப் பேசிய ஜிட்டு இதெட்சணாமூர்த்தியின் கல்விக் கூடங்களில் நடக்கும் ஊழல் தான் சிறு சொல்கிறான் (பொருண்மை அற்ற பொழுதுகளில்)

சமயம் என்ற உடனேயே உண்மைக்கு ஒரு பூச்சு வந்துவிடுகிறது. வழிபாடு, புராணங்கள், மூட நம்பிக்கைகள் இவை உண்மையை அண்டவொட்டாமல் தடுத்து விடுகின்றன. இப்போதைக்கு அறிவியல் தன் காலில் நிற்பதுதான் பலம்.

கூட்டம் முடிவதில்லை. பிள்ளையார் ஊர்வலமாகிறது. மருதிகள் உடைக்கப்படுகின்றன. மாதாகோவில் கன்னியாஸ்திரிகள் பலாத்காரம் செய்யப்படுகிறார்கள். ஜுன்ஸ் டன் அணுகுண்டு யுத்தத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்கிறார். ABC of Retatitky எழுதிய 'ரஸ்ஸல்' முன்னணியில் செயல்படுகிறார். இந்தியா அணுகுண்டு வெடிக்க வாஜ்பாய் தலையைச் சுற்றி அணு வரைபடம் சுழல போஸ்டர் அடிக்கப்படுகிறது. சுமார் 15 வருடங்களுக்கு முன்பு படித்த ஒரு புத்தகம் அது. பழைய புத்தகக் கடையில் வாங்கிய பழுப்புத்தான் புத்தகம். விஞ்ஞானிகளின் சமய தத்துவ நம்பிக்கைகள் தவிர்க்க இயலாமல் விஞ்ஞானச் சோதனைகள் மற்றும் உண்மைகள் பற்றிய அவர்களது விவரண மொழியிலும் கோட்பாட்டுத் தர்க்க மொழியிலும் இடம்பெறுகிறது என்று அப்புத்தகம் சொன்னது. விஞ்ஞானம் பற்றிய பின் நவீனத்துவ நூலாசிரியரின் கேள்வி இங்கிருந்துதான் தொடங்குகிறது.

இப்போது மூன்றுரை ஞாபகம் வருகிறது. இராமுருகன் எழுதியிருக்கிறார். கருணாகரமூர்த்தியின் கதைகளை கண்ணன் கதைகளோடு ஒப்பிட்டு அபிப்பிராயங்கள் சொல்லியிருக்கிறார். கருணாகரமூர்த்தி கதைக்குள் கதை எழுதுவதாகவும், கண்ணன் தன் அனுபவங்களை 'உலகளாவிய தளத்தில் வைத்துப் பார்த்து' சுவாரசியமாகச் சொல்ல (அது ரொம்ப முக்கியம்) கண்ணனுக்கு முடிகிறது என்கிறார்.


ஏன் அப்படி? முருகன் சொல்கிறார்' கருணாகரமூர்த்தி கதைகளில் ஜெர்மனிய சூழலையும் மீறி ஒரு அகதியின் ஆற்றாமை தென்படும். அவர்கள்டும் ஜெர்மனி; சொந்தநாட்டில் வாழ முடியாது. குடும்பம் சிதறிக் குடி

**யமுனா ராஜேந்திரன்**

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

'எஸ். பொ.' ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர். தமிழ் இலக்கியப் பரப்பெங்கும் அறியப்பட்டவர். சிறுகதை, நாவல் என்னும் படைப்பிலக்கியத் தளத்தில் முத்திரை பதித்தவர். தனக்கென்றான தனித்த இலக்கியப் போக்கினையும், எழுத்துவீச்சினையும் கொண்டவர். அவரது துணிச்சல்மிக்கதான எழுத்தும் கரத்தும் இன்றுவரை பல்வேறு விவாதங்களை தோற்றுவிப்பவை. இன்றைக்கும் இலக்கியச் செயற்பாட்டில் தீவிர கவனம் செலுத்திவரும் அவர் தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வருகின்றார். ஈழமுரசு இதழிற்காக அவர் வழங்கிய சிறப்புப் பேட்டியின் சென்றவாரத் தொடர்ச்சி இது.

பேட்டி கண்டவர் - சாதாரணன்



# அறிவினை மதிக்கும் நாகரிகத்தை தமிழாலே வளர்த்தெடுக்க வேண்டும்

**- எழுத்தாளர் எஸ்.பொ -**

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**தமிழ் இலக்கியம் என்பது தமிழ் நாட்டில் இன்றைய வணிகத் தேவைகளுக்காக ஆயிரக்கணக்கில் விளைக்கப்படுகின்ற இந்த கதைகள் அனைத்தும் இலக்கியங்களா? ஏன இந்தக் கொடுமை? ஏன் இந்த வர்த்தகத்தன்மை?**

இந்த அரசாங்கம் இதிலிருந்து விடுபட்டு சிறந்த இலக்கியங்கள் படைக்கக்கூடியதான ஒரு சகாயமான சூழலை உருவாக்கியிருக்கிறதா? இன்றைய பாடப்புத்தகங்களை எடுத்துப்பாருங்கள். எல்லாம் சவங்கள், எல்லாம் பிணங்கள், அவற்றில் உயிரே கிடையாது. இலக்கியம் என்பது சொற்களை எடுத்து செங்கற்களைப்போல சாந்து பூசி அடுக்கிவைப்பதா? இல்லையே அது வாழ வேண்டியது. வாழ்வதற்கு என்ன தேவை? உயிர் தேவை. அந்த உயிர்த்துவத்தைக் கொடுக்க அடுத்து அடுத்து வந்த அரசுகள் உருப்படியான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. இனியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். உலக அரங்கத்திலே யார் எதைப் படைத்தாலும் அது தமிழ் இலக்கியம் என்றால் உலக அளாவிய அத்தனை சிந்தனைகளுக்கு மைய முனை தமிழ்நாடுதான் என்ற பெருமையை ஒவ்வொருவரும் உணரக்கூடிய உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அதுதான் கட்டாயமாக நிகழவேண்டிய அற்புதம்.

**தமிழ் தேசியத்தைக் கட்டியமைப்பது தொடர்பான எங்கள் பார்வை என்ன?**

ஒன்று சொல்கிறேன். திராவிட இயக்கம் என்று சொல்கிறோமே சரிங்க அய்யா. தந்தை பெரியார் செய்த அற்புதங்களை மறக்கவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு திசையைக் காட்டினார். காலம் காலமாக உனக்குக் கற்பிக்கப்பட்டவை தவறானவை. உடை என்று சொன்னார். நல்லது; பகுத்தறிவுதான் உனக்கு ஏற்ற ஆயுதம் என்று சொன்னார். இத்தனையும் சரி, இந்தப் பகுத்தறிவைத் திராவிடப் பாரம்பரியம் பின்பற்றுகிறதா? முறத்தால் புலியை விரட்டினாள் என்று சொல்லும் தமிழிச்சி, ஒரு 'திராவிட வீட்டின்' தலைவியாகங்கள் வளர்ப்பார். எல்லாம் செய்வார். இன்னொரு குழுவின் தலைவரிடம் கறுப்புப்போய் இப்போது மஞ்சள்துண்டு வந்துவிட்டது. ஆனால் இப்போதும் கூறுகிறார். நான் கடவுளை நம்பாதவன். பகுத்தறிவுவாதிதான் என்கிறார். கருத்துக்கள் நிரந்தரமானவையல்ல. அவை புதுப்பிக்கப்படுதல் வேண்டும். காலத்திற்கு காலம் சாகாமல் இருப்பதற்கான புது இரத்தங்கள் பாய்ச்சப்படுதல் வேண்டும். எப்பொழுதுமே மாற்றி அமைக்கப்படாத உண்மையென்று விஞ்ஞானிகள் நினைத்திருந்தால் விஞ்ஞானம் வளர்ந்திருக்காதே. ஐன்ஸ்டீன் கண்டுபிடிப்பே தவறானது என்று விஞ்ஞானிகள் கூறிவருகின்றனர். ஆனால் நாங்கள் இதுவரையில் கருத்துவத்தையோ, கோட்பாடுகளையோ பெரியாரின் வீரியத்துடனும் நிமிர்ந்து, இவை இந்தக் காலத்திற்கொவ்வாது என்று உரத்துச் சிந்திக்கக்கூடியதொரு முதுகெலும்புடைய ஒரு தலைவர் தோன்றட்டும். இந்தநாடு உருப்படும்.

**தமிழை சமஸ்கிருதம் நகைக்கப்பார்க்கிறதே?**

சமஸ்கிருத மொழிச் சார்பானவர்கள் எங்களை நகைக்கப் பார்க்கிறார்கள் என்ற ஒரு இயல்புத் தன்மையை மறுதலித்துச் சொல்லவில்லை. ஆனால் மறு கரையாக நாங்கள் பார்ப்போம். மறு கரையாக என்றால் தமிழ் பல்கலைக் கழகத்தை உண்டாக்கியபோது அது தமிழ் நாட்டினுடைய பண்பாடு கொள்கைகள் சகலவற்றையும் கொண்டுவரவேண்டும் என்று செயற்பட்டார்களா? அல்லாவிட்டால் தமிழ் உலக அளாவிய மொழி. அந்த உலக அளாவிய மொழியின் சர்வதேசத் தன்மையை பிரச்சாரப்படுத்துவதற்காக' இந்தத் தமிழ் பல்கலைக்கழகத்தை அமைக்கிறோம் என்ற சிந்தனை இருந்திருக்க வேண்டும். அந்தச் சிந்தனை இருந்திருந்தால் தமிழின் சர்வதேசத் தன்மையை பிரச்சாரப்படுத்துவதற்கான வலுப்படுத்துவதற்கான பல்கலைக்கழகம் என்ற சொல் இருந்தால், நிச்சயமாகப் புலம் பெயர்ந்த நாடுகளிலே உள்ள வளங்களைக் கொண்டுவந்து தமிழ் பல்கலைக் கழகத்தை உலகத் தமிழர்களுக்கு மையமான ஒரு பல்கலைக்கழகமாக உருவாக்கியிருக்க முடியும்.

எங்களுடைய பார்வை முழுவதையும் பக்குவப்படுத்திச் சீர்படுத்தி எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு குழு என்று அமைக்கும்பொழுது அந்தக் குழுவிலே தமிழ்நாட்டுக்காரர் மட்டுமல்ல; தமிழ்நாட்டு அக்கறைகள் மட்டுமல்ல; உலக அளாவிய தமிழ் அக்கறைகள் அனைத்தும் இணைக்கப்படுதல்வேண்டும். உண்மையாக அந்த அக்கறைகள் இணைக்கப்பட்டிருந்தால், இந்த உலகத்தில் பரந்துவாழும் அத்தனை தமிழர்களிடமும் தமிழ் நாட்டில் இவ்வாறு ஒரு மையம் அமைக்கப் போகின்றோம். இது உலகத் தமிழுக்காகவே இதை - நாங்கள் செய்யப்போகின்றோம். நாங்கள் இவ்வளவு காலமும் பிராந்திய மொழி என்று எங்களை ஏமாற்றிக் கொண்டோம். இப்போது எங்களுக்கு உணர்வு வந்துவிட்டது. இது சர்வதேசிய மொழி. இந்த சர்வதேசியத் தன்மையை தமிழர்களாகிய நாங்கள் எங்களுடைய உள்ளகங்களைக் கொண்டுதான் செய்ய வேண்டும் என்று யாராவது இதுவரை ஒரு கருத்துச் சொன்னார்களா?

> தமிழ் பல்கலைக் கழகத்தை உண்டாக்கியபோது அது தமிழ் நாட்டினுடைய பண்பாடு கொள்கைகள் சகலவற்றையும் கொண்டுவரவேண்டும் என்று செயற்பட்டார்களா? அல்லாவிட்டால் தமிழ் உலக அளாவிய மொழி. அந்த உலக அளாவிய மொழியின் சர்வதேசத் தன்மையை பிரச்சாரப்படுத்துவதற்காக' இந்தத் தமிழ் பல்கலைக்கழகத்தை அமைக்கிறோம் என்ற சிந்தனை இருந்திருக்க வேண்டும்.

பார்ப்பன எதிர்ப்பு, சமஸ்கிருத எதிர்ப்பு என்று சொல்லும்போது அது ஒரு வாய்க்கால் அமைப்பது போலாகும். யாருக்கென்றால் தொல் தமிழ்பேணி பாதுகாப்பவர்களுக்கு ஒரு வசதி செய்து கொடுக்கிறது. சமஸ்கிருதப் பாதுகாப்பும் அதனுடைய நலன்களைப் பற்றிப் பேசுவதும் தமிழினுடைய வீறுகளை ஒழிப்பதற்கான ஒரு இயக்கமாகிவிட்டதோ, அதே போன்றுதான் பழம் தமிழ் பனுவல்களில் பயிலப்படும் மொழிகளை மட்டும், சொற்களை மட்டும் கொண்டுவந்து சேர்க்க வேண்டும்என்ற நிலை மாறிவிடும். பழந்தமிழ் சொற்களுக்கு நாம் எதிரி அல்ல. பழந்தமிழ் சொற்களில் எவ்வளவோ அற்புதமான சொற்கள் இருக்கின்றன. ஈழத் தமிழிலே போய்ப் பார்த்தால் நன்னார், படுவான், எழுவான் போன்ற அற்புதமான சொற்கள். இவற்றையெல்லாம் இவர்கள் எடுப்பதில்லை. தனித்தமிழ்வத்தை காப்பாற்றிக் கொண்டிருப்பவன். அவன் அதிகாரங்களைப் புரட்டித் தமிழ் கற்பவன் அல்லன். அவன் தன்னுடைய வாழ்க்கைக்கு எது வசதியோ அதற்காகத் தமிழ்ச் சொற்களைக் கையாளுகின்றான். அவனிடமிருந்து கற்க ஏராளமான செய்திகள் இருக்கின்றன. எங்களுடைய தமிழ் வீறினை எடுப்பதற்கு இரண்டு வழிகள் உள்ளன. எங்களுக்கு வீறார்ந்து பரம்பரை பரம்பரையாக மரபு மரபாக வந்துகொண்டிருக்கும் சொற்களை நாங்கள் மீண்டும் ஆட்சிக்குக்கொண்டுவர வேண்டும். அது மட்டுமல்லாமல் மண்ணின் மைந்தர்களிடம் பயிலப்படும் எல்லா சொற்களுக்கும் ஒரு இலக்கிய அங்கீகாரம் கொடுக்க வேண்டும். இந்த விஷயத்தை ஒன்றிலிருந்து நீங்கள் பார்க்கலாம். அக்கிரகாரத் தமிழிலே எழுதிய தமிழ் எழுத்தாளர்களின் இலக்கியங்கள் நல்ல இலக்கியங்கள் என்று பேணப்பட்டன. அது ஒரு காலம், கல்கி, தி.ஜானகிராமன் இவர்கள் எல்லாம் என்ன அற்புதமாக எழுதுகிறார்கள் என்றார்கள். இதில் என்ன அற்புதத்தைக் கண்டனர். பேச்சுத் தமிழ் என்ற பொழுது; பிரதேசத் தமிழிலே கொங்கு நாட்டுத் தமிழை; திரு நெல்வேலித்தமிழை; நாஞ்சில் நாட்டுத் தமிழைக்கொண்டுவந்து இலக்கியம் படைத்த பொழுது இலக்கியத்துக்கு ஒரு புதிய வீறு வந்ததா - இல்லையா? இதனைக்கூட இலக்கியவாதிகள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய விமர்சனம் எல்லாம். என்ன காரணம் என்றால் உச்சரிப்பு முறைக்கு அபத்தம் கொடுக்காமல், அந்த உச்சரிப்பு முறையிலே சிதைந்துபோன சொற்களை - அந்தச் சொற்களை மீண்டும் வழக்கிற்குக்கொண்டு வரவேண்டும்.

அண்ணாத்துரைக்குப் பிறகு வந்த அத்தனை முதலமைச்சர்களும் டாக்டர்தான். வேறு எந்த நாட்டுக்குப் போங்கோ. அவர்களில் ஒருவனும் டாக்டர் அல்ல. அவுஸ்திரேலியாவில் உள்ள மிக ஜனநாயகமான சில முறைகள் அற்புதமானவை. ஒரு பத்திரிகையின், அல்லது டி.வி. நிலையத்தின் நிருபர் பிரதமரிடம் சென்று பேட்டிகாணும் போது Jhon this is not way your answer? Jhone என்று கூப்பிடுவது அந்நாட்டுப் பிரதமரை. எங்களுடைய வித்துவான் பத்திரிகையாளர்களுக்குக் கருணாநிதியை கருணாநிதி என்று கூப்பிட்டால் அடுத்த நொடியிலேயே சாவானா இல்லையா? இதெல்லாம் எதைக் காட்டுகிறது.

இயக்கத்தைச் சேர்ந்த ஒருவனுக்குப் பெயர் மணிமார்பன், மணிபிறும், மார்பனிலும் எத்தனை சதவீதம் தமிழ் இருக்கிறது? இது பிரச்சினையே அல்ல.

**தமிழை வளப்படுத்தும் வழிதான் என்ன?**

நாங்கள் தமிழை உண்மையாக வளப்படுத்தவேண்டும் என்றால் மண்ணின் மைந்தர்களிடம் போக வேண்டும். அவனைப் புறக்கணிக்கக் கூடாது. கிராமத்தான், நாட்டுப்புறத்தான் என்று சொல்லப்படுபவன்தான் இன்றளவும் தமிழ்த்துஅறிவினை மதிக்கக் கூடிய நாகரிகம் உருவாக்கப்படவேண்டும். இந்த அறிவினை மதிக்கும் நாகரிகத்தை நாங்கள் மீண்டும் வளர்த்து எடுப்பதானால் அதைத் தமிழ்த்துவத்தினால்தான் வளர்த்தெடுக்க வேண்டும். ஏன் என்றால் தமிழ்த்துவம் ஓங்கியிருந்த காலத்திலேதான் 'மன்னவனும் நீயோ வளநாடு உன்னதே' என்று சொல்லும் தைரியம் இருந்தது.

இவை எல்லாவற்றையும் எடுத்துச் சொல்வதற்குக் காரணம் தமிழனுக்கு ரோசம் இல்லாமல் போச்சு. எருமை மாட்டுத்தோல் போல் ரோசம் இழந்துவிட்டோம். அந்த ரோசத்தை வரப்பண்ணவேண்டும்.

**அரசியல்வாதிகள் என்னதான் செய்யவேண்டும்?**

அரசியல்வாதியாக வந்தவுடனேயே இங்கே அவர் அறிஞர்தான். எங்கள் நாட்டில் அது நடக்காது. திருச்செல்வம் அமைச்சராக இருந்தபோது என்னுடையபுத்தக வெளியீட்டு விழா நடந்தது. அவர் வந்து தலைமை தாங்கினார். அப்போது சொன்னார், இந்தியத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் தமிழ் விஞ்ஞானச் சொற்களை உண்டாக்குவதில் 'ஒண்டுக்கிருக்க' வேண்டும் என்றார்.

அப்போது அவரை புடிபுடின்னு புடிச்சுக் கிழிச்சம் நாங்கள். நீ வந்து தமிழ் நலத்தைப் பேணு. தமிழிலே வந்து 'ஒண்டு' க்கிருக்காதே என்று சொன்னோம். அப்படி ஒவ்வொரு துறையிலேயும் ஒரு முன்னோடி - திருச்செல்வம் சட்டத்துறையில் முன்னோடி, அவர் அரசியலுக்காக வந்து அந்த அரசியலில் எங்களுடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் சிந்தனைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தினார். அவ்வளவுதான். அதுக்காக அவரை இரவோடு இரவாகத் தலைப்பாகைக் கட்டித் தமிழறிஞர் என்று சொல்கிற வழக்கம் கிடையாது. அதே போல தமிழறிஞர் என்றால் அனைத்து நிர்வாகங்களும் தெரிந்தவன் என்றும் நாங்கள் சொல்லிவிட இயலாது.

> எங்களுக்கு வீறார்ந்து பரம்பரை பரம்பரையாக மரபு மரபாக வந்து கொண்டிருக்கும் சொற்களை நாங்கள் மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவர வேண்டும்.

மனித வாழ்க்கையில் எத்தனையோ துறைகளிருக்கின்றன. அந்த ஒவ்வொரு துறையிலேயும் ஒவ்வொருவரும் நிபுணராக இருக்கலாம். அந்தத்துறை சார்ந்த நிபுணர்களை நாங்கள் அங்கீகரிக்க வேண்டும். இங்கே அப்படியில்லை.

*(முற்றும்)*

ஈழமுரசு நடாத்தும்

# இசை முரசு 99

## - சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி -

**போட்டிக்கான விண்ணப்ப முடிவுநாள் 02.03.1999**

### விண்ணப்பப் படிவம்

1. முழுப்பெயர்: ..................................................
2. பிறந்த நாள்: ..................................................
3. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயர்: ..................................................
4. முகவரி (பிரஞ்சு மொழியில்): ..................................................
..................................................
5. தொலைபேசி எண்: ..................................................
6. பங்குபற்றும் போட்டி: **தனிக்குரல் பாடற்போட்டி / இணைகுரல் பாடற்போட்டி**
7. தனிக்குரல் பாடற்போட்டியாயின்
I பங்குபற்றும் பிரிவு: **மேற்பிரிவு / கீழ்ப்பிரிவு**
II பாடவிரும்பும் பாடலின்பெயர்: 1 ..................................................
இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ..................................................
..................................................
III பாடவிரும்பும் பாடலின் பெயர்: 2 ..................................................
இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ..................................................
..................................................
8. இணைகுரல் போட்டியாயின்,
I இணைந்து பாடுபவர் பெயர்: ..................................................
முகவரி: ..................................................
II பாடவிரும்பும் பாடலின் பெயர்: 1 ..................................................
இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ..................................................
..................................................
III பாடவிரும்பும் பாடலின் பெயர்: 2 ..................................................
இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர் ..................................................
..................................................

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எனவும் அதனை முழுமனதுடன் ஏற்பேன் என்றும் இத்தால் உறுதிசெய்கின்றேன்.

பாதுகாவலரின் ஒப்பம் ____________ விண்ணப்பதாரரின் ஒப்பம் ____________

## பங்குபற்றுவோருக்கான விதிகள்:

1. இதுவரை வெளியாகியுள்ள தமிழீழ விடுதலைப்பாடல் தொகுப்புக்களில் இருந்து மாத்திரமே போட்டிக்கான பாடல் தெரிவு செய்யப்பட வேண்டும்.
2. போட்டியாளரின் தெரிவுக்காக இரண்டு பாடல்கள் அனுமதிக்கப்படும்.
3. இணைகுரல்பாடற்போட்டி, தனிக்குரல்பாடற்போட்டி என இருவகைப் போட்டிகள் நடாத்தப்படும்.
4. தனிக்குரல் பாடல்போட்டி, 14 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு எனவும், 14 வயதிற்கு உட்பட்டோர் கீழ்ப்பிரிவு எனவும் இரு பிரிவுகளாக பிரித்து நடாத்தப்படும்.
**மேற்பிரிவு: 31.05.85 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.**
**கீழ்ப்பிரிவு: 01.06.85 அன்றும் அதற்கு பின்னரும் பிறந்தவர்கள்.**
5. இணைகுரல் பாடற்போட்டிக்கு வயதெல்லை இல்லை. தெரிவு செய்யும் பாடல் இணைகுரல் பாடல்களாக இருத்தல் வேண்டும்.
6. முதற்சுற்றுப்போட்டியில் தெரிவான பாடகர்கள் இறுதிப் போட்டிக்கு அழைக்கப் படுவர்.
7. இறுதிச் சுற்றின்போது, மேற்பிரிவிலும், கீழ்ப்பிரிவிலும், 1ம், 2ம், 3ம் இடத்திற்குரியோரும், இணைகுரல் போட்டியில் சிறந்த ஒரு இணையும் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.
8. மேற்பிரிவு முதலாம் இடத்தைப் பெறுபவர் சிறந்த பாடகராக தெரிவு செய்யப்பட்டு 'இசை முரசு 99' இற்கான விருது வழங்கி சிறப்பிக்கப்படுவார்.
9. விண்ணப்பக் கட்டணமாக 100FF செலுத்தப்பட வேண்டும்.
10. விண்ணப்பம் செய்வதற்கான இறுதித் திகதி: 28.02.99
11. விண்ணப்பம் செய்ய வேண்டிய முகவரி:
கடித உறையின் மேல்மூலையில் 'ISAI MURASU 99' எனக் குறிப்பிடவும்.

EELAMURASU - 22 Rue Perdonnet, 75010 Paris.
Tel: 01 40 37 63 63 Fax: 01 40 37 64 64


சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

(இதில் குறிப்பிட்டிருக்கும் நிமிடங்கள் உண்மையானவை)




இந்தியா 45 நிமிடம்
பிரான்ஸ் 200 நிமிடங்கள்
(மாலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | 45 நிமிடம் | பிரித்தானியா | 150 நிமிடம் |
| கனடா | 150 நிமிடம் | அமெரிக்கா | 150 நிமிடம் |
| தாய்லாந்து | 35 நிமிடம் | ஜேர்மனி | 120 நிமிடம் |
| ஹொங்கொங் | 100 நிமிடம் | அவுஸ்திரேலியா | 100 நிமிடம் |
| பிரான்ஸ் | 200 நிமிடம் | பிலிப்பைன்ஸ் | 50 நிமிடம் |
| இலங்கை | 45 நிமிடம் | அல்ஜீரியா | 70 நிமிடம் |
| சுவிஸ் | 120 நிமிடம் | மொரோக் | 70 நிமிடம் |
| மொறிசியஸ் | 55 நிமிடம் | பெல்ஜியம் | 125 நிமிடம் |
| சிங்கப்பூர் | 55 நிமிடம் | பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | 100 நிமிடம் |
| துனிசியா | 70 நிமிடம் | | |

## இலங்கைக்கு 45 நிமிடங்கள்

லண்டன், ஜேர்மனி, சுவிஸ் நாடுகளுடன் இத்தாலி, ஹொலன்ட்
ஆகிய நாடுகளிலும் எமது தொலைபேசி அட்டை சேவையில் உள்ளது.

சகல நாடுகளுக்குரிய தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## GNANAM Telecom Center

195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.
Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14
M°: La Chapelle / Gare du Nord




# நட்பு என்பது...

சாதாரணமாக ஒரு மனித வாழ்க்கையில் நட்பு என்பது இன்றியமையாத ஒரு விடயம். இது ஆண்கள் பெண்கள் பேதமின்றி பொதுவாக மனிதர்கள் அனைவருக்குமே தோன்றக் கூடிய ஒரு இயல்பான நிகழ்வு. ஆனால், இந்நட்பு என்ற உறவு எல்லோருக்குமே நல்லதாக வாய்ப்பதுமில்லை, சிலருக்கு நல்லதைத் தவிர்த்து தீயதென்ற குணமே இருந்ததுமில்லை. ஆனால் ஏனோ எம் சமுதாயத்தைப் பொறுத்தவரை ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே எப்படி ஒவ்வொரு விடயங்களிலும் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியுள்ளார்களோ அல்லது குற்றம் கண்டுபிடிக்கும் நிலையை உருவாக்கியுள்ளார்களோ அது போலவே, இந் நட்பு என்ற உறவிலும் பெண்ணுக்கு ஒரு எல்லையை வகுத்துள்ளார்கள். அதாவது ஆண் என்பவர் எவரோடும் எவ்வளவு ஆழமாகவும் தன் நட்பை பரிமாறிக்கொள்ளலாம். இப்படி இவ் ஆண்மகன் பரிமாறிக்கொள்ளும் நட்புக்குரியவர் பெண்ணாகக்கூட இருக்கலாம். ஆனால் எங்கே பெண் என்பவள் இவ் ஆண்மகனைப்போல சற்று அதிகமாக இன்னுமொருவருடன் நட்பு வைப்பதை பெரிதாக எம்மவர்கள் விரும்புவதில்லை. அதாவது சாதாரணமாக பெண்களுடன் பெண்கள் மட்டுமே தீவிர நட்பாக இருத்தலையே எம் சமுதாயம் பூரணமாக விரும்புகிறது. சற்று மாறாக தன்னுடன் ஒரு பெண் அதிக நெருக்கமாக இன்னொரு ஆணுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டால் அதை தப்பான பார்வையாலேயே அளந்து கொள்கிறார்கள். அதாவது குறிப்பிட்ட அப் பெண் என்பவள், அவ் ஆணின் மேல் தீவிரமான காதலையோ அன்றி ஒரு சாதாரண நடைமுறைக்கு அப்பாற்பட்ட ஒரு உறவினடிப்படையிலேயே பழகிக்கொள்வாள் என்றே பலரும் எதிர்பார்க்கிறார்கள். ஏனோ அவளுக்கும் தன்னைச் சூழ உள்ள சூழலில் பலதையும் அறிந்துகொள்ளவேண்டும். பல துறைகளிலும் சாதனைபடைக்க வேண்டும். அதற்குதவியாக பெண்கள் மட்டுமல்லாது ஆண்கள் உதவியும் தேவைப்படுமிடத்து அவருடன் இணைந்து செயற்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் உருவாகும் என்பதை உணர்ந்து கொள்பவர்கள் பெரிதாக இல்லை.

இச் சரியான புரிந்துணர்வுகள் இல்லாத காரணங்களால் ஏராளமான பெண்கள் மனதால் நிறைய நொந்துகூடப் போகிறார்கள். ஏனெனில் இவர்கள் மேல் எம் சமுதாயத்தில் உள்ளவர்கள் இட்டுக்கொள்ளும் அவப்பெயர்கள்தான் இதற்குக் காரணம். உதாரணமாக ஒரு பெண் தான் மனந்திறந்து கதைக்கும் ஒரு நெருங்கிய நண்பராக ஒரு ஆணை வைத்துக்கொண்டால் அது அவளுக்கு அவ் ஆணின் மேல் உள்ள 'ஒரு தீவிர ஆசை'யின் மேல் உருவாகிய நட்பு என்றே எண்ணிக்கொண்டு, அக் குறிப்பிட்ட ஆண்மகனை அப் பெண்ணுடன் இணைத்து தகாத கற்பனைக் கதைகளை விதைத்து விடுகிறார்கள். இதனால் சாதாரணமாக நல்ல நட்பென்ற உணர்வில் தம் உறவை வளர்த்துக்கொண்ட ஏராளமானவர்கள் சமுதாயத்தில் தீராத அவப்பெயரை சம்பாதித்துள்ளார்கள். எனவே இங்கு நாம் குறிப்பிடுவது இதுதான். நட்பு என்பது ஒரு பொதுவான இயல்பு. இது ஒரு பெண் தன்னையொத்த பெண்ணோடு மட்டுமல்லாது ஆணோடு கூட நட்பு வைத்துக் கொள்ளலாம். இப்படி நட்பு வைத்துக்கொள்வதன் மூலம் எப்பவுமே தவறான உறவொன்று அவர்களுக்கிடையே ஏற்படும் என்று நினைப்பது, எம் மனங்களிடையே தோன்றும் 'அழுக்குத் தனமான கற்பனை' மட்டுமே!

# உறுதியால் உயர்ந்தவர்

மனிதர்களின் ஆசைகளினுள்ளே ஒவ்வொருவருக்கிடையேயும் பல வேறுபாடுகள் உண்டு சிலரின் 'ஆசைகள் வெறுமனே அவர்களின் மகிழ்வினை நிவர்த்தி செய்வதாக மட்டுமே அமையும். ஆனால் சிலரின் ஆசைகளோ சாதனைகளை சம்பாதித்துக்கொள்ளும். அவ்வாறான ஒரு சிறிய ஆசை



யின் பாதிப்பால் இன்று ஐரோப்பிய அளவில் பிரபலமாயிருக்கிறார் ஒரு பெண்மணி. அவ்வாறு அவர் பிரபலமாக காரணமாக இருந்தது எதுவென்றால் அவருக்கு மிருகங்களின் மேல் இருந்த அதீதமான அன்பு.

ஆம்; ஆரம்பத்தில் ஒரு மிருக வைத்தியராக வர விரும்பிய Marie Beatrice என்ற பெண்மணி சந்தர்ப்பவசத்தால் இங்குள்ள மாநகரசபையொன்றில் தொழிலாளராக சேவையாற்ற வேண்டி வந்துவிட்டது. ஆனால் அவர் மனதினில் இருந்த மிருகங்களின்மேல் இருந்த பற்றால் தன்னுடன் தொழில் ரீதியாக நட்புக்கொண்ட ஒருவர் மூலம் பனியில் ஓடும் ஊர்தி இழுக்கும் நாய்களைப்பற்றி அறிந்துகொண்டார். அதன்பின் தன் தொழில் நேரம் முடிவுற மீதியுள்ள நேரங்களில் அந் நண்பருடனே இணைந்து அந்நாய்களுடன் பழகத் தொடங்கினார். அதன்பின் மேலும் அவர் நடத்தும் அந் நாய்களின் பனிச்சறுக்கு வண்டி விளையாட்டின் மேலும் அதிக அக்கறை இவருக்கு ஏற்பட்டது. இதனால் அந் நண்பரையே தன் வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக்கொண்டு தன்னுடைய இலட்சியமாக, அந் நாய்கள் மூலம் இவ்விளையாட்டில் தேசிய அளவில் விருதுகளைப்பெற விரும்பினார். அதற்காக கடுமையாக உழைக்கவும் தொடங்கினார்.

இன்று இவரின் கடுமையான இவ் உழைப்பின் பயனாக பிரான்சில் மட்டுமல்லாது, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய அளவில் நடந்த நாய்களுக்கிடையேயான பனிச்சறுக்கு ஊர்திப்போட்டிகளில் கூட முதல் பரிசைப் பெற்று பல விருதுகளையும் இன்று தனதாக்கிக்கொண்டுள்ளார்.

இது மட்டுமல்லாது, இவரது அடுத்த குறி, உலக அளவில் தன் நாய்களை தெரியப்படுத்தி இப்போட்டியில் உலக விருதையும் சம்பாதித்துக்கொள்வதுதானாம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஆறுதல் சொல்ல ஒரு உறவு!



மேற்குலக நாட்டு வாழ்க்கை முறையைப் பொறுத்தவரை தாறுமாறு, தன் வேலையுண்டு தன்னைச் சுற்றிய தேவைகளில் மட்டுமே அதிக அக்கறை உடையவர்களாகவே அநேகர் இருக்கின்றனர். இவர்களுக்குள்ளும் சற்று வித்தியாசமாக மற்றவர்களின் நலனிலும் அக்கறை உள்ளவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இப்படியானவர்களில் ஒருவர்தான், Pierrette Nardo என்ற 43 வயதுடைய பிரெஞ்சுப் பெண்மணியும். ஆரம்பத்தில் வியாபாரத்துறையில் அதிக ஆர்வத்துடன் செயற்பட்டு நிறைந்த வருமானத்தைப் பெற்ற இவர், ஒரு சமயம் வைத்தியசாலை ஒன்றில் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அங்குள்ள தனிமையான சூழ்நிலையின் கடுமையினைக் கண்டு தன் வாழ்க்கையையே இன்று திசை திருப்பிவிட்டார்.

தற்பொழுது பல வைத்தியசாலைகளிலும் உறவினர் இல்லாத தனிமையில் வாழும் பலருக்கும், இன்று நெருங்கிய ஒரு உறவினராக தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறார் இப் பெண்மணி. அதாவது வயோதிப காலங்களிலும் அல்லாவிடின் நோய்வாய்ப் பட்டிருக்கும்போதும் நோயின் கடுமைகளிலும் அதே சமயம் ஆறுதல் சொல்ல எவருமற்று மன அமைதியற்று வாழும் பலருக்கும், இன்று அவர்களின் மனக்குறையைக் கேட்டு மனம் திறந்து கதைக்கும் ஒரு நெருங்கிய உறவினராக திருமதி Pierrette Nardo இருக்கிறார். ஆரம்பத்தில் தான் ஒருவரே இத் தொழிலில் செயற்பட்டு வந்தவர் தற்பொழுது தன்னுடன் பலபெண்களையும் இணைத்து இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். அதுமட்டுமல்லாது இவரின் அதி தீவிரமான இச் செயற்பாட்டைக் கண்ட ஒரு வைத்தியத்துறைச் சார்ந்த நிறுவனம் இன்று இவரை தம் நிறுவனத்தில் இணைந்து உளவியல் ரீதியாக பாதிப்புற்று மருத்துவத்தால் குணமடையாதவர்களை இவரின் அன்பான பேச்சுத் துணை மூலம் சுகப்படுத்தலாம் என்று கூறி தம்முடன் இணைத்துள்ளார்கள்.

## உடலில் தேவையற்ற ஊளைச் சதைகள் அற்று திடமாக இருக்க நாம் கீழேதரும் சில உடற்பயிற்சிகளை நீங்களும் செய்யுங்களேன்!

1. உடலை நில மட்டத்துடன் அழுத்தமாக வைத்துப் படுத்தபடி கைகளையும் அழுத்தமாக விரித்துவைத்தவண்ணம் நீட்டியபடி சுவாசத்தை நன்றாக உள்ளிழுக்கவேண்டும். ஐந்து விநாடிகளுக்கு அந்த நிலையிலேயே தொடர்ச்சியாக இருந்து பின் உடம்பை அசைக்காமலே மூச்சைவெளியேற்ற வேண்டும். இவ்வாறு ஐந்து நிமிடங்களிற்கு தொடர்ச்சியாகச் செய்யலாம்.

2. நிலத்தில் படுத்தபடி கைகளை சற்று மடக்கியவாறு கைவிரல்கள் ஒன்றையொன்றுடன் தலையில் பதித்தபடி அருகில் உள்ள படத்தில் காட்டிய நிலையில் கால்களை வைத்துக்கொள்ள வேண்டும். இதன்பின் மூச்சை நன்றாக உள்ளிழுத்து சற்று நிதானித்து, பின் மூச்சை வெளியேற்றவும் வேண்டும். இவ்வாறு ஐந்து தொடக்கம் பத்துத்தடவைகள் செய்து கொள்ளலாம்.



3. உடலை இடுப்பில் இருந்து அடிப்பாதம்வரை சுவருடன் சேர்த்து அழுத்தியபடி உயர்த்திக்கொள்ளவேண்டும். கால்பாதத்திலுள்ள விரல்கள் யாவும் சுவரோடு இறுக்கமாக தொட்டுக்கொள்ளும்படி வைத்துக் கொள்ள வேண்டும். அதன்பின் தொடர்ச்சியாக ஆழமாக மூச்சை உள்ளிழுத்து சுவாசித்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு ஐந்தாறு முறைகள் செய்துகொள்ளலாம்.

# கேள்விகளால் ஒரு வேள்வி செய்வோம்

ஓர் உயிர் சுருண்டு கிடக்கின்றது. நீண்ட நாட்களாக நித்திரையின்றிச் சுருண்டுகிடக்கின்றன உயிர்கள். ஒரு வாய் சோற்றுக்கு வழியின்றி வதை படுகின்றன உயிர்கள். ஒரு போதுமே ஒரு உணவும் கிடையாது வயிறு எக்கி, வாழ்வு இழந்துபோய்க்கிடக்கின்ற உடல்கள்.

இப்படித்தான் இருக்கின்றது வாழ்வு. இதுதான் வாழ்வு. இதேதான் வாழ்வு.

வாழ்வினில் எந்த வசந்தமும் வீசவில்லை. கெட்டு அழிந்து, சீர்குலைந்து கிடக்கின்ற வாழ்வாக சூழல் ஆகிப்போகின்றது.

சுருண்டு கிடக்கின்ற ஓர் உயிரை நீங்கள் பார்த்தீர்களா? அன்று அதனைப்பார்த்து அழுதுவிட்டோம்.

வெறும் எலும்புக்கூடு, எலும்பின் நிறம் தெரியாதிருக்க தோலைவைத்தாற்போல் இருக்கின்றது. சின்னதொரு உருவம். மண்டை மாத்திரம் பெருத்திருக்கின்றது.

அதன் முன்னால் கோப்பை. கோப்பையில் இல்லாதசாப்பாடு. கோப்பை இருக்கின்றது. ஆனால் சாப்பாடு இல்லை.

இடுங்கிய கண்கள். இந்தக்கண்கள் என்னவென்று ஒளிர்கும்?

இன்றோ, நாளையோ இறந்துபோய்விடும் என்று ஏக்கிக்க வைக்கின்ற உடல்.

யார் இது? சோமாலியக் குழந்தையா?

இல்லை. அப்படியில்லை. வன்னிக் குழந்தை நம் மண் குழந்தை.

வன்னிக்குழந்தை என்ன, வாகரைக்குழந்தை என்ன, சோமாலியக் குழந்தை என்ன எல்லாமே குழந்தைகள்தானே?

குழந்தை என்ன, கிழவி என்ன எல்லாம் மனிதர்தானே?

எல்லா உயிர்கட்கும் பசி இருக்கும்; பசியால் பரிதவிப்பர். பட்டினியில் துடிதுடிப்பர். பசியால் துடிக்கின்ற கொடுமை தாங்க முடியாதது.

இந்த வன்னிக் குழந்தையும், வாகரைக் குழந்தையும் செய்த கொடுமை என்ன?

இந்தக் குழந்தைகட்கு சோறு போடாமல் தடுக்கிற உரிமை எவருக்கு இருக்கிறது?

ஒன்று சொல்லவோ? இந்த வன்னிக்குழந்தைகட்கு சோறுதர மறுக்கிறவர்களின் குழந்தைகள் சொகுசாக இங்கிலாந்திலும், பிரான்சிலும், அமெரிக்காவிலும் என்று ஆடம்பரவாழ்வு வாழ்கிறார்கள்.

அந்தக் குழந்தைகள் மீது ஆத்திரம் பட்டு என்ன பயன்?

ஆனால் அந்த அதிகாரத்தின் மீதுதான் எம் கடுங்கோபம்-அதுவே நமக்குத் தேவையானது.

'நாம் கோபம் கொள்கிறோம் இல்லை. ஆத்திரப்பட்டு அடித்து நொறுக்குகிறோமில்லை. அதுதான் நமது பிரச்சினை.

இங்கு பாருங்கள்- இந்த வன்னிக் குழந்தையைப் பார்க்கின்றபோது...

குமுறி அழுகை வருகின்றது. இந்தக் குழந்தை செய்த கொடுமை என்ன என்ற சோகம் எழுகின்றது. அதன் உருவத்தையும், உடலின் ஒடுக்கத்தையும் பார்க்கின்றபோது ஆதங்கம் எழுகின்றது.

எல்லாவற்றிற்கும் பிறகும் ஆத்திரம் வருகின்றது. இந்தக்கொடுமை செய்தோர் மீது கோபம் வருகின்றது.

ஆனால் ஒன்று கோபத்தைத் தீர்ப்பதற்கு குறுக்கு வழி ஒன்றும் கிடையாது.

**நேரான வழி என ஒன்று இருக்கின்றது. நெஞ்சை நிமிர்த்திய வீரர் அந்த வழி தனில் பயணம் செய்கின்றனர்.**

நம் கதையோ வேறு-நமக்குத் தெரிந்தது அழுகை ஒன்றுதானே!

அதற்குமப்பால் நாம் ஒன்றும் செய்யவில்லையா?

செய்கிறோம்தான். எனினும் செய்வது போதாது செய்வதற்கு இன்னும் காரியங்கள் இருக்கின்றன.

இந்தக் குழந்தையைப் பாருங்கள். எப்படி இருக்கவேண்டிய குழந்தை இது!

அம்மாவின் மடியில் பால்குடித்து. ஆறி

காலத்தைப் பதிவுசெய்து
மாயோன் எழுதுவது


உறங்கவேண்டிய குழந்தை.

அப்பாவின் அரவணைப்பில் அம்புலி பார்க்கவேண்டிய குழந்தை.

தாய் முலை சப்பி, பல்முளைத்தபின் கீரை மசித்து, பருப்பு துவைத்து, சோறூட்டவேண்டிய குழந்தை.

தத்தித் தளிர்நடைபயின்று, நடக்கிறதால் குப்புற விழுந்து, அழுது, எழும்பி, சிரித்து நம் சிந்தையை மயக்கவேண்டிய குழந்தை.

மழலைபேசி, மனம் மகிழ்ந்து, சின்னூட்டியாய் இரண்டுபல் தெரிய, கன்னம் குழிவிழச்சிரித்து, அழுது, அடம்பிடித்து, ஆய்க்கினை செய்து, அதன் பிறகு



அத்தனையும் மறக்கும் படியாய் குறும்புகள் செய்து, குதூகலித்து வாழவேண்டிய குழந்தை.

பசியென்றால் என்ன? குழந்தைக்கு அது தெரியுமா?

பசி வரமுன்னம் அத்தனையும் நாம் பருக்கிவிடுவோமே.

அடுக்கிவிடலாம் அத்தனையையும் அட்டவணை போட்டோமென்றால் ஒரு நாளைக்கு இவ்வளவும் குழந்தை சாப்பிடுகின்றதா என்று யாரும் நாவூறிப்போட்டு விடுவார்கள்.

காலையில் எழுந்து தாய்ப்பால், சிறிது நேரத்தில் தக்காளிப்பழச்சொதியும், உருளைக்கிழங்கும் மசித்த இடியப்பம். பிறகு பால், அதன் பிறகு தோடம்பழச்சாறு.

பிறகு சோறு கீரை பருப்பு, நெய்யுடன் சோறு, மீறும் இருக்கும். பிறகு,

பிறகென்ன எல்லாம் வழமைப்படி பால், உருத்தம்மாக்கனி, பால்புட்டு, முட்டை வெள்ளைக்கரு, பப்பாளிப்பழம்.

இரவானால், இடியப்பமென்றால் மீனெண்ணெய்க் குளிகை. அது இது என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஏழைவீட்டிலும் இந்த விதமாய் இருந்தது. ஆனால் இப்போது?

அப்படியொன்றும் சொல்லவே முடியவில்லை.

ஒருவேளை உண்பதற்கே அல்லல் படுகின்ற...

தொற்று நோயினால் மீண்டும் மீண்டும் அவதிப்படுகின்ற,

கொடுங்குளிரில் போர்வையின்றி குலை நடுங்குகின்ற...

கடும் மழையில் கூரையுமின்றி அலைந்து திரிகின்ற...

பாம்புக்கும், தேளுக்கும், பல்லிக்கும் பூரானுக்கும் பயந்திருக்கின்ற...

நுளம்புக்கடிக்கும், நுள்ளான் மொய்ப்புக்கும் மூட்டைப்பூச்சிக்கும் வதைபடுகின்ற..

ஷெல்லடிக்கும், கிபீர் குண்டுக்கும் துவக்கு வெடிக்கும் துடித்துப்போகின்ற

குழந்தைகளைத்தான் நாம் காண்கின்றோம்.

குழந்தையாக இருக்க முடியாத விதி அவர்கட்கு.

**பசியினால் தனது மூன்று பிள்ளைகள் துடிப்பதைப் பொறுக்காது வன்னியில் தந்தையொருவர் தற்கொலை செய்தார்.**

அப்படித் தெரிவிக்கின்ற ஒரு செய்தி.

தற்கொலை செய்யும் வரையும், செய்யும் கணத்திலும் அந்தத் தந்தையின் மனது என்ன தவியாய்த் தவித்திருக்கும்.

குடும்பத்தலைக்குணத்தாலா அவர் தற்கொலை செய்தார். காதல் தோல்வியா அவரை தன்னைத்தானே கொலை செய்யவைத்தது?

இல்லையே, இந்த சோதனைகளை எம்மால் புரிய முடிகின்றது.

தான் பெற்ற பிள்ளை பட்டினியில் தவியாய்த் தவிக்கையில் தன் கையினால் ஒரு கவளம் சோறு ஊட்டமுடியாத நிலையில்,

அந்தப் பிள்ளையின் பட்டினிக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாத நிலையில்

ஒரு நேரக்கஞ்சி வார்க்கமுடியாத நிலையில் நான் ஏன் பிள்ளைபெற்றேன் என்று கழிவிரக்கப்பட்ட நிலையில் இருக்க இருக்க இன்னும் இந்த வேதனைகளைச் சகிக்க வேண்டுமா என்று வெப்பியாரப்பட்டு,

தன் வாழ்வைத் தற்கொலையினூடாக முடித்துக்கொண்டார்.

தவறுதான் செய்தார். அந்தத் தவறைப் புரிகின்றோம். அதற்குமப்பால்...

இதுதான் நிலைமையா?

இப்படித்தான் வாழ்வா?

இதனை மாற்றவே முடியாதா?

இதனுள்ளே அழிந்து போவதா?

இப்படி இன்னும் எவ்வளவு கேள்விகள் எழப்போகின்றன. கேள்விகளே வாழ்வாகிப் போகின்றன.

இல்லை, கேள்விகளை நாம் வேள்விகளாக மாற்றுவோம்.

வேள்விகள் வீரத்தை விளைவிக்கும். வேள்விகள் விடுதலையின் வெற்றியினைப் பெற்றுத்தரும்!

நிச்சயம் இது நடக்கும்!!

(19ம் பக்கத் தொடர்ச்சி)

## உதிர் இலை காலம்...

பெயர்ந்த கூடு திரும்ப நேரம் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு பறவையின் பார்வை.'

இந்திய மனோபாவம் என்று சொன்னேன். பயணம் போவதும் தொழில் நிமித்தம் அனுசரித்து அமைதியாக வாழ்வது மான பார்வைதான் மேற்கு குறித்த தமிழனின், இந்தியத் தமிழனின் பார்வை. ஆகவேதான் இந்தியத் தமிழன் மேற்கின் வாழ்க்கை பற்றி உருப்படியாகி, எதும் செய்ய முடியவில்லை. மேலும் ஈழத்தமிழர்க்கும் தனக்கும் அனுபவ பூர்வமாக உள்ள வித்தியாசத்தை தெளிவாகச் சொல்லியிருக்கிறார் கண்ணன்.

துரத்தப்பட்ட பறவை மறுபடி கூடு திறந்தால், உடைத்துக் கொண்டு சொந்தமிருக்கும் இடம் தான் தேடிப்போகும். அகதிக்கு அவன் இழந்துவிட்ட நாடு ஒரு சோகம் நிரந்தர சோகம். வன்முறை அவன் வாழ்வெங்கும் நிறைந்தது. குடியேற்றப் பிரச்சினைகள் அவனுக்கு மட்டுமே உண்டு. விழுமியங்கள் உடைந்து போகும் மனோநிலை பேதலிக்கும் பதட்டத்தினிடையிலேயே அவன் வாழ்வு. மேற்கில் புதிய நீண்டத்தகாதவன் அவன்தான். உதிரிப் பாட்டாளி அவன் தான்.

இந்தியத் தமிழர் வாழ்வு அவ்வாறானது இல்லை. தொழில், வீடு, ஸ்திரநிலை, குடும்பம், சொந்த பந்தம், இந்திய தேச பக்தி போன்றனதான் அவன் உடனடி உலகம். கண்ணன். தனது ஆரம்பகாலக் கதைகளில் இருந்த பண்பை, ஈழத்தமிழர் உறவின் பின் உடைத்திருக்கிறார். இரா. முருகன் தொடர்பா சக்தி பார்த்திபன் கலாமோகன் கதைகளை ரவி, சுகன், நட்சத்திரன் செவ்விந்தியன் கவிதைகளை புனரமைக்க இரவியின் கதைகளை வாசித்துப் பார்க்கவேண்டும். மனித நேயமும் நோத்தியும் உலகளாவிய பார்வையும் கொண்ட கதைகளை 'அகதி உருவாகும் நேரம்' கருணாகரமூர்த்தியோடு சேர்த்து அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

பிரதேசவாதங்கள் அனுகுமுறைகள் தாண்டிய ஒரு பார்வை ஆரோக்கியமாக உருவாக வேண்டிய காலமிது. முருகனின் அவசரமான அவதானங்கள் எதிர்மறை விளைவை உருவாக்கிவிடக்கூடியவை. உற்சாகத்தை பரந்துபட்ட தேடல்களோடு இணைத்து அறிவு பூர்வமான அணுகுமுறையோடு வைத்துக் காணவேண்டிய நேரமிது. அவ்வகையில் முருகனின் அபிப்பிராயங்கள் சங்கடம் தரத்தக்கவை. மற்றபடி கண்ணனின் இடப்பெயர்தலை தொகுப்பு நியாயமாகவே பிரதிநிதித்துவம் செய்திருக்கிறது.

# புகலிட சட்டச் சிக்கல்களும் — விளக்கங்களும்

புகலிட நாடுகளில் எம்மக்கள் எதிர்கொள்ளும் புகலிட மொழி தொடர்பான பிரச்சினைகள் காரணமாக சில சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். தாம் வதியும் நாடுகளில் உள்ள தொழிலாளர் நல சட்ட விதிகள் என்பவற்றை கூட இவர்கள் சரிவர அறிந்து கொள்ளமுடியாமைக்கு இந்த மொழி தொடர்பான சிக்கல்கள் ஒரு முக்கிய காரணமாகவும் அமைந்துவிடுகின்றது.

எனவே இவ்வாறான நிலைமைகள் சமூக அக்கறைகொண்ட பலரினால் ஈழமுரசிற்குச் சுட்டிக்காட்டப்பட்டதுடன், இவை தொடர்பான விளக்கங்களை ஏன் ஈழமுரசு வழங்கக்கூடாது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. ஆகையால் இதனை நாடு வாரியான தொடராக பிரசுரிக்க ஈழமுரசு முடிவுசெய்துள்ளது. முதலில் சுவிற்சலாந்து நாட்டிலுள்ள புதிய விதிமுறைகள் பற்றிய விளக்கம் தொடராக வருகிறது.

## நேரம்

சிறிய மற்றும் பெரிய நிறுவனங்களுக்கிடையே, வேலை நேரங்களில் வேறுபாடுகள் உண்டு.

★ வருடம் முழுவதும் இயங்கும் வேலைத் தலங்களில், வருடம் ஐந்து வார விடுமுறை தரப்படுமாயின், வேலைநேரம் வாரமொன்றிற்கு 42 மணித்தியாலங்களாக இருக்கும்.

வருடமொன்றிற்கான விடுமுறை 4 வாரங்களாக இருப்பின் வேலை நேரம் வாரமொன்றிற்கு 41 மணித்தியாலங்களாக இருக்கும்.

★ சிறிய வேலைத்தலங்கள் மற்றும் வருடத்தில் 6 மாதங்கள் மட்டுமே இயங்கும், வேலைத் தலங்களில் வருடம் ஒன்றிற்கான விடுமுறை 5 வாரங்களாக இருப்பின், வேலைநேரம், வாரமொன்றிற்கு 45 மணித்தியாலங்களாக இருக்கும்.

வருடம் ஒன்றில் 4 வார விடுமுறை எனின், வேலைநேரம் வாரமொன்றிற்கு 44 மணித்தியாலங்களாக இருக்கும்.

வருடமொன்றிற்கான விடுமுறை, 4 வாரங்கள் என ஒப்பந்தம் செய்யப்படுமிடத்து, வேலை நேரம் வாரமொன்றிற்கு 41 மணித்தியாலயம் என்பதாகவும் வருடம் 6 மாதம் இயங்கும் வேலைத் தலங்களில் வாரமொன்றிற்கு 44 மணித்தியாலம் என்பதாகவும் செய்துகொள்ளப்படல் வேண்டும்.

இங்கே தமிழர் இல்லம் தரும் ஆலோசனை என்னவெனில் வாரமொன்றிற்கு 42 மணித்தியாலம் என ஒப்பந்தம் செய்துகொண்டால், வருடம் ஒன்றில் 5 வாரகால போதுமான ஓய்வினை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். வேலை நேரம், வாரமொன்றிற்கு, 41 மணித்தியாலங்களாக இருப்பின், மாதமொன்றிற்கு, 2.33 நாட்கள் வீதம், வருடம் ஒன்றில் 28 நாட்கள் விடுமுறை காலமாகும்.

சிறிய மற்றும் வருடமொன்றில் 6 மாதங்கள் இயங்கும், வேலைத்தலங்களில், முன்னரே குறிப்பிட்டதைப்போல, வாரமொன்றில் 45 மணித்தியாலங்கள் வேலைநேரமாயின், விடுமுறை காலம் 5 வாரகாலமாகவும், 44 மணித்தியாலங்கள் வேலைநேரமாயின் விடுமுறைகாலம் 4 வாரங்களாகவும் இருக்கும்.

## விசேடதின ஓய்வுநாட்கள்

வருடாந்தம் சம்பளத்துடன் கூடிய 6 கொண்டாட்ட தின ஓய்வுநாட்கள் வழங்கப்பட வேண்டும். இக்கொண்டாட்ட தினங்கள், வருடாந்த விடுமுறையின்போது வந்தாலும் வேறு தினங்களில், ஓய்வுநாள் பெற்றுக்கொள்ள அனுமதியுண்டு.

## சம்பளத்துடன் கூடிய ஓய்வுநாட்கள்

பின்வரும் காரணங்களுக்காக, சம்பளத்துடன் கூடிய ஓய்வுநாட்கள் பெற்றுக்கொள்ள தொழிலாளி ஒருவருக்கு உரிமையுண்டு.

★ சொந்தத் திருமணம் 3 நாட்கள்.
★ பெற்றோர், பிள்ளைகள், சகோதரர்கள் திருமணம் 1 நாள்.
★ குழந்தை பிறக்கும் நாள் 1 நாள்.
★ கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள், மாமா, மாமி, பேரன்/பேத்தி மரணமடைந்தால் 1—3 நாட்கள்.
★ இராணுவ ஆட்சேர்ப்பு, அல்லது சமூகசேவை 0,5 —1 நாள்.

## மேலதிக வேலை நேரம்

வேலை ஒப்பந்தத்தில் (Arbeits verrag) குறிப்பிட்டுள்ள வேலை நேரத்தை தவிர்த்து, மேலதிகமாக, செய்கின்ற வேலை நேரம், மேலதிக நேரமாகக் கணிக்கப்படும் இவ்வாறான மேலதிக நேரங்களுக்கு விடுமுறை அல்லது மேலதிக நேரத்திற்கான சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்.

வேலையில் இருந்து விலகுவதற்கு முன்பாக, கொடுப்பனவுகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

## நேர அட்டவணை

தொழிலாளர்களின் வேலை நேரங்கள், வேலை வழங்குனர்களினால், நேரப்பதிவுத் தாளில், பதிவு செய்யப்படல் வேண்டும். இவை மாதம் ஒருமுறை பார்வையிடப்பட்டு, தொழிலாளர்களின் கையொப்பத்துடன் உறுதி செய்யப்படல் வேண்டும்.

## ஓய்வு நாட்கள்

வாரம் இரண்டு நாட்கள் ஓய்வு வழங்கப்பட வேண்டும். குறைந்தது ஒரு முழுநாளும், இரண்டு தடவைகள் அரைநாட்களுமாக வழங்கப்படலாம்.

ஆனால், ஓய்வுநாட்கள், எப்பொழுதும் ஞாயிற்றுக்கிழமையாக இருப்பதற்கு அனுமதியில்லை. தேவையைக் கருதி சில தினங்கள் அவ்வாறு அமையலாம்.

## விடுமுறை (Ferien)

இது மேலே, வேலைநேரம் பகுதியில் குறிப்பிட்டுள்ளதைப்போல அமையும். அதாவது வாரமொன்றிற்கு 42 மணித்தியாலங்கள் வேலை நேரமாயின் விடுமுறை வருடமொன்றிற்கு ஐந்து வாரங்கள் ஆகும். அதாவது மாதமொன்றிற்கு 2.92 நாட்கள் வீதம் வருடம் 35 நாட்கள் விடுமுறையாக இருக்கும்.

★ வீடு மாறுதல்
உள்ளூருக்குள் ஆயின் 1 நாள்
வெளி மாவட்டம் ஆயின் 1.5 — 2 நாட்கள்
★ புதிய வேலை தேடுவதற்காக
[வேலையில் இருந்து விலகும் கடிதம் கொடுக்கப்பட்டிருந்தால்] 2 நாட்கள்

## விடுமுறை

தொழிற்பரீட்சை, மற்றும் அதற்கான தயாரிப்படுத்தலுக்காக, வருடமொன்றில் 3 நாட்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறை பெற்றுக் கொள்ள முடியும்.

விசேட உயர் நிலைப் பரீட்சை ஆயின் சம்பளத்துடன் கூடிய 6 நாள் விடுமுறை பெற்றுக் கொள்ள முடியும்.

## நேர அட்டவணை தயாரிப்பு

வருடம் முழுவதும் இயங்கும், வேலைத் தலங்கள் இரண்டு வாரங்களின் முன்னர், அடுத்து வரும் இரு வாரங்களுக்கான வேலைநேர அட்டவணையைத் தயாரிப்படுத்தல் வேண்டும்.

வருடத்தில் 6 மாதங்கள் இயங்கும், வேலைத் தலங்கள், ஒரு வாரத்தின் முன், அடுத்த வாரத்திற்கு வேலை நேர அட்டவணையைத் தயாரிப்படுத்தல் வேண்டும்.

## நேரக்கட்டுப்பாடு

வேலை செய்யும், வேலை மணித்தியாலங்கள், ஓய்வு நாட்கள், வருடாந்த விடுமுறை (Ferien) என்பவற்றை, வேலை வழங்குனர்கள், பதிவுப் புத்தகத்தில், குறித்து வைத்திருப்பது அவசியம். தேவையானபோது தொழிலாளிகள், அவற்றை பார்வையிட முடியும்.


(தொடரும்)


## கிடைக்கப்பெற்றோம்

### உனக்கு பிறகான நாட்களில்

கவிதைத் தொகுப்பு
ஆசிரியர்: பச்சியப்பன்
வெளியீடு:
29 கண்ணகி தெரு
மடிப்பாக்கம்
சென்னை 600 091




### பகத்சிங்கும் இந்திய அரசியலும்

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
வெளியீடு:
29 கண்ணகி தெரு
மடிப்பாக்கம்
சென்னை 600 091

### சித்திரை நெருப்பு

(பதிவு செய்யும் வாய்மொழி வரலாறு)
ஆசிரியர்:
எல்.இளையபெருமாள்
தொடர்புகளுக்கு: தலித்
அஞ்சல்பெட்டி எண் 11
நெய்வேலி 607 801







### தலித் 4

(மாத இதழ்)
வெளியீடு:
தலித்
அஞ்சல்பெட்டி எண் 11
நெய்வேலி -1
607 801





### கிருஷ்ணா பஞ்சாங்கக் கலண்டர் 1999

தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, டொச் ஆகிய நான்கு மொழிகளில் வெளிவந்துள்ளது.
தொடர்புகளுக்கு:
IMP KRISHNA
73, rue Doudeauville
75018 Paris



## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் ஊர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
தொலைபேசி: 0148050214
0613342518
0607348051
0148385825

# பிரெஞ்சுப் புரட்சி

## இரண்டாம் பகுதி: புரட்சி 1789ம் ஆண்டுப் புரட்சி

(சென்றவாரத் தொடர்ச்சி)

### பாஸ்டில் கோட்டைத் தகர்ப்பு

புரட்சி தொடரப் போகிறது. அத்துடன், வன்முறை புரட்சியோடு கலக்கப் போகிறது.

யாரால் இப்படியான நிலைமை மாறப்போகிறது? அரசரால் அவரை, அரசியும் அரச குடும்பத்தைச் சேர்ந்த சிலரும் ஆட்டிவைக்கிறார்கள்.

இவர்களிடையே, தேசிய அவையின் உறுப்பினர்களில் சிலர் அளவு மீறுகிறார்கள் என்ற கருத்து பரவியிருந்தது. இவர்கள் அந்த உறுப்பினர்களுக்கு பாரிசிலும், வெர்சயில்சிலும் மக்களிடையே பெரும் வரவேற்பு இருக்கிறது என்பதையும் உணர்ந்தார்கள். இவ்விரு பெரு நகர மக்களையும் பயமுறுத்த கட்டு மீறாமல் இருக்க, நாட்டின் வடக்கே இருந்த பட்டாளத்துச் சிப்பாய்களை இந்நகரங்களைச் சுற்றித் தங்க வைக்கிறார்கள்.

திடீர் என இப்படி இராணுவத்தினர் கூடாரங்களைப் பார்த்த மக்கள் பதட்டமடைகிறார்கள். ஏன்? எதற்கு? என்று கவலை கொள்கிறார்கள்.



பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ்

இப்படி இடம் மாற்றப்பட்ட வீரர்களில் வெளிநாட்டுக் கூலிப் படைகள் அதிகம். குறிப்பாக ஜேர்மன் நாட்டுக்காரரும் சுவிஸ் நாட்டுக்காரரும்.

இப்படி நாடு பதட்டம் அடைந்திருந்த நிலையில், மன்னர் வேறொரு துரதிருஷ்டவசமான முடிவையும் எடுக்கிறார். ஜூலை 11ல், மக்களின் அன்பைப் பெற்று வரும், நாட்டு நன்மைக்குச் சில அவசர மாறுதல்கள் வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவருமான நல்ல நிதி அமைச்சர் 'நெக்கரை' அவர் பதவி விலக்குகிறார்.

பாரிஸ் மக்களும், தேசிய அவை உறுப்பினர்களும், அரசர் தங்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்போகிறார் என்று அஞ்சுகின்றனர்.

மேலும் மக்கள் பசியால் வேறு வாடுகின்றனர். ஏழை எளிய மக்கள், ரொட்டி விலை ஏறுவதற்கு எதிராகக் குரல் கொடுக்கிறார்கள்.

நெக்கர் பதவி விலக்கப்பட்ட சேதி, பாரிஸ் மாந்தருக்கு ஜூலை 12 காலையில் கிடைக்கிறது. உடனே புரட்சி வெடிக்கிறது. திடீர்ப் பேச்சாளர்கள் மக்களுக்கு உற்சாகம் ஊட்டுகின்றனர்.

அன்றுமாலை, பிரெஞ்சு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் ஜேர்மானிய கைக் கூலிப் படைகளுக்கும் இடையே மோதல்கள் நிகழ்கின்றன. ஜெர்மனியத் தளபதி கடும்படி உத்தரவிடுகிறான் பிரெஞ்சு இரத்தம் ஓடுகிறது. அதுவரை முகாம்களில் இருந்து வந்த பிரெஞ்சுப் படை வீரர்கள் முகாம்களைவிட்டு நீங்கி, ஆயுதங்களுடன், ஆர்ப்பாட்டக்காரர்களுடன் சேர்ந்து கொள்கிறார்கள்.

மன்னரது கூலிப் பட்டாளங்களைச் சமாளிக்க, தலை நகரத்து மக்கள் ஆயுதந் தேடுகின்றனர்.

ஜூலை 13 இல், மிக முக்கியமான நிகழ்ச்சி ஒன்றும் இடம்பெறவில்லை.

ஜூலை 14ல் அதிகாலை 6 மணிக்கு, ஆர்ப்பாட்டக்காரர்கள் 32,000 துப்பாக்கிகளைக் கைப்பற்றுகின்றனர். மேலும், பாஸ்டில் (Bastille) கோட்டையில் ஆயுதம் பெறலாம் என்ற வதந்தி பரவி, அக் கோட்டை நோக்கி கூட்டம் போகிறது.

இந்தக்கோட்டை அப்போது அரசரின் எதேச்சாதிகாரத்துக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருந்தது என்பதை முன்பே பார்த்தோம். பெருங்கூட்டம் ஒன்று கோட்டையை முற்றுகை இடுவதுபோல் தோன்றவும், பிற்பகல் 1 1/2 மணி அளவில், பயங்கொண்ட கோட்டைக் காவலர்கள் ஐம்பது பேர் கூட்டத்தின் மீது சுட ஆரம்பிக்கிறார்கள்.

உடனே கோபங்கொண்ட கூட்டம் கோட்டையைத் தாக்குகிறது. பீரங்கியால் கோட்டைக் கதவுகளைத் தகர்க்கிறது. சிறிது, சிறிதாக, 10,000 பேர்கொண்ட நமது கூட்டம் கோட்டையை ஆக்கிரமிக்கிறது.

கோட்டைக் காவலர்கள் ஒன்று கொல்லப்படுகிறார்கள் அல்லது கைது ஆகிறார்கள். அச்சமயம், அக்கோட்டைக்குள் அரசரால் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஆறு பேரும் விடுவிக்கப்படுகிறார்கள்.

மக்கள்-தங்கள் கோபத்தை- கோட்டைக் காவலர் தலைவரிடம் காட்டுகிறார்கள். அவர் தலையை வெட்டி எடுத்து- அதனை ஒரு நீண்ட ஈட்டியில் சொருகி இரத்தஞ்சொட்ட, சொட்ட ஊர்வலம் விடுகிறார்கள்.

### சூடு தணிகிறது

பாஸ்டில் கோட்டை தகர்க்கப்பட்ட செய்தியும், அதன் பாதுகாப்புத் தலைவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட தகவலும் அரசருக்குக் கிடைக்கின்றன.

அவர் இரத்த ஆறு ஓடுவதை விரும்பாதவர். பாதுகாப்பு தலைவருக்கு நேர்ந்த முடிவு அவரைத் துடிக்கவைக்கிறது. இராணியார், படைகளை பாரிஸ் மக்கள் மீது ஏவிவிட்டு, அவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட விரும்புகிறார். இராணுவத் தலைவர்களும் அந்த அனுமதியைக் கேட்கிறார்கள். அரசர் அனுமதி கொடுக்க, திட்டவட்டமாக, மறுக்கிறார்.

மேலும், இராணுவ வீரர்கள் பலரும்- கட்டுப்பாட்டை மறந்து- ஆர்ப்பாட்டக்காரர்களுடன் சேர்ந்ததும், துப்பாக்கிகளைத் திருடியதும், கோட்டையைத் தாக்கியதும் அவருக்குக் கவலை தருகிறது.

ஆகவே, மக்களின் கோபத்தைத் தணிக்கும் வழி, வகைகளைத் தேடுகிறார். முதல் கட்டமாக ஜூலை 16-ல் 5 நாட்களுக்கு முன் பதவியில் இருந்து விரட்டிய நல்அமைச்சர் நெக்கரை மீண்டும் அழைத்து, பழைய பொறுப்புக்களைக் கொடுக்கிறார்.

இச்செய்தி மக்களுக்குக் களிப்பைக் கொடுக்கிறது. தங்கள் அரசர் நல்லவர்; ஆனால் அவரைக்கெட்ட ஆலோசகர்கள் சூழ்ந்திருக்கிறார்கள் என்று நம்புகிறார்கள்.

அரசர் நெக்கரை மீண்டும் பதவியில் அமர்த்தியதற்கு நன்றி தெரிவிக்க, அவரைத் தலைநகர் பாரிசுக்கு விஜயம் செய்யும்படி வேண்டுகிறார்கள்.

30-32 கி.மீ தூரத்தில், வெர்சயில்சில் வாழும் மன்னர் பாரிஸ் வரச் சம்மதிக்கிறார். அரசி அங்கு போகவேண்டாம் என்று கூறுகிறார் (அரசியின் எல்லா ஆலோசனைகளையும் அரசர் கேட்டு நடப்பதில்லை).

(தொடரும்)

# தென்னாசியாவின் அணுகுண்டு பரீட்சைகளும் - போட்டிகளும்



**கடந்த இதழில், உலகின் முதலாவது அணுக் குண்டினை உருவாக்குவதற்கு யார் யார் பங்களிப்புச் செய்தார்கள் என்பதைப் பார்த்தோம். இந்த இதழிலே ஒரு அணுக் குண்டு எவ்வாறு செய்யப் படுகின்றது என்பதன் விளக்கத்தைச் சுருக்கமாகப் பார்க்கலாம்.**

அணுக்குண்டு என்பது ஒரு சாதாரண பொருளல்ல. இதனை சாதாரண ஒரு ஆய்வுகூடத்திலோ அல்லது ஒதுக்குப்புறமாக இருக்கும் ஒரு அறையிலேயோ உருவாக்கிவிட முடியாது. அணுக்குண்டு ஒன்றினைத் தயாரிக்கும் சிக்கலான படிமுறைக்கு முகம் கொடுக்க வேண்டியவர்கள், முதலில் யுரேனியத்தைக் கொண்டிருத்தல்வேண்டும். அதுவும் கொஞ்ச அளவல்ல; மிக அதிகமாகவே யுரேனியத்தைக் கொண்டிருக்கவேண்டும். இவ்வாறாயின் ஓர் அணுக் குண்டானது, யுரேனியம் -235 அல்லது புளுத்தோனியம்-239 வகையில் தயாரிக்க ஏதுவாகலாம். ஓர் அணுக்குண்டொன்றைத் தயாரிப்பானது அசாதாரண கடினங்களையும் செலவினையும் உருவாக்கும். ஒரு நாடு அணுக் குண்டொன்றினைத் தயாரிக்கும் எண்ணத்தினைக்கொண்டிருந்தால் அதற்காக அது நூற்றுக்கணக்கான மில்லியன்கள் அல்லது



பேராசிரியர் இலகுப்பிள்ளை

மில்லியன்கள் பெறுமதியான அமெரிக்க டொலர்களை செலவழிக்கத் தயாராக இருத்தல்வேண்டும். பணம் செலவழிக்கத் தயாராக இருந்தாலும் அணுக்குண்டொன்றினைத் தயாரிக்கும் இலக்கு இலேசாக அடைந்துவிடக்கூடியதல்ல.

ஒருநாடு சிதைவுறக்கூடிய அணுக்கருவினைக் கொண்டிருக்குமானால், அது அணுக் குண்டுத் தயாரிப்பினை ஓரளவு இலேசாக்கிக்கொள்ளலாம். ஆரம்ப நிலையிலான அணுக்குண்டு ஒன்று இரு யுரேனிய கொள்ளளவுகளை ஒன்றுடன் ஒன்று மோதவிடும் பொழுது, பாரிய ஒரு சக்தி வெளிப்பாட்டினை வெளியிடப்படுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறான வகையைக்கொண்ட அணுக்குண்டுதான் ஜப்பானின் 'கிரோசிமா' நகரை அழிக்க பயன்படுத்தப்பட்டது. ஆனால் இம்முறையானது மிகவும் செயற்படாத தன்மையையும் கூடுதலாகக்கொண்டிருக்கும். பௌதீக கொள்கைகளின்படி பார்த்தால், இவ்வாறான குண்டொன்றினைத் தயாரிப்பதற்கு மிக அதிகளவான யுரேனியம்-235 தேவைப்படும். இவ்வாறான குண்டுகளில் மிகச் சிறிதளவான புளுத்தோனியம் 239 பயன்படுத்தப்படுகிறது. அதாவது ஆரம்ப சக்தி வெளிப்பாட்டிற்கே புளுத்தோனியம் 239 பயன்படுத்தப்படுகிறது. ஆரம்ப சக்தி வெளிப்பாட்டினை அடுத்து அதனைச் சுற்றியுள்ள அதிகளவான வெடித்தன்மை பொருந்திய இரசாயன நிலைகள் அமைக்கப்படும். அப்போதுதான் மிகப் பாரியளவான வெடிப்பொன்றினை பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் தற்பொழுது உள்ள நவீன அணு ஆயுதங்களில் வெடிப்பு நிலை மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. அணவில் சின்னதாயினும் சக்திவெளிப்பாட்டில் கூடுதலான வகையிலும் இவை தயாரிக்கப்படுகின்றன. சிறிதளவான திருத்தியம் இரசாயனப்பொருளைப் பயன்படுத்தி பாரியளவான வெடிப்பு இங்கே பெறப்படுகிறது. இவ்வகையான குண்டுகளில் ஐதரசனின் பிரயோகமானது வெடிப்பினை இன்னும் அதிக சக்தியுடையதாக்கும். ஆரம்ப நிலையில் தயாரிக்கப்பட்ட குண்டுகளில் யுரேனியம் 235 அல்லது புளுத்தோனியம் 239, ஆகியன நியூத்திரனோடு இணைந்து வெளிவிடப்படும் சங்கிலி விளைவுகளைக்கொண்டு உருவாக்கப்பட்டன. அதிகளவான குண்டுகளில் இவ்வாறான சக்திவெளிப்பாடானது ஒரு 'மிக்ரோ' விளாடிக்கும் இடைப்பட்ட நேரத்திற்கிடையில் உருவாக்கப்படக் கூடியதென்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக மூன்றாவது கேள்வியாக எந்தெந்த நாடுகள் அணுக்குண்டுகளை கொண்டிருக்கின்றன என்பதை சுருக்கமாகப் பார்த்து இந்தக் கேள்விகளுக்கான பகுதியை முடித்துக்கொள்வோம். உலகில் ஆக ஐந்தே ஐந்து நாடுகள்தான் பகிரங்கப் படுத்தப்பட்ட அணுக்குண்டுகளைக் கொண்டிருக்கின்றன. அவையாவன: அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா ஆகியவையாகும். ஆனால் இவற்றைவிட மூன்று நாடுகள் அணுக்குண்டினைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகியவையே அந் நாடுகளாகும். இந்தியாவும் பாகிஸ்தானும் கடந்தவருடம் மே மாதம் தமது அணுக் குண்டுப் பரிசோதனைகளைச் செய்தது. இக் கட்டத்தில் குறிப்பிடவேண்டியதொன்றாகும். இஸ்ரேல்நாடு, தன்னிடம் பல அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பதாகவும் கருதப்படுகிறது. 1993ம் ஆண்டு தென்னாபிரிக்காவும், தன்னிடம் 6 அணுக்குண்டுகள் இருந்ததாகவும் இரகசியமான முறையில் தயாரிக்கப்பட்ட இவை பின்னர் அழிக்கப்பட்டதாகவும் தெரிவித்தது. 1980 களின் போது ஈராக் நாடு அணுஆயுத செயற்திட்ட ஆவலைக்கொண்டிருந்தது. ஆனால் வளைகுடாப் போரின் பின்னர் தோன்றி ஐ.நா அழுத்தங்கள் காரணமாக இச் செயற்திட்டம் கைவிடப்பட்டதாக எண்ணப்படுகிறது. ஆசியாக் கண்டத்தினை எடுத்துக் கொண்டால் வடகொரியாவும் அணு ஆயுத செயற் திட்டத்தினைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. ஆனால் 1994ம் ஆண்டு அமெரிக்காவின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட ஒரு உடன்படிக்கை மூலம் இச் செயற் திட்டங்கள் இடை நிறுத்தப்பட்டதாகக் கருதப்படுகின்றது. அவ்வேளை வடகொரியாவிடம் இருந்த பாதுகாப்பற்ற அணு உலைகளுக்கு மேற்குலக நாடுகளின் பாதுகாப்பான உலைகளையொத்த வடிவம் கொடுப்பதற்கும் அமெரிக்கா இணங்கிக்கொண்டது. ஈராக் நாட்டிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக ஈரானும் ஆரம்பத்தில் அணு ஆயுத செயற்திட்டம் ஒன்றினைக் கொண்டிருந்தது. ஆனால் ஈரானிற்கு தற்பொழுதும் அணு ஆயுதக்களவு இருப்பதாக பலர் சுட்டிக் காட்டுவதுடன் எதிர்காலத்தில் ஈரானும் அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் நாடுகளின் வரிசையில் இணைந்துவிடும் எனவும் சுட்டிக்காட்டுகின்றார்கள். இத்துடன் கேள்வி பதில் பகுதி முடிவிற்கு கொண்டுவரப்படுகிறது.

**ஆரம்ப சக்தி வெளிப்பாட்டிற்கே புளுத்தோனியம் 239 பயன்படுத்தப்படுகிறது. ஆரம்ப சக்தி வெளிப்பாட்டினை அடுத்து அதனைச் சுற்றியுள்ள அதிகளவான வெடித்தன்மை பொருந்திய இரசாயன நிலைகள் அமைக்கப்படும்.**

மறு இதழில் பழைய தொடரினைத் தொடர்வோம்.

(வளரும்)

# 1ம் ஆண்டு நினைவு வணக்கம்



## லெப். தமிழினி

**இராமகிருஷ்ணன் றஜனி**

(அல்வாய் கிழக்கு – பருத்தித்துறை)

(கிளிநொச்சி சமரில் வீரச்சாவு)

ஜெயசிக்குறுவின் எல்லையை தகர்த்திட
கிளிநொச்சியில் புலியாக பாய்ந்தவள்....

எல்லைகள் முற்றாக தகர்க்கு முன்னர்
விழிமூடி தமிழ்மண்ணை அணைத்துக் கொண்டாய்....

'ஓயாத அலைகள் 2' உன் கனவை நனவாக்கியது
ஓயாத அலைகளாக உன் நினைவோ எம்மோடு.....

**இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து
போராளிகளுக்கும் எமது வீரவணக்கம்!**

**வீரப்பிறப்பு:**
**01.10.1976**

**வீரச்சாவு:**
**01.02.1998**

தகவல்:
குடும்பத்தினர்/உறவினர்கள்
வடமராட்சி இளைஞர்கள்

# 31-ம் நாள் அந்தியேட்டிக் கிரிகையும் நினைவஞ்சலியும்

## நீங்காத நினைவில்


நிலையில்லா வாழ்வில்
நிறைவான வாழ்வு கண்ட பெருந்தகையே
பொன் பொருள் தேடும் மாந்தருள்ளே
பொன்னான தமிழீழக் கனவு கண்ட பெருமகனே
எந்நாளும் எம்மை அன்பு வழி நடத்தி
நிகழ்கால வாழ்வின் யதார்த்தத்தினையும் உணர்த்தி...

அன்பொடு பண்பும் பாசமும் கொண்ட
வாழ்வே வாழ்வென அமைதியாய்க் கூறும் நீங்கள்
அமைதியாய்ப் போனதேனோ எமைப் பிரிந்து
எந்நாளும் எங்கள் இதயத்தில் இருந்து
நல்லொளி காட்டுங்கள் எமக்கெல்லாம் என்று!

**உங்கள் ஆத்ம சாந்திக்கு ஆண்டவனை வேண்டுகிறோம்.**

30.12.98-ல் எமது தந்தையாரின் மறைவை அறிந்து தொலைபேசி மூலமும் தொலைநகல் மூலமும் கடிதமூலமும் நேரிலும் ஆறுதல் கூறிய அனைவருடன், இறுதிக் கிரிகையின் போது வாகன உதவியுடன், சரீர, உதவியளித்த, தங்கள் அன்புக்குள் எம்மைக் கட்டுண்ண வைத்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தினர் சார்பான மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது தந்தையின் 31-ம் நாள் அந்தியேட்டிக்கிரியையும், நினைவஞ்சலியும் கீழ்வரும் முகவரியில் உள்ள இல்லத்தில் 29.01.99 அன்று மதியம் நடைபெறவுள்ளன. அன்புள்ளம் கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்று எமது தந்தையின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



**அமரர் உயர்திரு.**
**வைத்திலிங்கம் புலேந்திரன்**

**(தமிழீழம் வட்டுமேற்கு வட்டுக்கோட்டை
– டச்றோட் – சித்தன்கேணி)**

**மண்ணுலகில்:**
**05 – 04 – 1934**

**விண்ணுலகில்:**
**30 – 12 – 1998**

**பு. சுமந்திரன்**
06 GALLERIE SURGOUF, 93600 AULNAY SOUS BOIS.
RER - B (VILLPENTE) - Bus - 617 இரண்டாவது தரிப்பிடம்
Tel: 01 48 66 91 32

**தகவல்:–** மனைவி பு.செல்வப்பவோன், பிள்ளைகள் - பு. புவனேந்திரன் (நோர்வே), பு. கலியுகவரதன் (இலங்கை), பு.சுமந்திரன் (பிரான்ஸ்)




சுத்திச்சுத்தி சுப்பற்றை படலைக்கை எண்ட கணக்கா சொன்னதைத்தான் திரும்பத் திரும்ப சொல்ல வேண்டிக்கிடக்கு. மழை விட்டாலும் தூவானம் விடாத கதைதானே எங்கட கதை. சீதனம் எண்ட மரத்தை அடியோட வெட்டிடுங்கோ எண்டு சொன்னாப் போதும், தங்களுக்கு கொட்ட வேண்டினதைக் கொட்டினாத்தான் தாலியையே கையிலை எடுப்பம் எண்டு அடம் பிடிக்கிறவையை என்ன செய்யிறது? கேட்டால் நொண்டிக்குதிரைக்கு சறுக்கினது சாட்டா, வாங்காமல் செய்தால் கௌரவக் குறைச்சலாம்!

இவை இப்பிடியெண்டா மற்றப் பக்கத்தாலை வேறை மாதிரியெல்லோ இருக்குது. கிட்டடியிலைதான் அவை ரெண்டுபேரும் விரும்பிச் செய்தவை. விரும்பிச் செய்யிறதாலையோ என்னமோ மாப்பிள்ளை சீதனம் வேண்டாமெண்டு போட்டார். ஆனா பெண்ணைப் பெத்தவை மாப்பிள்ளை வாங்கினாத் கொடுக்காமல் விடுறது நாலு சகோதரத்தோட பிறந்தவள் சனங்கள். நாளைக்கு அவங்களை என்ன சொல்லும்(?) எண்டு சமுதாயத்துக்கு பயப்படுகினம். சரி இதைவிட்டுட்டு நாங்கள் விசயத்துக்கு வருவோமே.

முன்னம் மாப்பிள்ளைமாரின்ரை தகுதியின்ரை(?) அடிப்படையிலைதான் சீதனங்களை அள்ளிக் கொடுக்கிறவை. இப்ப அதுகள் பெரும்பாலும் பாக்கிறேலை(?) வெளிநாடெண்டா எத்தனை யிடத்திலை சீட்டுப் பிடிக்கிறார், எத்தனை இடத்திலை வட்டிக்கு விட்டிருக்கிறார், விசா(க்கள்) 'கனதியானதோ' எண்டுதான் பாக்கினம். இவருக்கு அதெல்லாம் 'ஓகே' ஆகிந்தான் பேசினது. தாலை பெடியள் எங்கினையும் அடிச்சாக்கொண்டா இருக்கிற வீட்டையும் ஆமிக்காரன் இடிச்செல்லோ தள்ளிப் போடுவான். ஆனபடியா வீட்டின்ரை பெறுமதியை கணக்கிலை எடுக்காம நிலத்துக்குத்தான் பெறுமதி பாப்போம் எண்டுபோட்டாராம். அவற்ரை பெறுமதி என்னெண்டு அவருக்குத் தெரியுமோ என்னமோ? அங்கை பிள்ளையள் தங்கட உயிரைக்குடுத்து போராடி நிலத்தை மீட்குங்கள். இவையள் இஞ்சை இருந்துகொண்டு 'றேற்றை' ஏத்தியிறக்குவினம். அதுகும் சீதன பேரத்திலை....! அண்ணன் என்ன ஆனா என்ன? திண்ணை காலியானச்சரி எண்டு நினைக்கிறதுகளுக்கும் இதுகளுக்கும் என்ன

# என்னைத் தாலாட்ட வருவாளோ... நல்ல சீ..தனம் கொண்டுவருவாளோ...?

விழுத்தினாலும், ஆணி வேருக்கு நீர் விட்டு அதை வளர்த்து வேர்விட்டு கிளை பரப்ப வைக்கிறதுக்கு இன்னும் தான் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறம். அன்பளிப்பெண்டு சொல்லித் தொடங்கி, எங்கட இனத்தையே அடிமைப்படுத்தி வைச்சிருக்கிற இந்த சீதனத்தை அழிச்சொழிக்கலாம் எண்டா... அதுக்கு எண்ணையூத்தி எரிய வைக்கிறதுக்குத்தானே முதலையும் மூர்க்கனும் கணக்கா முரண்டு பிடிச்சுக் கொண்டு நிக்கிறோம். ஆயிரக்கணக்கா தொடங்கினது, இண்டைக்கு இலட்சங்களை தாண்டி பல இலட்சக்கணக்கிலை வந்து எத்தனை ஆயிரம் பொம்பிளைப் பிள்ளையளை வாழ வழியில்லாம் முடக்கி வைச்சிருக்குது இந்த சீ..தனம்.

பேசிச் செய்யிறவைதான் சீதனத்தை எதிர்பாக்கிறதெண்டு சொல்லுறும். ஆனா இப்ப விரும்பிச் செய்யிறவையும்தான் ஏட்டிக்குப்போட்டியா கேட்டுக் கொண்டிருக்கினம். காதலிக்கிற வரைக்கும்தான் கண்ணே, மணியே, பூவே, பொட்டே... எண்டு நாலு கவிதையும் எழுதி, பத்தாட்டி சினிமாப்பாட்டிலை இருந்து நாலு வரியையும் சேத்து அன்பைப் பொழியிறது. ஆனா தாலி கட்டுறதுக்கு முதல் எங்கட அப்பா அம்மா நகை நட்டு, வீடு வளவு, காசு எல்லாம் தான் கட்டிக் கொடுப்பம் எண்டுபோட்டினம்! அவரும் ஒண்டும் செய்யேலாமல் கடைசியா வாங்கித்தான் செய்தவர். பெண்ணைப் பெத்தவையிட்டை கேட்டா, 'இப்ப விரும்பியிருக்கிற சுதியிலை வேண்டாமெண்டுதான் சொல்லுவினம்; அதுக்காக கொடுக்காம இருக்க முடியுமோ? நாளைக்கு குடும்பத்திலை குழப்பமெண்டு ஒண்டு வந்தா தங்கடை பிள்ளையைத்தானே குத்திக் காட்டுவினம்' எண்டுகினம். தாங்களும் பிள்ளைக்கெண்டு வாயை வயித்தைக்கட்டி சேத்து வைச்சிட்டு எப்பிடி ஆனா சீதனமெண்டு வரேக்கைதான் பிரச்சனையாப்போச்சு. யாழ்ப்பாணத்திலை இருக்கிற வீட்டோண்டுதான் சீதனமா கொடுக்க இருந்தவை. ஆனா அவருக்கு அதோட பெறுமதிதான் தேவைப்பட்டிருக்கு. நிலத்தைவிட்டாலும் வீட்டோடை பெறுமதி இப்பவும் பதினைஞ்சு இலட்சத்தை தாண்டும் எண்டு ஏற்றுக்கொண்டாலும், யாழ்ப்பாணம் புலியளின்ரை கட்டுப்பாட்டிலை இருக்கேக்கை தந்திருந்தால் அந்தப் பெறுமதியை ஏற்கலாம், இப்ப ஆமியின்ரை கட்டுப்பாட்டிலை இருக்கிற வேறுபாடு எண்டு நினைக்கிறியள்?

இன்னும் இன்னும் எங்கட இனத்தை அடிமைப்படுத்தி வைச்சிருக்கிற இந்த சீதனத்தை இந்த ஆண்டோடை பெண்டாலும் ஒழிச்சுப்போட்டு அடுத்த நூற்றாண்டிலை எண்டாலும் அன்புக்கும், புரிந்துணர்வுக்கும் வழிவிட்டு நாகரிகமுள்ள மனிசரா நுழைவம். அதுக்கு ஒட்டுமொத்தமா நாங்கள் தயாரானாத்தான் முடியும். எங்கட விடுதலைக்காகப் போராடி மண்ணோடை விதையாகிப் போன அந்த பிள்ளையளோட கனவுகளிலை எங்கட சமுதாய விடுதலையும் ஒண்டெண்டதை விளங்கிக்கொண்டா நாங்கள் இந்த 'ஆதிக்கத்தை' விட்டு வெளியேறுறது ஒண்டும் பெரிய விசயமில்லை.

எங்கட திருமண வியாபாரங்களை நிப்பாட்டி வளந்துவாற அடுத்த சமுதாயத்தை எண்டாலும் உதுகளிலை இருந்து விடுபட பெத்தவை வழிவிடுறதுதான், பிறக்கப்போகிற எங்கட மண்ணுக்கு, நாங்கள் இங்கை இருந்து கொண்டு செய்யக்கூடிய நல்லொரு காரியமாக இருக்கும் எண்டதுதான் என்ரை கருத்துங்கோ.

> இன்னும் இன்னும் எங்கட இனத்தை அடிமைப்படுத்தி வைச்சிருக்கிற இந்த சீதனத்தை இந்த ஆண்டோடை எண்டாலும் ஒழிச்சுப்போட்டு அடுத்த நூற்றாண்டிலை எண்டாலும் அன்புக்கும், புரிந்துணர்வுக்கும் வழிவிட்டு நாகரீகமுள்ள மனிசரா நுழைவம். அதுக்கு ஒட்டுமொத்தமா நாங்கள் தயாரானாத்தான் முடியும்.

**அருமைத்தம்பி**

10வது ஆண்டில் காலடிபதிக்கும்
இமாலயாவின்
தொடரும் சேவையில்.... மற்றுமோர் அறிமுகம்
100 இடியப்பம் 100 பிராங்குகள் மட்டுமே
உங்கள் இல்லங்களையும்; உங்கள் தொழிலகங்களையும் நோக்கிய எமது....
கடுகதி பார்சல் சேவை
பிரியாணி * கொத்துறொட்டி * இடியப்பப்பிரியாணி * தன்தூரி வகைகள் * நாண் * சீஸ்நாண் * சப்பாத்தி * சமூசா * றோல்ஸ் * சோறு – கறி
இவற்றை உங்களின் இல்லங்களில் இருந்தபடியே உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து உண்டு மகிழ்ந்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
தொலைபேசி: 01 42 06 03 50 / 01 42 03 06 51
றெஸ்ரோறன் இமாலயா
9, Rue Jacques Louvel Tessier, 75010 Paris (M°: Goncourt)

சாந்தினி உணவகம்
14, Rue Perdonnet, 75010 Paris.
Métro: La chappelle / Gare du Nord
Tel: 01 42 09 37 99
காலை – 9.00 மணி முதல் இரவு – 11.30 மணிவரை
உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு
காலை: இட்லி, அப்பம், இலங்கைத்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு
மதியம்: சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து, கொத்துறொட்டி, றொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.
இரவு: நீங்கள் விரும்பிய உணவு வகைகள் உண்டு
மகிழ்ந்திட நாடவேண்டியது
சாந்தினி உணவகம்
Pub

## சுவிசில்

# 'தோப்பான் தனிமரமே'

வங்கக் கடலில் இந்திய வல்லாதிக்கத்தின் சூழ்ச்சிக்கு இரையான மூத்த தளபதி கேணல் கிட்டுவினதும் 9 சக போராளிகளினதும் 6வது ஆண்டு எழுச்சி விழா 16.01.99 அன்று சுவிசின் லவுசான் நகரில் கொண்டாடப்பட்டது. பிற்பகல் 4.00 மணிக்கு கொடியேற்றத்துடன், அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு விழா ஆரம்பமானது. மணலாற்றுச் சமரில் வீரச்சாவான மாவீரர் கிரிசாந் கல்கத்தின் தகப்பனார் புதியவன் மார்க்கண்டு தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். காலத்தால் அழியாத காவிய நாயகர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபியில் மாவீரர் குடும்பத்தினரால் சுடரேற்றல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பொதுமக்கள் மலர் வணக்கம் செலுத்தினர். 'தோப்பான தனிமரமே' என்னும் தலைப்பில் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் இப் பத்து மாவீரர்களின் போராட்ட வாழ்வு எடுத்துரைக்கப்பட்டதுடன், இடையிடையில் புரட்சிகானங்களும் இசைக்கப்பட்டு வித்தியாசமான முறையில் ஒரு நிகழ்வை நடாத்தியிருந்தார்கள். கடந்த வருடம் நடைபெற்ற மாவீரர் நினைவான பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களில் ஒருவரான ஞானகுரு டெனிசன் 'ஒற்றுமையின் பலம்' பற்றி எடுத்துரைத்தான். பல நடன ஆசிரியைகளால் ஒழுங்கமைக்கப்பட்ட புரட்சி நடனங்களும் மேடையேறி போராட்டப் பாதையை சித்தரித்துக்காட்டின.

கூடியிருந்த பெருந்தொகையான மக்கள் மத்தியில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச செயற்பாட்டாளர் ஒருவர் தனதுரையில், முதல் முதலில் தமிழ்ப் பிரதேசத்தை எதிரியின் பிடியில் இருந்து விடுவித்து 1985-ம் ஆண்டு எங்கள் தமிழீழ விடுதலையை எடுத்துக்காட்டிய, பல துறைகளிலும் ஆளுமை கொண்ட தானைத் தளபதி கேணல்கிட்டு என்றும், எந்தவொரு ஆக்கிரமிப்புக்கும் வல்லாதிக்கத்திற்கும் அடிபணியாது சென்றுகொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எதிரியின் பிடியில் உள்ள எங்கள் பிரதேசங்களை வென்றெடுக்க வேண்டுமானால், மக்களின் துன்ப துயரம் நீங்கவேண்டுமானால், இழந்த பிரதேசங்களை மீட்டெடுக்க வேண்டுமானால் தளத்தில் உள்ள போராளிகளின் கரங்களை பலப்படுத்தவேண்டிய வரலாற்றுக் கடமையே ஒவ்வொரு புலம்பெயர் தமிழருடையது என்பதை மிகவும் உணர்ச்சிபூர்வமாகக் கூறினார்.

பொருண்மிய மேம்பாடு, கரும்புலிகள் வழி, புலம்பெயர் வாழ்வு, பெண்விடுதலை ஆகிய கரு அடங்கிய கவிதைகள் மூலம் கவியரங்கு நல்ல கருத்துகளை விதைத்தது. அடக்குமுறைக்குப் பயந்து ஒடுங்கக்கூடாது என்பதை சித்தரித்து 'ஆணிவேர்' எனும் நாடகம் இறுதியாக மேடையேறியது. அமைதியான கொடியிறக்கத்துடன் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' எனும் உறுதிமொழி வானைப்பிளக்க விழா அனைத்தும் இனிதே முடிவை எட்டின.

*சங்கையூர் குமார்.*

# புகலிட நிகழ்வுகள்

# இலண்டனில் கேணல்கிட்டு 6ம் ஆண்டு நினைவு எழுச்சி

வங்கக் கடலில் வீரகாவியமாகிவிட்ட விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல்கிட்டுவினதும் மற்றும் ஒன்பது போராளிகளினதும் நினைவு எழுச்சி நாள் 16.1.1999 அன்று லண்டனில் நடைபெற்றது. பல நூற்றுக்கணக்கான மக்கள் இவ்வெழுச்சிநாளில் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டனர்.

லெப். கேணல் பாமா, லெப் வெங்கடேஷ் ஆகியோரின் சகோதரர் திருசண்முகசுந்தரம் கிருபாகரன் அவர்கள் லெப். கேணல் மாதவியின் சகோதரியான திருமதி நீலாதேவி கிருபாகரன் அவர்கள் சகிதம் தமிழீழத்தின் தேசியக் கொடியை ஏற்றி, எழுச்சி நாள் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து தமிழீழ விடுதலைப் போரில் தமது இன்னுயிர்களை ஈகம் செய்த போராளிகளுக்கும் பொது மக்களுக்குமான அமைதி வணக்கம் இடம்பெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மேற்கு இலண்டன் பிராந்தியப் பிரதிநிதி நினைவுச் சுடர் ஏற்றி வைத்தார். இதனை அடுத்து, கேணல் கிட்டுவுக்கும் மற்றும் ஒன்பது மாவீரர்களுக்குமான மலர் வணக்கம் பொது மக்களால் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளில் சிறுமியர்களின் பேச்சுக்கள், மாணவ மாணவியரின் நாட்டிய நிகழ்வுகள், இன்னிசைக் கச்சேரி, நகைச்சுவைக் கதம்பம் மற்றும் தெருக்கூத்து என்பன இடம்பெற்றன.

தமிழர் கலைபண்பாட்டுக் கழக பிரித்தானிய பணியகத்தின் ஆரம்ப முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட தெருக்கூத்து வடிவம் கொண்ட, 'வரும்பகை முடிப்போம் வரலாறு படைப்போம்' எனும் நிகழ்வு பலரது பாராட்டையும் பெற்றது. வான்புலிகளாய் மேடையேறியவர்கள், மேடையிலிருந்து இறங்கிச் சென்று மண்டபத்தில் நிதி சேகரித்தமையும் மக்களும் தமிழீழ தேசஉணர்வு மிகுந்தவர்களாய் தங்கள் பங்களிப்புக்களை மனமுவந்து வழங்கிய காட்சியும் எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தது. இந் நிதி சேகரிப்பை ஊக்குவிக்கும் முகமாக பெயர் குறிப்பிட விரும்பாத தேசப்பற்றாளர் ஒருவர் 5000 பவுண்களை மனமுவந்து வழங்கினார்.

கேணல் கிட்டு நினைவு எழுச்சிநாளில் விடுதலைப் புலிகளின் பிரித்தானிய பணியகப் பிரதிநிதியின் விசேட உரை இடம்பெற்றது. அவர் தமது பேச்சில் லண்டன் வாழ் தமிழீழ மக்களின் பங்களிப்புகளில் முக்கியத்துவத்தைக் கூறியதோடு இந்த ஆண்டை வான்புலிகளின் ஆண்டாக எண்ணி எங்கள் நேரத்தையும் பணிகளையும் மற்றும் எம்மாலான மிக உச்ச பங்களிப்புக்களையும் உவந்தளிக்க முன்வர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இறுதியாக தமிழீழ தேசியக் கொடி இறக்கி வைக்கப்பட்டு 10.00 மணிக்கு நிகழ்வுகள் யாவும் நிறைவுபெற்றன.





விரைவில்....

Marketed & Distributed by


Ayngaran Limited
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
E-mail:
bhasky@aol.com

BHASKY












போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

# தமிழ்ச்சங்கத்தின் 4வது ஆண்டுவிழா

கடந்த 17.01.99 ஞாயிறன்று மாலை கார்ஜ்சார்சல் தமிழ்ச் சங்கத்தின் 4வது ஆண்டு நிறைவு விழா சார்சலில் நடைபெற்றது.

அமைதி வணக்கத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வுகள் தளபதி கேணல் கிட்டுவினதும் மற்றைய 9 போராளிகளினதும் நினைவைச் சுமந்து தொடங்கின. கிட்டண்ணாவையும் மற்றைய 9 மாவீரர்களையும் நினைவு கூர்ந்த பாடல்களுக்கான அபிநயங்கள். த.சோலை சிறுமி ஒருவரின் பேச்சு என்பவைகளுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துப்பணியகப் பொறுப்பாளரின் சிறப்புரையும் இடம்பெற்றது.

இந் நிகழ்வைத் தொடர்ந்து சார்சல் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழா, தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலுமான வரவேற்புரையுடன் ஆரம்பமானது.

பாடல்கள், பேச்சுக்கள், நடனங்கள், தாளலய நாடகம், நாடகம் என விரிந்த நிகழ்வுகளில் தமிழின் அளவிற்கு ஆங்கிலமும் ஆட்சி செலுத்தியதை அவதானிக்க முடிந்தது.

தலைமையுரையை தமிழ்ச் சங்க நிர்வாகி திரு. டக்ளஸ் அவர்கள் வழங்கினார்கள்.

இரண்டு மாணவிகள் ஆங்கிலப் பாடல் இரண்டினைப் பாடுவதாக அறிவிக்கப்பட்ட போதும், பின்னணியில் மிகப் பலமாக ஒலிபரப்பப்பட்ட பாடலுக்கு அவர்கள் வாயசைத்தது போன்ற தன்மையே தெரிந்தது. ஆனாலும் குழுவாகப் பாடிய சிறுவர்களும், குறிப்பாக 'டிட்டானிக்' பாடலைத் தனியாகப் பாடிய (பின்னணி இசை இருந்தாலும் கூட அவரின் குரல் கணீரெனக் கேட்டது) மாணவியும் பாராட்டுக்குரியவர்கள்.

ஆங்கிலப்பேச்சுக்கள் சிறப்பாக பிள்ளைகளின் உச்சரிப்புத் திறனை வெளிப்படுத்தின.

புஷ்பாஞ்சலி, வரவேற்பு நடனம், தனி நடனம், 'நவரசநாயகன்' நடனம், கோலாட்டம் என்பவற்றுடன், இளைஞர்களால் வழங்கப்பட்ட 'ரப்' நடனமும் இடம்பெற்றது.



சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சார்சல் நகர மேயர்

கோலாட்டம் ஆடிய மாணவிகளுக்கு பயிற்சி குறைவாயிருந்தது தெரிந்தது. 'ரப்' நடனம் நன்றாக இரசிக்கக்கூடியதாக இருந்தது. முன்னே நின்ற சிறுவனுக்குப் பாராட்டுக்கள்.

தமிழ்ச் சங்கம் நடாத்திய ஆண்டுவிழாவில் தமிழுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தமிழ் படிக்கும் மாணவர்களால் வழங்கப்பட்ட தாளலயநாடகம், சிறுவர் நாடகம், பேச்சுநடையில்லாமல் எழுத்து நடையில் அமைக்கப்பட்டிருந்தது. நாடகத்தினுள் எம்மை இழுத்துச் செல்லவில்லை. தாளலய நாடகம் எனக்குறிப்பிடப்பட்ட நிகழ்வு 'நாடகமே' அல்ல.

பாடசாலையில் பயிலும் மாணவர்களுக்கு வயதடிப்படையில் தமிழ், ஆங்கிலப் பரீட்சைகள் வைக்கப்பட்டு, முதல் மூன்று மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சார்சல் நகர மேயர் இப்பரிசில்களை வழங்கி உரையாற்றினார். பாடசாலையில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசுகள் திருமதி சிவதாசனால் வழங்கப்பட்டன.

M.J.C மண்டப நிர்வாகி திரு. சலோமி அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்.

நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுற்றன.

தமிழ்ச் சங்கத்தினால், வெளியிடப்பட்ட 'தமிழ்ச்சங்க மலர்' பலரது வாழ்த்துச் செய்திகளையும் சில மாணவர்களின் கைவண்ணத்திலான ஆக்கங்களையும் கொண்டிருந்தது.

- கரிகாலன்

# விடுதலைத் தீயின் 6வது ஆண்டு நினைவுநாள்

16.01.1999 சனிக்கிழமை அன்று டோட்முண்ட் நகரின் புனோரியான் தெருவில் அமைந்துள்ள புனோரியான் மண்டபத்தில் தளபதி கேணல் கிட்டு அவர்களதும், அவருடன் விடுதலைத் தீயாகி ஒளிர்ந்த மாவீரர்களதும் 6வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு, கலை நிகழ்ச்சிகளுடன் நினைவு கூரப்பட்டது. மாலை 5.00 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்ச்சி, அமைதி வணக்கத்தையடுத்து தியாக சொரூபங்களுக்கு சுடர் ஏற்றி, மலர்தூவி வார்த்தைகளால் அர்ச்சித்து ஆரம்பமானது. தளபதி கிட்டு அவர்களதும் அவருடன் வீரச்சாவைத் தழுவிய ஏனைய புனிதர்களதும் திருவுருவப் படங்கள் மேடையை நிறைக்க அவர்களது வீரப்போர் சரிதம் நினைவு கூரப்பட்டது.

ஜேர்மனி தழுவிய கேணல் கிட்டு நினைவு ஓவியப்போட்டி நடாத்தப்பட்டு தெரிவான பரிசிற்குரியவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன. ஜேர்மனிப் பணியகப் பொறுப்பாளர் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார். உமா, சித்ரா ஆகிய சிறுவர்கள் கிட்டு மாமா பற்றி ஒரு உரையாடலை சரித்திர நிகழ்வுகளினூடு நினைவுபடுத்தினர்.

கவிஞர் எலியாஸ்பிள்ளை அவர்கள் 'ஒன்று ரெண்டு ஒரு போதும் இருக்காது..' என்ற தலைப்பில் தாயக நினைவொன்றை, கிட்டு அண்ணாவின் வாழ்வோடு இணைத்தபடி, புலம் பெயர்வாழ்வின் உணர்வற்ற மக்களையும் இடறிவிட்ட ஒன்றிரண்டு உருப்படிகளையும் நகைச்சுவையோடு கவியாக்கிப் படித்தார்.

கலைபண்பாட்டுக் கழகத்தின் நடனக் கலைஞர்கள் 'விடுதலை நெருப்பு', 'சிந்திப்போமா..?' ஆகிய இரு நடனத் தொகுப்புக்களை வழங்கினர். வானதி தேசிங்குராஜா, சாவித்திரி இம்மானுவேல், பவித்திரா செல்வகாந்தன், அற்புதராணி கந்தசாமி ஆகியோர் அதனைச் சிறப்பாக வடிவமைத்திருந்தனர்.

தமிழீழத்தில் விடுதலையுணர்வு கொண்ட பாடல்களைப் பாடி தமிழீழ மக்களின் மனதை மட்டுமின்றி தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் புகழினைப் பெற்ற வர்ணராமேஸ்வ



ரன் அவர்கள் நீண்டதொரு தமிழிசைக் கச்சேரியை நடத்தினார். புகழ்பெற்ற பல பாடல்கள் காற்றில் மிதந்து அனைவரையும் பரவசத்தில் ஆழ்த்தின. நிகழ்ச்சித் தொகுப்பை கலைபண்பாட்டுக்கழக அறிவிப்பாளர்களான வலன்ரைன், பிறேமினி ரஞ்சித் ஆகியோர் வழங்கினர்.

கலைபண்பாட்டுக் கழக ஜேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் காசிலிங்கநாதன், 'அடிக்கடி ஒன்று கூடுவோம்! ஒற்றுமையாய் குரல் கொடுப்போம்! விடுதலை அலையை அணையாது காப்போம்! பங்களித்து விடிவு காண்போம்!' எனக் கூறி 'புலிகளின் தாகம்' என்ற தாரக மந்திரத்தைச் சொல்ல 'தமிழீழத் தாயகம்' என மக்கள் உச்சரிக்க நிகழ்வு நிறைவுற்றது.

# கேணல் கிட்டு நினைவு ஓவியப் போட்டி முடிவுகள்

[illegible] விடுதலை ஓவியம் தீட்டிய கேணல் கிட்டு அவர்களின் நினைவாக நடைபெற்ற ஓவியப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றோருக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிப் பணியக இணைப்பாளர் பரிசுகளை வழங்கினார்.

கீழ்ப்பிரிவு, நடுப்பிரிவு, மேற்பிரிவு அதிமேற் பிரிவு என நான்கு பிரிவுகளுக்காக நடைபெற்ற போட்டிகளில் மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ஆகிய பிரிவுகளில் பரிசுக்குரியவையாக ஓவியங்கள் எவையும் தெரிவு செய்யப்படவில்லை. இது மிகவும் வேதனைக்குரியது என்று ஓவியப் போட்டியை மேற்பார்வை செய்த கண்ணன் அவர்கள் குறிப்பிட்டார்.

நடைபெற்ற ஓவியப் போட்டியில் பரிசுபெற்றோர் விபரம் வருமாறு:

**கீழ்ப்பிரிவு:**

1. சாருகாந்த் சிறிதரன்
2. அபிலாசா தர்மசோதிராகன்
3. வசிதரன் மோகனராஜா

**நடுப்பிரிவு:**

1. பிரதிபா கயிலைநாதன்
2. தர்சி காங்கேயமூர்த்தி
3. அன்ரன் பிலிப் ஸ்ராலின்

பரிசளிப்பையடுத்து விடுதலை நெருப்பு, சிந்திப்போமா ஆகிய இரு நடனத் தொகுப்புகள் இடம்பெற்றன. இவற்றை தமிழீழ விடுதலைப்புலிகள் ஜேர்மனிப் பணியகக் கலைபண்பாட்டுக் கழகம் தயாரித்து வழங்கியது.

தமிழீழ விடுதலையை எடுத்துக்காட்டும் உணர்வு பூர்வமான நடனங்களை நடன மணிகள் சிறப்பாக வழங்கினர். மேற்படி கலைபண்பாட்டுக்கழக நடன ஆசிரியைகளான திருமதி வானதி தேசிங்குராஜா, திருமதி சாவித்திரி இம்மானுவேல், செல்வி. பவித்திரா செல்வகாந்தன், செல்வி அற்புதராணி கந்தசாமி ஆகியோர் தயாரித்துவழங்கினர்.

கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கவிஞர் எலியாஸ் பிள்ளையின் கவிதை தமிழீழத்தின் நிலைமை விளக்கிக்காட்டியது. மக்கள் படும் அவலங்களும் அதில் வெளிப்பட்டன. கேணல் கிட்டு பற்றிய உரையாடல் ஒன்றை செல்வி உமாசிறி விக்னேஸ்வரனும் செல்வன் சிறி விக்னேஸ்வரனும் நிகழ்த்தினர். சபையோரை அந்த உரையாடல் பெரிதும் கவர்ந்தது.

கேணல் கிட்டு நினைவுநாளில் திருவர்ணராமேஸ்வரனின் பாடல்களே முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெற்றன. அவரின் பாடல்களுக்கு திரு. பிரணவநாதன், திருசங்கர், திரு. செல்வநாயகம், திரு.சிவகுமரன், திரு. குமாரகுருபரன் ஆகியோர் பக்கவாத்தியங்களை வழங்கினர்.

# Ivry sur Seine தமிழ்ச்சோலையின் தைப்பொங்கல்விழா

தமிழ்ச்சோலையின் தைப் பொங்கல்விழா பாடசாலை மண்டபத்தில் கடந்த 16.01.1999 அன்று 15.30 மணிக்கு தமிழீழ விடுதலைக்காக இன்னுயிர் ஈந்த மாவீரர்களுக்கும், பொதுமக்களுக்கும் அமைதிவணக்கம் செலுத்தப்பட்ட பின்னர் ஆரம்பமாகியது. 94 பிராந்திய புலம்பெயர்வாழ்வுக் கழகப் பணியாளர் திருவைத்தி நடராஜா அவர்கள் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். செல்வி மீரா பாலகிருஷ்ணன் தேவாரம் பாடி விழாவைச் சிறப்பித்தார். அதைத் தொடர்ந்து பாடசாலை மாணவ, மாணவிகள் 'தையும் பிறந்தது அம்மா' எனும் பாடலை வழங்கிச் சிறப்பித்தனர். ஆசிரியை சோதிகலா திருநாவுக்கரசு மாணவர் வளர்ச்சி பற்றி சிறப்புரையாற்றினார். மாணவர்கள் 'தோ தோ நாய்க்குட்டி' பாட்டுப் பாடி மகிழ்வித்தனர். அடுத்து



செல்வி மயூரா சிவகுமார் 'கண்ணன் எங்கள் கண்ணன்' என்னும் பாடலுக்கு அபிநயம் வழங்கினார். தொடர்ந்து செல்வன்கள் பிரகாஷ்ராஜ் இராஜகோபால், மிதுலன் தயாளசிங்கம் ஆகியோர் 'குழப்படி மன்னர்கள்' நாடகம் வழங்கினர். திரு. சண்முகம் செல்வராஜா அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவுபெற்றது.

பாடசாலை முகவரி:
3 Allee du Parc
94200 Ivry sur Seine.

# ஜேர்மனியில் மூன்று தமிழாலயங்கள் இணைந்து நடாத்தும் பொங்கல் விழா

ஜேர்மன் உலகத் தமிழர் இயக்க கல்விப்பணியின் கீழ் இயங்கும் டியூரன், எர்க்லென்ஸ், கங்கெல்ட் ஆகிய மூன்று தமிழாலயங்களும் இணைந்து பொங்கல் விழாவை நடாத்தவுள்ளன. 31.01.99 சனியன்று பிற்பகல் 3 மணிக்கு Burger Halle, Broche Str-3, 52428 Julich, Broich மண்டபத்தில் இவ் விழா நடைபெறும்.

அமைதி வணக்கம், வரவேற்பு நடனம், வரவேற்புரை, கோபியர் நடனம், உழவர் பாடல், சிவன் சக்தி நடனம், சுதந்திரம் (ஓரங்க நாடகம்) 'பொங்கிடுமோ பொங்கல்' கவிதை, விநாடி வினாப்போட்டி நிகழ்ச்சி, 'குடும்பத்தின் ஆணிவேர் பணமா? பாசமா?' விவாத அரங்கு நாடகம், 'யாரும் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டால்', ஆகிய நிகழ்ச்சிகள் இவ் விழாவில் நடைபெறும். இவ் விழாவில் கலந்துகொள்ளுமாறு அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

— வி. ஆர். வரதராஜா

# விசாரணைக்கு உட்படும் சிறீலங்கா அணித்தலைவர்

கடந்த 23.01.99 அன்று நடை பெற்ற இங்கிலாந்துடனான ஒரு நாள் போட்டியில் மோதிய சிறீ லங்கா அணி நடந்துகொண்ட ஒழுங்கீனம் காரணமாக அவ் அணியின் தலைவர் அருச்சுனா ரணதுங்கா சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் (ICC) விசாரணைக்கு உட்படுகிறார். சிறீலங்கா அணியின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளி தரன் பந்துவீச்சில் குறை இருப் பதாகக்கூறி அதனை தகுதியற்ற பந்துவீச்சாக (No Ball) நடுவர்கள் தீர்மானித்ததால், மைதானத்தில் அருச்சுனா ரணதுங்காவுக்கும் நடுவர்களுக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டதோடு, தனது அணியை ஆடுகளத்திலி ருந்தும் விலக்கிக்கொண்டார் அருச்சுனா ரணதுங்கா. தொடர்ந்து போட்டி சம்பந்தப்படுத்தப் பட்ட பலரின் முயற்சியில் 12 நிமிட தாமதத்தின் பின்போட்டி நடந்தேறியது. விளையாட்டுக ளைப் பொறுத்தவரை நடுவர்க ளின் தீர்ப்பே இறுதியானது அந்த தீர்ப்புக்களில் குறைகள் குற்றங்கள் இருப்பின் அதனை சம்பந்தப்பட்டவர்களோடு தெரி வித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர மைதான ஒழுங்குமுறைகளை மீறி அநாக ரீகமான முறையில் நடந்து கொள்வது முறையல்ல. அன்று சிறீலங்கா அணி நடந்துகொண்ட விதம் சர்வதேச கிரிக்கெட் கட் டுப்பாட்டுச்சபைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. இதனை விசாரிப்பதற்கு அணித் தலைவர் அருச்சுனா ரணதுங்கா அழைக்கப்படுகிறார். உலக சம் பியன் என்று பெருமிதம் கொள் ளும் நாட்டவருக்கு இது புதிய அனுபவமாக அமையப் போகி றது.



# மெக்சிக்கோ போட்டி ஒன்றில் 18 மஞ்சள் அட்டைகள்

மெக்சிக்கோ நாட்டின் உள் ளூர் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டி ஒன் றில் இரு அணி வீரர்களுக்கும் 18 மஞ்சள் அட்டைகள் காட் டப்பட்டுள்ளன. தவறான விளை யாட்டு வழங்கப்படும் இவ் எச் சரிக்கையானது பெரும்பாலும் இதுபோன்ற பெரும் எண்ணிக் கையை எட்டுவதில்லை.

# 'அவுஸ்திரேலியன் ஓப்பன்' போக்குகள்




சென்ற 18.01.99 ஆரம்பமாகி மிக கோலாகலமாக மெல்போர்ன் நகரை ஆக்கிரமித்திருக்கும் 'அவுஸ்திரேலி யன் ஓப்பன்' போட்டிகள் வருகின்ற 31.01.99 முடி வுக்கு வருகிறது. ஆண்கள் போட்டிகளை பொறுத்த வரை முன்னிலையில் இருந்தவர் தோல்விய டைந்துவிட்டார்கள். குறிப்பாக மோயா, அகஸி, இவோன், ரப்டர் குறிப்பிடத்தக்கவர்கள். ஆனால் பெண் கள் போட்டிகளைப் பொறுத்தவரை முன்னணியா ளர்கள் களத்தில் இருக்கிறார்கள் ரவன்போட், ஹிங்கிஸ், செலஸ், கிராவ், வில்லியம்ஸ் கால் இறுதிப் போட்டிகளுக்கு காத்திருக்கிறார்கள். எனவே இம் முறை ஆண்கள் பிரிவில் புதிய ஒருவரே வெற்றியா ளராகவும் பெண்கள் பிரிவில் பிரபல்யமான ஒரு வீரே வெற்றியாளராகவும் வருவதற்கான சாத்தியங் கள் தென்படுகிறது. அடுத்த இதழில் விபரமான முடிவை பிரசுரிக்கின்றோம்.

# சுவிசில் கேணல்கிட்டு ஞாபகார்த்த உள்ளரங்க உதைபந்தாட்டப்போட்டி

வங்கக் கடலில் காவியமான தளபதி கேணல் கிட்டுவினதும் சக 9 போராளிகளினதும் 6ம் ஆண்டு ஞாபகார்த்தமாக சுவிஸ் சுக் மாநிலத்திலுள்ள பார் என் னும் நகரின் 17.01.99 இல் உள்ள ரங்க உதைபந்தாட்டப்போட்டி நடைபெற்றது.

காலை 8.30 மணிக்கு சுடரேற் றலுடன் ஆரம்பமான போட்டி களில் 19 விளையாட்டுக் கழகங் கள் பங்கெடுத்துக்கொண்டன. 4 குழுக்களாக பிரிக்கப்பட்டு நடைபெற்ற குழுத் தெரிவிலி ருந்து தலா இரு அணிகள் தெரிவு செய்யப்பட்டு கால் இறுதிப் போட்டியில் மோதிக்கொண் டன. தொடர்ந்து வெற்றிபெற்ற நாலு அணிகளான சுவிஸ் போஸ்- போர்ன், சிட்டி போஸ்-சூரிச், இளம்பறவைகள் அணி, லுசேர்ன், தாய்மண்விளையாட்டுக்கழகம்- சுக் ஆகியன அரையிறுதியில் மோதிக்கொண்டன. வெற்றி பெற்ற இளம்பறவைகள் அணி, தாய்மண் விளையாட்டுக்கழக அணி ஆகியன ஞாபகார்த்த கிண்ணத்தை கைப்பற்றும் இறு திப்போட்டியில் சந்தித்தபோ தும், இளம்பறவைகள் அணியி னர் மிகச்சுலபமாக 7:0 இல் வெற்றி பெற்றனர். சிறந்த விளை யாட்டு வீரனாக இளம் பறவை கள் அணியைச்சேர்ந்த ஜெய மும், சிறந்த பந்துகாப்பாளராக தாய்மண் விளையாட்டுக் கழகத் தைச் சேர்ந்த அசோக்கும் தெரிவு செய்யப்பட்டனர். மூன்றாம் இடத்தை சுவிஸ் போஸ் அணி யும் பெற்றுக்கொண்டது. பல நூற்றுக்கணக்கான மக்கள் மிக வும் ஆர்வமாக கண்டுகளித்த போட்டிகள் யாவும் பரிசளிப்பு டன் முடிவடைந்தது.

- பொன். தாமோதரம்

## கிரிக்கட்

1999ம் ஆண்டு கோடை காலத்தில் பிரித்தானியாவில் நடைபெற வுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்வார்க ளென எதிர்பார்க்கப்படும் வீரர்கள் சிலரை வாரத்திற்கு ஒருவர் வீதம் அறிமுகம் செய்யும் வரிசையில் அடுத்து வருபவர் இங்கிலாந்து அணியின் உதவித் தலைவர் நாசர் குசைன்.

### நாசர் குசைன் (Nasser Hussain)



பெயரை வைத்துப் பார்த்தால் இவர் ஒரு பாகிஸ்தான வீரர் என்று தோன்றலாம். நாசர் குசைன் பாகிஸ்தான வீரர் அல்லாவிட்டாலும், இந்தியத் துணைக்கண்டத்துடன் தொடர்புடையவரே. அதிலும் தமிழ்நாட்டின் தலைநகர் சென்னைக்கு உரித்தானவராயிற்றே.

1968 மார்ச் 28ம் திகதி சென்னையில் பிறந்த நாசர்குசைன் தன் வாழ்வின் மீதியை இங்கிலாந்துடன் இணைத்துக்கொண்டதனால் இங்கிலாந்துக்கு சொந்தக்காரனாகிவிட்டார். என்ன இருந்தாலும் பிறந்த மண்ணுக்கும் பெருமைதானே.

தனது 21-வது வயதில் மேற்கிந்திய தீவுகளுடனான டெஸ்ட் போட்டி ஒன்றில் 1989ம் ஆண்டு கிரிக்கட் உலகிற்கு அடியெடுத்துவைத்தார். இதுவரை 39 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 2449 ஓட்டங்களை குவித்திருக்கிறார். 7 சதங்களும் 10 அரைச்சதங்களும் பெற்றதோடு தனது அதிகூடிய ஓட்டமான 207 ஓட்டங்களை அவுஸ்திரேலியாவுக்கெதிராக பெற்றுக் கொண்டார். இறுதியாக நடந்து முடிந்த இங்கிலாந்து, அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து படுதோல்வியடைந்தாலும் கூட இங்கிலாந்தின் அதி கூடிய மொத்த ஓட்டங்களை (407 ஓட்டங்கள்) குவித்த பெருமை நாசர் குசைனுக்கே சேருகிறது. டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக ஆடும் நாசர் குசைன், இங்கிலாந்து A அணிக்கு தலைவராகவும் இருந்து அனுபவம் பெற்றிருக்கிறார். இந்த காரணங்களால் இங்கிலாந்து அணியின் உதவி தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தின் சம்பியன் பட்டத்தை பலமுறைபெற்ற எஸ் செக்ஸ் (Essex) கழகத்துக்காக ஆடும் குசைன், 1989ம் ஆண்டே பாகிஸ்தானுக்கெதிராக தேருகிணைப்போட்டித் தொடரில் தனது ஒருநாள் போட்டி நுழைவுக்கு தெரிவானாலும் பல சந்தர்ப்பங்களில் அணியில் இடம் கிடைக்காததால், 25க்கும் குறைவான போட்டிகளுக்கே முகம்கொடுத்தார். தனது அதிகூடிய ஒருநாள்போட்டி [illegible] ஓட்டமாக அண்மையில் 93 ஓட்டங்களைப் பெற்றதோடு வரவிருக்கும் உலகக்கிண்ண அணியில் இடம் பிடிப்பதற்காக பெரும் முயற்சிகளைச் செய்துவருகிறார்.



பலமுறை உலகக்கிண்ண இறுதிப் போட்டிவரை எட்டிப் பார்த்த இங்கிலாந்து இதுவரை வெற்றிக்கிண்ணம் பெறவில்லை. இம்முறை எப்படியாவது, அதிலும் தனது சொந்தநாட்டில் கோப்பையை வெல்வதற்காக கங்கணம் கட்டி நிற்கும் இங்கிலாந்து, ஒருநாள் போட்டிகளுக்காக மட்டும் ஒரு தனி அணியை உருவாக்கிவரும் இவ்வேளையில், நாசர்குசைனும் 30 வீரர்களும் ஒருவராகி இருக்கிறார். தற்போது அவுஸ்திரேலியாவில் நடை பெற்றுவரும் கார்ல்டன் அன் யுனைற்றட் தொடரில் (Carlton & United Series) இங்கிலாந்து பிரகாசித்து வருவதுடன், நாசர் குசைனின் ஆட்டமும் திருப்திகரமாக இருப்பதால் உலகக் கோப்பை அணியில் இடம்பெறும் சாத்தியக்கூறுகள் தென்படுகிறது. குசைன் ஒரு தடுப்பாட்டக்காரனாக இருப்பதால் அதற்கேற்ற முறையில் எதிர் அணி பந்து வீச்சாளர்களை புரிந்து ஆடவேண்டும். முன்னணி வீச்சாளர்களான டொனால்ட், சிறிநாத், கும்பிளே, வோர்ன் முரளி போன்றவர்களை கழகப் போட்டிகளில் எதிர்கொண்ட அனுபவம் குசைனுக்கு அதிகமே உண்டு. உலகக் கிண்ணத்தை இங்கிலாந்துக்கு குசைன் பெற்றுக் கொடுப்பாரா னால் இவரின் பிறந்தமண் சென்னைக்கும் பெருமை தேடிவரும்.

- பொன். தாமோதரம்


Restaurant **Royal Tandoori**

100 உணவுகளுக்கு மேல் ஓடர் செய்தால்

★ கொத்துரொட்டி, மரக்கறி உணவு-18FF


★ அசைவ உணவு, புரியாணி, இடியப்பம் [கறியுடன்]- 20 FF

★ ஞாயிற்றுக் கிழமைகளில் 50 பேருக்கு உட்பட்ட கொண்டாட்டத்திற்கு [மண்டபத்துடன்] ஒருவருக்கு 50 பிராங்குகள் மட்டுமே.

[சிற்றுண்டி, உணவு, குளிர்பானத்துடன்]


*Specialite Indienne*

*66, Rue du Fg. Poissonniere,*
*75010 Paris*
*Mo: Poissonniere / Cadet*
*Tel: 01 42 46 00 72 - Mobil: 0603532297*



## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 0.61 | 1.66 | 0.18 | 0.75 |
| பிராங்பேட் | 1.64 | – | 2.79 | 0.30 | 1.24 |
| லண்டன் | 0.59 | 0.35 | – | 0.11 | 0.44 |
| பாரிஸ் | 5.53 | 3.35 | 9.36 | – | 4.15 |
| சூரிச் | 1.32 | 0.81 | 2.28 | 0.24 | – |
| பம்பாய் | 42.60 | 25.88 | 70.71 | 7.57 | 32.12 |
| கொழும்பு | 68.15 | 41.41 | 113.12 | 12.33 | 51.39 |



(25.01.99)
ஈராக் பாஸ்ரா பிராந்தியத்தின் மீது இன்று அமெரிக்க யுத்த விமானங்கள் நடாத்திய தாக்குதலில் 11 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஈராக்கிய அரசு அறிவித்துள்ளது. இதேவேளை இக் குற்றச்சாட்டை அமெரிக்க இராணுவ நிர்வாகம் விசாரணை செய்வதாக அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

# தென்மராட்சி மேற்குக் கடலில் மீன் பிடிக்கத் தடை

யாழ்ப்பாணம் தென்மராட்சி கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடிப்பதற்கு சிறிலங்காப் படையினர் தடைவிதித்துள்ளனர். இக் கடற் பகுதியைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தென்மராட்சிப் பகுதிக்குள் ஊடுருவுவதாலேயே இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக படையினர் அறிவித்துள்ளனர். கடந்த வாரம் தனங்கிளப்புப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்ற மோதல் சம்பவம் ஒன்றினையடுத்து இத்தடை உத்தரவு அவசரமாக பிறப்பிக்கப்பட்டது. யாழ் கடற்பகுதி உட்பட குடாநாட்டின் கடற்பகுதிகளில் முன்னதாக மீன்பிடித் தடையை இராணுவம் அமுல்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகள் மீதான...

வது தேவையற்றது. மனித உரிமையை பாதுகாக்க நினைக்கும் அனைவரும் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு ஆதரவு தரவேண்டும். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமிழினத்தின் தலைவர் மட்டுமல்ல எனக்கு அவரொரு இளைய சகோதரன் எனக் குறிப்பிட்டார்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் பேசும் போது, 'மறைந்த பிரதமர் இந்திராவும், முதலமைச்சர் எம்.ஜி. ஆரும் இணைந்து ஈழத்தமிழர் பிரச்சினையில் காட்டிய அனுதாபமான அணுகுமுறையை இப்போதைய பிரதமர் வாஜ்பாயும், முதலமைச்சர் கருணாநிதியும் பின்பற்றுவதற்கு முன்வரவேண்டும் என்றும், மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஈழத் தமிழர்களின் உண்மையான இயக்கம் விடுதலைப் புலிகள் இயக்கம் என்பதையும், உண்மையான தலைவர் பிரபாகரன் என்பதையும் உணர்ந்து அவர்களுக்கு தேவையான சகல உதவிகளையும் செய்தார். அவர் செய்த அளவுக்கு வேறுயாரும் உதவி செய்துவிடவில்லை. என்பதையும் சுட்டிக்காட்டினார்.

தமிழக ராஷ்டிரிய ஜனதா தளக்கட்சியின் தலைவர் ஜெகவீரபாண்டியன், 'புலிகளின் மீதான தடையை உடனடியாக நீக்கவேண்டும். அதற்காக அனைவரும் ஒன்றுபட்டு போராட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### யுத்தளம்....

அமுல்படுத்தப்பட்ட இவ் ஊரடங்குச் சட்ட வேளையில் படையினர் ஊரடங்குவிதிகளை கடுமையாக நடைமுறைப்படுத்துவர் எனவும் அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர் சந்திரிகாவை சந்தித்து நடைபெற்ற தேர்தலை இரத்துச் செய்வது தொடர்பாக கலந்தாலோசனை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்ற தேர்தலை செல்லுபடியற்றதாக்கக் கோரி தேர்தல் கண்காணிப்புக் குழுவினரும், நவசமசமாஜக்கட்சி வாசுதேவ நாணயக்காராவும் கோரிக்கை விடுத்தது குறிப்பிடத்தக்கது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### யுத்தம் மூலம்....

அகோரமாக்குவதிலேயே சந்திரிகா முனைப்புக் கொண்டுள்ளார். தமிழ் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதாக பாசாங்குபண்ணும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு, தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்கு, ஐக்கிய தேசிய கட்சியே பொறுப்பு என கூறுவதன் மூலம் தமிழ் மக்களை ஏமாளிகள் என்று நினைக்கின்றது.

இந்தப் பிரச்சினையை உருவாக்கியதற்கும் பயங்கர யுத்த நிலையை உருவாக்கியதற்கும் ஐ.தே.கட்சியும், பொ.ஐ.முன்னணி அரசும் சமமான பொறுப்பாளிகள் என்பது யாவரும் அறிந்த விடயம் எனவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தேர்தல் முடிவுகள் பிற்போடப்பட்டுள்ளன

(26.01.99)

வடமேல் மாகாணத்தில் நடந்து முடிந்த தேர்தலில் பல்வேறு குளறுபடிகள் நடைபெற்றிருப்பதுடன் வாக்குச் சாவடிக்கு சென்று பொலிசாரைத் தாக்கிவிட்டு கள்ள வோட்டுக்களும் போடப்பட்டுள்ளதால், தேர்தல் முடிவுகளை உடனடியாக அறிவிக்க வேண்டாம் என தேர்தல் கண்காணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை இத் தேர்தலை செல்லுபடியற்றதாக்கும்படி பொ.ஐ.ஐ.மு.வும், ஐ.தே.க.வும் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகளின்.....

வித்துள்ளன. ஆனால் விடுதலைப் புலிகளுக்கு மருந்துப் பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்த கப்பல் ஏற்கனவே முல்லைத்தீவுப் பகுதிக்குள் வந்து அதனை இறக்கிவிட்டுச் சென்றுவிட்டதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ். நகரில்.....

ரிக்கு எதிராக வந்த இரு இளைஞர்கள் திடீரென இவர்கள் மீது தாக்குதலை நடாத்திவிட்டு தப்பிச்சென்றுவிட்டனர்.

அப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சதீஸ் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### முல்லையில்....

கூறப்படுகிறது. இதேவேளை முல்லைத்தீவுப் பகுதியில் வாந்திபேதி நோயின் தாக்கம் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

## 31வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 05.03.1966



மறைவு: 02.01.1999

### சுதர்சினி சுப்பிரமணியம் (சுதா)

புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சுதர்சினி (சுதா) சுப்பிரமணியம் 02.01.1999 அன்று பிரான்சில் காலமானார்.

இவர் சுப்பிரமணியம் - கனகேஸ்வரி தம்பதிகளின் புதல்வியும், சுகந்தினி (பிரான்ஸ்), சுதர்சன் (சிறிலங்கா), சுகிர்தன் (கனடா), சுகுணந்தன் (கனடா), சுகுணந்தினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாள்ஸ் (பிரான்ஸ்), யூலியன் (கனடா), ஆகியோரின் மைத்துனியும் (D)தயாள் (பிரான்ஸ்), (P)பிறிஸ்ரோன் (கனடா) ஆகியோரின் அன்புச் சித்தியும் ஆவார். அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் எமது துயரத்தில் பங்கு கொண்ட உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், 31.01.1999 ஞாயிறு அன்று 54, Place de Torcy (Métro: Marx Dormoy)ல் நடைபெறும். ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம்.


இங்ஙனம்
பெற்றோர், சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்
தொலைபேசி: 01 64 66 36 78 (பிரான்ஸ்)
06 15 26 86 52 (பிரான்ஸ்)

காயத்திரி
210, Rue du Fbg. St. Denis,
75010 Paris.
Tel: 01 42 09 22 43 - Fax: 01 46 07 09 34
அனைத்து மீன் வகைகளும் மரக்கறி வகைகளும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

KING Telecom
தமிழீழம்
இலங்கை
இந்தியா
Local 45 நிமிடம் N° Vert 32
King தொலைபேசி அட்டையை பாவிப்பதன் மூலம் தொலைபேசி அழைப்பில் 65% வரை சேமியுங்கள்
92, Rue de Bellville, 75020 Paris (M° :Pyrénées)
Tel.: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96
33, Place de Général de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tel:03 44 55 41 59 Fax: 03 44 55 42 51
www.kingtelecom.com.



# புலிகள் மீதான தடையை நீக்குக தமிழகத் தலைவர்கள் வேண்டுகோள்

(25.01.1999)

விடுதலைப் புலிகள் மீது இந்திய அரசு விதித்துள்ள தடையை விலக்கிக்கொள்ள வேண்டும் என பல்வேறு கட்சி தலைவர்களும் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மக்கள் நல உரிமைக் கழகத்தின் சார்பில் சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் ஜனவரி 23ம் திகதியன்று நடைபெற்ற விழாவில் இவ் வேண்டுகோள் விடப்பட்டது. எழுத்தாளர் தங்கநேயன் எழுதிய எம்ஜி. ஆரும் - ஈழத்தமிழரும் என்ற நூலும் இவ்விழாவில் வெளியிடப்பட்டது. இவ் விழாவிற்கு தலைமைதாங்கிய முன்னாள் தமிழக அமைச்சர் பண்ருட்டி எஸ்.இராமச்சந்திரன் பேசும் போது 'இந்திய தமிழக அரசியலில் தலையிடும் நோக்கம் விடுதலைப் புலிகளுக்கு எப்போதும் இருந்ததில்லை என விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பகிரங்கமாக அறிவித்த பிறகும் இந்தியாவில் அந்த இயக்கத்தின் மீது உள்ள தடையை நீடிப்பது துரதிர்ஷ்ட வசமானது. பிரபாகரன் எமது தலைவர். விடுதலைப் புலிகள் மீதுள்ள தடையை உடனடியாக நீக்குவதற்கு இந்திய அரசு முன்வரவேண்டும். மறைந்த முதலமைச்சர் எம்ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தபொழுது ஈழத் தமிழர்களுக்கு எப்படியெல்லாம் உதவினார் என்பதை உணர்ந்துபார்க்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கிவீரமணி பேசுகையில், 'தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என தமிழக அரசே அறிவித்திருக்கும் போது இந்தத் தடை தொடர்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# புத்தளம் – குருநாகலில் ஊரடங்கு

(25.01.99)

வடமேல் மகாணசபை தேர்தல் முடிவடைந்ததும் எழுந்த வன்முறைகளை அடுத்து குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இரவுநேர ஊரடங்குச் சட்டத்தினை சிறீலங்கா அரசு பிறப்பித்துள்ளது. நாளை (26.01.99) காலை ஒன்பது மணிவரை

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# முல்லையில் அல்லிக்கிழங்கு உணவாகும் அவலம் இருவர் மரணம்

(24.01.1999)

முல்லைத்தீவில் உள்ள முள்ளியவளை, மாவடிப்புலவு பகுதியில் குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக அல்லிக்கிழங்கினை உணவாக உட்கொண்ட இருவர் பரிதாபகரமாக மரணமாகியுள்ளனர். மேலும் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முரசுமோட்டை, பலிக்கல் குளம் பகுதியில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து மாவடிப்புலவு பகுதியில் வசித்து வந்த கட்டையா சின்னம்மா (40), சாந்தலிங்கம் ரேணுகா (18) ஆகியோரே மரணமடைந்தவர்களாவர்.

அல்லிக்கிழங்கின் , நச்சுத்தன்மை பரவிய காரணத்தால் இவர்கள் மரணமடைந்ததாகக்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# மேலும் ஆட்களை சேர்க்க கூலிக்குழுக்களுக்கு பணிப்பு

மட்டக்களப்பில் கூலிக் குழுக்களான ரெலோ, ஈபிஆர்எல்எவ், ராசிக்குழு ஆகியவற்றின் பொறுப்பாளர்களைச் சந்தித்த சிறீலங்கா இராணுவத் தளபதி புலிகளுக்கு எதிரான போரில் மேலும் பல தமிழ் இளைஞர்களை இணைத்துக்கொண்டிருக்கும்படி பணித்துள்ளார்.

இக் குழுக்களின் ராசிக், அன்வர் ஆகியோரை மட்டக்களப்பு 233-ம் படை பணி தலைமையகத்தில் சந்தித்த சிறிலால் வீர சூரியா விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு இராணுவ கட்டப்பாட்டு பகுதிக்குள் ஊடுருவாதவாறு பார்த்துக்கொள்வதற்கு ராசிக்குழு, ரெலோ குழு ஆகியவை இன்னும் அதிகமாக உதவிசெய்ய வேண்டுமெனவும் தெரிவித்துள்ளதுடன், எதிர்காலத்தில் மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் எதுவும் இருக்காதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# யாழ் நகரில் புளொட் 'சதீஸ்' சுட்டுக்கொலை

(24.01.99)

புளொட் குழுவின் யாழ். மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் என கருதப்படும் சதீஸ் என்பவர் இன்று மாலை 7 மணியளவில் யாழ். நகரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அவருடன் கூடச்சென்ற இன்னொரு புளொட் உறுப்பினர் படுகாயமடைந்துள்ளார்.

புளொட்டின் இராணுவப் பொறுப்பாளர் மாணிக்கதாசனின் நெருங்கிய சகா எனக் கருதப்படும் இவர் மாணிக்கதாசனால் யாழ். மாவட்டத்திற்கு இராணுவப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டவர். இவர் இன்னொரு புளொட் உறுப்பினருடன் ஆஸ்பத்திரி வீதியால் துவிச்சக்கர வண்டியில் (பாதுகாப்புக் கருதி) சென்றுகொண்டிருந்த வேளை ரொலெக்ஸ் பேக்க

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# புலிகளின் இரண்டாவது கப்பலும் வந்தது ?

விடுதலைப் புலிகளுக்கு மேலுமொரு ஆயுத தளவாட விநியோக கப்பல் வந்துகொண்டிருப்பதாக சிறீலங்கா புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரி


(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# யுத்தம் மூலம் தமிழரை பணியவைப்பதே சந்திரிகாவின் நோக்கம் *- நவ சமசமாஜகட்சி*

தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உருப்படியான எந்த அரசியல் திட்டமுமின்றி யுத்தத்தை மேலும் அகோரமாக்கி யுத்தத்தின் மூலம் தமிழர்களை அடிபணிய வைப்பதே சந்திரிகாவின் நோக்கமாகும். இவ்வாறு நவ சமசமாஜ கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1994ம் ஆண்டு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மக்கள் வழங்கிய மிகப்பெரிய ஆணையை மறந்துவிட்டு யுத்தத்தினை

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

பாரிஸ் லாசப்பலில்
தர்ஷனா உணவகம்

நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திடவும் அனைத்துவிதமான உணவு வகைகளையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்
23, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41